2823

T. N. L. A Debates

Official Report

Vol. 2 No. 2

Conns' ~~14~~ 1985

C

D
V211,31 N85
N85.2.2
136366

வெளியீடு 8-7-85] [Issued 8-7-85

3531/
2823

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 14, 1985 - தொகுதி II எண் 2
Thursday the 14th March 1985 - Volume II No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை; ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

D
Y211_31 N85
N85.2.2
136366
16-3-1985

## உள்ளடக்கம்

14-3-1985.


| | | |
|---|---|---|
| 1. | அறிவிப்புகள் ;— | |
| | (அ) முரசொலி பத்திரிகை தவறான செய்திகளை வெளியிடக் கூடாது என அறிவுறுத்தல். | 137—138 |
| | (ஆ) பேரவை அலுவல் | |
| 2. | கவன ஈர்ப்பு :— | |
| | விளவங்கோடு வட்டம், புத்தன் சந்தை குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப் பட்டும் அது செயல்படாமல் இருப்பது. | 138—140 |
| 3. | அரசினர் சட்ட முன்வடிவுகள்—: | |
| | (அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1985. | 140 |
| | (ஆ) பச்சையப்பா அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985 | 140—142 |
| | (இ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1985. | 142—144 |
| | (ஈ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1985. | 145—148 |
| | (உ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு 1985. | 148—151 |
| | (ஊ) மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1985. | 151—152 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 4. | ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம் | 153—273 |
| | திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன் | 155—161 |
| | திரு. இரா. முத்தையா | 161—175 |
| | திரு. டி. என். முருகானந்தம் | 175—180 |
| | திரு. எஸ். நாராயணன் | 180—188 |
| | திரு. அ. பிரணவநாதன் | 188—196 |
| | திரு. எல்ல இராசமாணிக்கம் | 197—202 |
| | திரு. எஸ். வேணுகோபால் | 202—210 |
| | திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் | 210—216 |
| | திரு. ஏ. பிரேம்குமார் | 216—222 |
| | திரு. வை. பாலசந்திரன் | 222—228 |
| | திரு. சா. ஞானசுந்தரம் | 228—235 |
| | திரு. கி. கிருஷ்ணமூர்த்தி | 235—243 |
| | திரு. வே. கு. சின்னசாமி | 246—254 |
| | திரு. ஆர். கோவிந்தசாமி | 255—260 |
| | திரு. கூடலூர் இ. வி. வேலு | 260—266 |
| | திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் | 266—273 |
| 5. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 273—274 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, மார்ச் 14, வியாழக்கிழமை

**பங்குனி 1, ரக்தாட்சி, திருவள்ளுவர் ஆண்டு 2016.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி. எச். பாண்டியன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்".

அறிய வேண்டியவற்றை அறிந்து நல்வழியில் அடங்கி ஒழுகப்பெற்றால் அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும்.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 1. அறிவிப்புகள்.

### (அ) முரசொலி பத்திரிகை தவறான செய்திகளை வெளியிடுவது குறித்து அறிவுறுத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று வினாக்கள்—விடைகள் இல்லை. அடுத்து, நேற்றை முன் தினம் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது குறித்து ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்பப்பட்டது. அது ஒழுங்குப் பிரச்சினையில் வராது என்று நான் தீர்ப்பு அளித்தேன்.

இந்தப் பிரச்சினையை வெளியிட்ட 'முரசொலி' பத்திரிகை, 'பதவியில் இருந்து ஓய்வுபெற்றவர் கையெழுத்திட்டு உறுப்பினர் அடையாள அட்டை தரலாமா' என்று தலைப்பிட்டு, உள்ளே செய்தியிலும் 'பதவியில் இல்லாத அவர் எப்படி பிப்ரவரி 25 ஆம் தேதியில் கையெழுத்திட்டார்" என்றும் நேற்று வெளியிட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [1985 மார்ச் 14

இந்த இரண்டுமே தவறான செய்தி. பேரவைச் செயலாளர் திரு. கி. மு. அழகர்சாமி அவர்கள் பதவியில் இருந்து ஓய்வு பெறவில்லை. அவர் பதவியில் இல்லாமலும் இல்லை. அவர் மருத்துவ விடுப்பில் இருக்கிறார். எனவே, பத்திரிகைகளில் இப்படிப்பட்ட தவறான செய்திகள் வெளியிடாமல் இருப்பது நலம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்".

## 2. கவன ஈர்ப்பு.

### விளவங்கோடு வட்டம், புத்தன்சந்தை குடிநீர்த் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டும் அது செயல்படாமல் இருப்பது.

* **திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு வட்டம், இடைக்கோடு பேரூராட்சியினுள் புத்தன் சந்தை குடிநீர் திட்டத்தின் பணிகள் குடிநீர் வடிகால் வாரியத்தினால் முடிக்கப்பட்டு, இடைக்கோடு பேரூராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும் செயல்படாமல் உள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இடைக்கோடு பேரூராட்சியின் புத்தன்சந்தை குடிநீர்த்திட்டம் நிறைவேற்றப் பெற்று 11—7—1984 அன்று பேரூராட்சியிடம் ஒப்படைக்கப் பெற்றது. 11—2—1985 வரை இத்திட்டம் பராமரிக்கப்பெற்று குடிநீர் வழங்கப்பெற்று வந்தது. 11—2—1985 அன்று இத்திட்டத்தின் ஆழ்துளை மோட்டாரில் உள்ள 'காயில்' எரிந்துவிட்டதால் குடிநீர் வழங்குவதில் தடை ஏற்பட்டது. பழுதை நீக்குவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பெற்று பணிகள் முடியும் நிலையில் உள்ளன. இன்னும் ஓரிரு நாட்களில் இத்திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்படும் என எதிர்பார்க்கப் பெறுகிறது.

இது போன்ற நிலையில் பழுது பார்ப்பதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்த்து, உடனே குடிநீர் வழங்குவதற்காக மாற்று மோட்டார் ஒன்றைப் பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



1985 மார்ச் 14]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த குடிநீர் வடிகால் வாரியம் அந்த வேலைகளை முடித்து விட்டதற்கு பிறகு இந்த மாதிரி குடிநீர் தொட்டிகளை, இயந்திரங்களை பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒப்படைக்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்து யூனியன்களிலே இவைகளை சரியாக பராமரிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாததன் காரணமாக அந்த இயந்திரங்கள் பழுதடைந்தால் கூட காலாகாலத்தில் பழுதுபார்க்கப்பட்டு குடிநீர் எந்த அளவுக்கு முக்கியமாக மக்களுக்கு வினியோகம் செய்யப்பட வேண்டுமோ அந்த முக்கியத்துவத்தை உணர்ந்து அதைச் செய்யாமல் மக்கள் அவதிப்படக்கூடிய நிலைமை ஏற்படுவதை தவிர்க்க உடனடியாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றி செய்து முடித்ததற்குப் பிறகு உள்ளாட்சி அமைப்புகளிடத்திலே அதை ஒப்படைக்க வேண்டும் என்ற வகையில் அரசு திட்டத்தை வகுத்து இருக்கிறது. ஒப்படைத்ததற்குப் பிறகு அதை முறையாகப் பராமரித்து குடிநீர் வழங்க வேண்டிய பொறுப்பு தொடர்புள்ள உள்ளாட்சி அமைப்புகளுடையது ஆகும். அந்தத் துறையிலே அந்தப் பணியை மேற்கொள்வதில் காலதாமதம் இல்லாமல் குடிநீர் மக்களுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதை அரசு கருத்தில் கொண்டு தாமதம் தவிர்க்க வேண்டும் என்று அறிவுரையை தொடர்புடைய அதிகாரிகளுக்கு எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் வழங்கும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் இந்த மாதிரி வேலைகளை கவனிப்பதற்கு பிளம்பர்கள் நியமனம் செய்யப்படாமல் இருப்பதால் தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. பி.டி.ஓ. அலுவலகத்திலே ஒரு எ. ஈ. போடப்பட்டு இருக்கிறார். பஞ்சாயத்து யூனியனிலே ஒரு டி.டி.ஓ.-வின் மூன்று நான்கு பஞ்சாயத்து யூனியன்கள் வருகின்றன. ஒரு பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்யக்கூடிய ஒரு எ. ஈ. தான் 4 பஞ்சாயத்து யூனியன் வேலைகளையும் கவனிக்க வேண்டிய நிலைமை

ஏற்படுவதால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு பிளம்பர் நியமனம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அரசு ஆராயும்.

## 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) பச்சையப்பா அறக்கட்டளை (மேலாண்மையை .. மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு பச்சையப்பா அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். காரணம் ஏற்கனவே இருந்த டிரஸ்டிகள் இப்போது இல்லாமல் எலெக்டட் பாடி கலைக்கப்பட்டு இந்த



அரசே பார்த்துப் போட்ட ஒரு குழுவிடம் தான் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. கடந்த கூட்டத்தொடரிலே கூட போடப்பட்ட குழுவின் நிர்வாகத்தின் கீழ் எப்படிப்பட்ட ஊழல்கள் நடந்தன என்று இந்த சட்டமன்றத்திலேயே பேசப்பட்டது. அதுவே தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எலெக்டட் பாடிக்கு வாய்ப்பு அளிக்காமல் அதிகாரிகளை வைத்து எக்ஸ்டன்ஷன் வாங்கிக்கொண்டே போவது நல்லதல்ல. ஏன் எலெக்டட் பாடியில் நம்பிக்கை இல்லை இந்த சர்க்காருக்கு. அது தான் எனக்கு சந்தேகம். டிரஸ்டிகள் வந்தால் அவர்கள் சிறு தவறு செய்தால் அதை ஊழல் என்றும் நிர்வாகம் பெரும் ஊழல் செய்தால் அதை நிர்வாகக் கோளாறு என்றும் இந்த அரசு கருதுகிறது. எனவே இந்தச் சட்டத்தை கொண்டு வருவதன் மூலம் ஊழலுக்கு அதிகமாக நீங்கள் இடம் தருகிறீர்கள். கடந்த கூட்டத்தொடரிலேயே பயங்கரமான ஊழல்கள் அதிகாரிகள் நிர்வாகத்தில் நடைபெற்றது என்று குற்றம் சாட்டப் பட்டது. இந்த மசோதாவை கொண்டு வருவதால் உங்களுக்கு என்ன ஆதாயம். ஆகவே உடனடியாக தேர்தலை கொண்டு வந்து டிரஸ்டிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காகத்தான் அறிமுக நிலையிலே இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவானது, அரசினுடைய பொறுப்பிலே அரசால் நியமிக்கப்பட்டிருக்கிற அதிகாரிகளின் பொறுப்பிலே அந்த பச்சையப்பன் அறக்கட்டளை இருக்க வேண்டும் என்று தான் இந்த மசோதாவை கொண்டு வருகிறோம். இந்த அரசுக்கு நிரந்தரமாக இப்படியே இருக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆகவே, நல்ல முறையில் தேர்தலை நடத்தி டிரஸ்டிகளிடம் தரவேண்டும் என்றுதான் இந்த அரசு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் பயங்கரமான ஊழல்கள் நடைபெற்றது என்று சொல்லுவது ஆதாரமற்ற குற்றச்சாட்டு ஆகும். ஏதாவது ஆதாரம் இருந்து சொல்வார்களானால்—டிரஸ்டிகள் இருக்கிறபோது செய்வதை விட இப்போது நாம் மிக சுலபமாக ஊழல்களை களைவதற்கு வசதியும் இருக்கிறது. ஆகவே ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுகளை சுமத்தி அதிகாரிகள் மீது அவதூறான முறையில் குற்றம் சாட்ட முயற்சி செய்வதை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1985 ஆம் ஆண்டு பச்சையப்பா அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(இ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1985.**

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. ப. பொன்னுரங்கம்.** இதை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். என்ன காரணம் என்றால் இப்போது யார் யாரோ செய்ய வேண்டிய வேலையை அமைச்சர் அவர்கள் செய்கிறார்கள். நான் நேற்று கூட பத்திரிகையில் பார்த்தேன். அமைச்சர் அவர்கள் மாநகராட்சியில் மனுக்களைப் பெறுகிறாராம். எங்களுடைய எம்.பி. திரு. கலாநிதி அவர்கள் கூட மனு தந்திருக்கிறார். கொசுத் தொல்லை சென்னையில் அதிகமாக இருக்கிறது என்று. யாருடைய வேலை இது. கவுன்சிலர்கள் தான் இப்படி மனுக்களை வாங்க வேண்டும். கவுன்சிலர்கள் தேர்ந்தெடுப்பதை விட்டுவிட்டு நீங்கள் போய் வாங்கிக் கொண்டு இருந்தால் உங்கள் வேலையை யார் செய்வார்கள்? உங்கள் வேலை என்ன ஆவது. நீங்கள் யார். நான் யார் அந்த மனுக்களை வாங்குவதற்கு. அங்கே ஒரு





(முற்பகல் 9.10)

எலக்டெட் பாடி வேண்டுமல்லவா? அந்தத் தேர்தலைத் தள்ளி வைத்துக் கொண்டே வருவதுதான் நம்முடைய வேலையா? அதற்கு ஒரு மந்திரியா? எனவே, இந்தச் சட்டம் மிகவும் மோசமான சட்டம். ஒவ்வொரு தடவையும் ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். முதன் முதலில் மஸ்டர் ரோல் பற்றிய காரணத்தைச் சொன்னார்கள். பிறகு வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். பிறகு 18 வயது ஏஜ் லிமிட்டேஷன் என்று சொன்னார்கள். இப்பொழுது ஒன்றைப் பிடித்திருக்கிறார்கள். ஏதாவது ஒரு ரீசனைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ரிசர்வேஷனைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். பிறகு யாராவது கோர்ட்டிற்குப் போய்விட்டால் கேஸ் இருக்கிறது என்று சொல்வது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைப் பற்றியெல்லாம் கன்சிடரேஷன் ஸ்டேஜில் பேசலாம்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** இதேபோல தள்ளிக்கொண்டே வந்து கொண்டிருக்கிறார்கள். ரிசர்வேஷனைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒன்றைத் தெரிவித்தார்கள். அதாவது, ரிசர்வேஷனையொட்டி யாராவது வழக்கு மன்றத்திற்குப் போனால், முன்பிருந்த முறைப்படி தேர்தல் நடத்தப்படும் என்று சொன்னார்கள். தேர்தல் தேதி கூட நிர்ணயிக்கப்பட்டது; கவர்னர்ஸ் அட்ரஸில் கூடச் சொன்னார்கள். ஆனால் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிச் சொல்லி தள்ளி வைத்துக் கொண்டே வருகிறீர்கள். இப்பொழுது அட்டையைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ஐடென்டிபிகேஷன் கார்டுகளைக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். அட்டை கொடுப்பதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும்? அதற்காகப் ஃபாரினுக்குப் போக வேண்டுமா? போட்டோவுடனோ அல்லது போட்டோ இல்லாமலோ நீங்கள் தேர்தலை நடத்தலாமே. சென்னை நகரம் நாற்றமடித்துக் கிடக்கின்றது; கொசுத் தொல்லை தாங்க முடியவில்லை. ஆகவே, இந்தச் சட்டத்தை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

*** திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை இப்பொழுது ஏற்றுக்கொள்ளக் கூடாது; பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று

(திரு. வி. பி. சிந்தன்) [1985 மார்ச் 14

ஆட்சேபணையை நான் தெரியப்படுத்துகின்றேன். சென்னை நகரத்தினுடைய நிலைமைகளை அவைத் தலைவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள் என்ற காரணத்தினால் நான் அதைப் பற்றி விளக்கமாகச் சொல்லவில்லை. ரோடுகள் பராமரிக்கப் படவில்லை; விளக்குகள் எரியவில்லை; குடிதண்ணீர்ப் பிரச்னை மோசமாக இருக்கிறது; நிர்வாகத் தரப்பில் மிகப் பெரிய சீர்கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் சீர்படுத்துகின்ற முறையிலே, அதன் முதல் நடவடிக்கையாகத் தேர்தலை நடத்தி, ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பை ஏற்படுத்திய பிறகு இந்த பில்லைக் கொண்டு வருவதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மெஜாரிட்டி கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்றபொழுது அந்த வாய்ப்பை விட்டு விடாதீர்கள் என்று சிபாரிசாகச் சொல்லி, இந்தத் தீர்மானத்தை இப்பொழுது ஒத்துக்கொள்ளக் கூடாது என்று வலியுறுத்துகின்றேன்.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக ஸ்டேஜிலேயே நான் எதிர்க்கிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால், மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்களால் நிர்வாகம் செய்யப்படுகின்ற முறைகளை இது தடுப்பதால் இதைத் துவக்கக் கட்டத்திலேயே கடுமையாக நான் ஆட்சேபிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

*** மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



1985 மார்ச் 14]

## (ஈ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1985.

*** மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. ப. பொன்னுரங்கம்:** நான் டிஸ்-அப்ரூவல் மோஷன் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்வுக்கு வரும்போது தான் எடுத்துக் கொள்ளப்படும்.

*** திரு. கு. ரமணி:** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த கோவை மாநகராட்சிக்கு 12—6—1981 ஆம் தேதியிலிருந்து மூன்று வருஷ காலத்திற்குள் தேர்தலை நடத்தி கவுன்சிலை அமைக்க வேண்டுமென்று ஏற்கனவே செய்யப்பட்டுள்ள முடிவான சட்டமாகும். ஆனால் அதைத் தாண்டி மறுபடியும் 12—10—1984-லே ஒரு அவசரச் சட்டம் போட்டு, பிறகு இதே சட்ட மன்றத்தில் பேசி மறுபடியும் சட்டமாக்க முயற்சி செய்து, பிறகு சட்டசபை கலைக்கப்பட்டதன் விளைவாக, கவுன்சில் கலைக்கப்பட்டதன் விளைவாக அது நிறைவேற்றப்பெற முடியாமற் போய்விட்டது. அவசரச் சட்டமானது 1984 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் தேதிக்குப் பிறகு ஒரு வருஷத்திற்கு நீடிப்பது என்று பிறப்பிக்கப்பட்டது. அப்படியானால் இந்த வருஷம் மறுபடியும் அதை நீட்டித்து, இந்த வருஷக் கடைசி வரைக்கும் இதற்கு அவகாசம் கேட்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையானது, ஏற்கனவே சட்டப்படி நிறைவேற்றப்பட்டது போல மூன்றாண்டுக் காலத்திற்குள்ளே தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லுகின்ற நிலையைத் தடுப்பதாகும். ஒரு ஜனநாயக முறையைத் துவக்கி வைத்து, மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற கவுன்சிலை வைத்து நிர்வாகம் செய்ய இயலாமற் போய் விடுகின்றது. ஏராளமான பணத்தைச் செலவழித்து, பல்வேறு

[திரு. [illegible]] [1985 மார்ச் 14

திட்டங்களை உருவாக்குவதில் மக்களுக்கு நம்பிக்கையும் போதிய வசதிகளும் கிடைக்காமல் இன்றைக்குக் கடுமையான எதிர்ப்பு இருக்கிறது.

இன்றைக்குச் சொல்லப்படும் காரணம் என்னவென்றால் ஃபோட்டோ கார்டுகளை ஓட்டர்களுக்குக் கொடுத்து, அதன் பிறகு தேர்தலை நடத்த வேண்டுமென்ற நிலை இதிலே கூறப்படுகின்றது. பார்லிமெண்டுக்கும் தேர்தல் நடக்கின்றது; சட்டசபைக்கும் தேர்தல் நடக்கின்றது. ஆகவே அதிலே எல்லாம் இந்த ஃபோட்டோ சிஸ்டம் வந்து தேர்தல் நடத்தப்படுவதைக் காணவில்லை. 7 வருஷத்திற்குள்ளாக மூன்று தடவை சட்டமன்றத்திற்கும் பார்லிமெண்டிற்கும் தேர்தல் நடந்துவிட்டது. ஆனால் இந்த உள்ளாட்சித் தேர்தல்கள் 10 வருஷத்திற்கு ஒரு தடவை கூட நடக்கவில்லை. . . (குறுக்கீடு). . . . அப்படி நடைபெறாமல் இருப்பதற்கு என்ன காரணம்? இப்படி ஜனநாயக முறைப்படி நடத்தப்பட வேண்டிய தேர்தல்களை எல்லாம் நடத்தாமல் தடை போடக் கூடிய சட்டங்களை இங்கே கொண்டு வந்து திரும்பத் திரும்ப நிறைவேற்றுவது தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைக்கு நல்லதல்ல. அதனால்தான் இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன். எனவே இதை அமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்க வேண்டும்; தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கூறிக்கொண்டு இதை நான் எதிர்க்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். இந்த மாநகராட்சி, மேயரையே பார்க்காத ஒரு கார்ப்பரேஷனாக இருக்கின்றது. இதுவரை ஒருவர் கூட மேயராக இருந்தது கிடையாது. ஃபாரினர்ஸ் யாராவது வந்தால் அவர்களை வரவேற்க மேயர் இருக்கிறாரா என்றால் மேயரே கிடையாது என்று சொல்கிற மாதிரிதான் இருக்கின்றது. ஆகவே, இந்தக் கார்ப்பரேஷன் தேர்தலைப் பொறுத்தவரையிலும் ஒரு [illegible] தான் ரீசன். பெக்யூலியராக இருக்கின்றது. இந்த பில், ஆர்டினன்ஸ் ஆகியவற்றைத் தாக்கல் செய்யும்போது என்ன ஆகி இருக்கின்றது? ஸ்பெஷல் ஆபீஸர் எதுவரை இருக்கலாம் என்றால் 11—6—1984 வரையில் இருக்கலாம். அப்படி என்றால் போன 11—6—1984 தான் ஆர்டினன்ஸ் வரவேண்டும். ஆனால் எப்போது



1985 மார்ச் 14] [திரு. ப. பொன்னுரங்கம்]

போடுகிறார்கள்? 19—11—1984 அன்று போடுகிறார்கள். கேட்டால் அப்போது மந்திரி சபை இல்லை என்று சொல்வார்கள். ஆனால் போட்ட ஆர்டினன்ஸ்க்கு எப்போது எஃபக்ட் தருகிறார்கள் தெரியுமா?

Previous Act valid upto 11-6-1984. It shall be deemed to have come into force on the 30th May 1984.

ஏன்? பதில் சொல்லட்டும் அமைச்சர்களாக இருப்பவர்கள். 11—6—1984 வரை சட்டம் இருக்கும்போது அந்தச் சட்டத்தை மீறி ஏன் ஆர்டினன்ஸ் கொண்டுவர வேண்டும்? அதையொட்டி ஏன் பில் கொண்டுவர வேண்டும். இந்தத் தப்பு ஏன்? ஆகவே இந்தக் கோளாறுகள் இருப்பது நல்லதல்ல. ஆகவே இதனை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சித் திருத்தச் சட்ட முன்வடிவை ஆரம்பத்திலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது 3 ஆவது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வந்து விட்டார்கள். நமது ஆளும் கட்சியும் மூன்று தடவை மக்கள் அதற்குப் பெருவாரியான வாக்கு அளித்ததன் காரணத்தால் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் கிராமங்கள் பூராவும் உள்ள நிலைமைகள் பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். சாலைப் போக்குவரத்து, மின்சாரம், போன்றவற்றைப் பொறுத்தவரையில் எல்லாம் பெருத்த சீரழிவு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நிலையில் ஒரு பெரிய மெஜாரிட்டியை தமிழ் நாட்டு மக்கள் உங்களுக்குக் கொடுத்திருக்கக் கூடிய இந்த நேரத்தில் பஞ்சாயத்துத் தேர்தல்களையும், உள்ளாட்சித் தேர்தல்களையும் இந்தத் தடவை அறிவிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். அப்படி எதிர்பார்த்த தமிழ் நாட்டு மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அவர்களை மீண்டும் ஏமாற்றக் கூடிய அளவுக்கு இப்போது இந்தச் சட்ட முன்வடிவு வந்திருப்பது நல்லதல்ல. எனவே இந்தத் தடவையாவது இந்தச் சட்ட முன்வடிவு அடுத்து விவாதத்திற்கு வருவதற்கு முன்பாக தேர்தலைக் கண்டிப்பாக அறிவிக்க வேண்டும் என்று தமிழ் நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்கள் மீது நம்பிக்கையுள்ள ஒரு ஆட்சி வந்ததற்குப் பிறகு இப்படி ஏமாற்றுவது நல்லதல்ல

என்று சொல்லி இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்து உடனடியாகத் தேர்தலுக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

* **மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது நான் விளக்கமான உரையை நிகழ்த்துகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1985-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

* **மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கின்றது.

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்)
**திருத்தச் சட்ட முன்வடிவு 1985.**

* **மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பின்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1985-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதனை ஆண்டாண்டுக்கு ரொட்டீனாக எடுத்துக் கொண்டு வருவதுதான் வேலையாக இருக்கின்றது. இந்த ஸ்பெஷல் ஆஃபீஸர் எக்ஸ்டென்ஷன் என்பது தொடர்ந்து வந்து





கொண்டிருக்கின்றது. எல்லாவற்றிற்கும் தேர்தல் நடைபெறுவது மாதிரி முனிசிபாலிட்டிக்கும் தேர்தலை நடத்திவிட்டால் என்ன? எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னார்கள். லைட் இல்லை, தண்ணீர் வசதி இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். எலக்டட் பாடி வேண்டும் என்றாலே அதிலே உங்களுக்கு ஏன் நம்பிக்கை இல்லாமல் இருக்கின்றது? இப்போது கூட நீங்கள் நிறைய ஜெயித்திருக்கிறீர்கள். ஆகவே இப்போது நின்றாலும் நீங்கள் வந்துவிடுவீர்கள். ஆகவே அதற்காகவாவது அந்தத் தேர்தலை நடத்துங்கள் என்று கேட்டு இந்தச் சட்டத்தை நான் எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1976-க்குப் பிறகு தமிழகத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றங்கள் இல்லை என்பதும் அதன் விளைவாக இன்று மக்களுடைய பல பிரச்னைகள், முனிசிப்பல் கவுன்சில்களால் தீர்க்கப்பட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதும் அனைவரும் நன்கு அறிந்த விஷயம். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூட ஆளுநர் உரைமேல் பேசுகின்ற நேரத்தில் நகராட்சிகள் எப்படி இருக்கின்றன, என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்கள் கூட குறிப்பிட்ட சில அதிகாரிகள், சில விஷயங்களைச் சரியான முறையில் கவனிக்காத நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமை தமிழகத்திலே நீடித்துக் கொண்டு வருவது சரியல்ல. இந்த எக்ஸ்டன்ஷன் சட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூட ஏற்றுக்கொள்ளவில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தை இன்று வாபஸ் பெற்று, உடனடியாக தேர்தல் வைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். 30 ஜுன் 1985 வரை அவர்களது காலத்தை நீட்டிக்க வேண்டிய அவசியம் இல்லை. உடனடியாகத் தேர்தல் வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கையை எடுப்பதாக உறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டு, இதை இன்ட்ரொடியூஸ் பண்ணுவதிலிருந்து வாபஸ் பெற வேண்டுமென்று அமைச்சர் அவர்களையும் அரசையும் கேட்டுக் கொள்கிறேன்.

[1985 மார்ச் 14

**திரு. கு. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாமன்றத்தில் விவாதத்தில் இருக்கிற கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டிருக்கிற அரசாங்கத்தினுடைய கொள்கை நிலைக்கு விரோதமான முறையில் இந்தச் சட்ட முன்வடிவு இங்கே அறிமுகப்படுத்தப்படுகிறது என்று நான் கருதுகின்றேன். மக்களோடு நிர்வாகத்தை நெருக்கமாகக் கொண்டு செல்லவேண்டுமென்ற கருத்து, அந்தக் கருத்தோடு இந்த அரசு இருக்குமானால் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவை வாபஸ் பெற வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். ஏனென்றால் தேர்வு செய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தாலே அதிகாரிகள் தங்கள் இஷ்டத்திற்குத் தர்பார் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆளுகிற கட்சியும் சரி, இந்த மாமன்றத்திலே உறுப்பினர்களாக உள்ள ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் சரி, கவர்னர் உரையின்மீது நடைபெற்ற விவாதத்திலே சொல்லிய விஷயம், எந்த நகரத்திலும் சுகாதாரம் சரியாக இல்லை, நகர நிர்வாகம் முழுமையாக, தூய்மையாக இல்லை என்பதாகும். இந்த நிலையில் மக்களுக்கு ஜனநாயக அமைப்பின்மீதே அவமதிப்பை ஏற்படுத்துகிற இந்தச் சட்ட முன்வடிவை உள்ளாட்சித் துறை அமைச்சர் வாபஸ் பெறவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

**திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்ட முன்வடிவை வாபஸ் பெற வேண்டுமென்று முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுதே தனி அதிகாரிகள் எங்கள் மாவட்டத்திலே, எங்கள் ஊர்களிலே கிடையாது. எங்கள் மாவட்டத்திலே 6 முனிசிபாலிட்டிகளிலே 5 முனிசிபாலிட்டிகளிலே ஆணையர்கள் கிடையாது. இதையே நீங்கள் இப்படி வைத்திருக்கும்போது, இன்னும் ஒரு வருஷம் கொடுத்தால், அதிகாரிகளை எப்படி நிரப்பப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகவே, உடனடியாக உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை, தலைவர்களை அங்கு கொண்டு வந்தால், மக்களுக்கு நன்மை செய்ய அவர்கள் பாடுபடுவார்கள். அனைத்து நகரங்களிலும் சுகாதார வசதிக் குறைவாக இருக்கிறது. அதிகாரிகள் அரசை அணுகப் பயப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருந்தால் அரசை அணுகி மக்களுக்கான திட்டங்களை அவர்கள் அரசிடம் கூறுவார்கள். ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவை நீங்கள் வாபஸ் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

“1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஊ) மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1985.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

“1985-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.”

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். இதற்கு ஒரு தனி காரணம் இருக்கிறது. நீங்கள் சொல்கிற காரணம் இது அட்டை என்பது. ஆனால் நான் சொல்கிற காரணம் வேறு. மற்ற மாநகராட்சிகளிலே தனி அதிகாரிகளைப் போடுகிறோம். ஆனால், தனி அதிகாரியைத் தனியாகப் போடவில்லை. மதுரை கலெக்டரிடமே இந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்வீர்கள், 1971 வது ஆண்டைய சட்டத்தின்படி மதுரை கலெக்டரிடம் பிக்ஸ் செய்கிறோம் என்று. அவர் கலெக்டர் வேலையைப் பார்க்க வேண்டும். அந்த வேலையோடு கூடுதலாக மேயர் வேலையையும் பார், கமிட்டி வேலையையும் பார் என்று அவரிடம் கொடுத்தால், அவரும் மனிதன்தான். ஆகவே, அந்த மனிதாபிமான அடிப்படையிலே பார்த்து ஒருவரிடமே

இரண்டு பொறுப்பைக் கொடுக்கிறோம், அது கூடாது, அதற்கு அட்டை காரணம் காட்டக் கூடாது. இதை உணர்ந்து இந்தச் சட்ட முன்வடிவை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டு இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்பத்திலேயே, அறிமுக நிலையிலேயே வாபஸ் வாங்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். காரணம், ஏற்கனவே உறுப்பினர்கள் சொன்னார்கள். குறிப்பாக, அத்தி பூத்ததைப் போல், இந்த ஆட்சி வந்ததற்குப் பின் ஒரே ஒரு முறை மதுரை மாநகராட்சித் தேர்தல் நடந்தது. சென்ற ஆண்டு வரையிலும் மதுரை மாநகராட்சி மேயர் பொறுப்பில் இருந்தது. இப்பொழுது, அந்தப் பொறுப்பு தனி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு சட்டம் கொண்டுவந்தபோது சொன்ன ஓராண்டு காரணத்தையே, இப்போதும் கூறப்படுகிறது. இதற்கு குறிப்பிடப்படுகின்ற காரணம், அடையாள அட்டை மட்டும் தான் என்று சொல்லப்படுகிறது. அடையாள சீட்டு இல்லை என்று கூறும் காரணம், எந்தவகையிலும் பொருத்தமல்ல ; நியாயமல்ல. எனவே, நகரத்திலே வாழக் கூடிய மக்களுக்கு நாம் நன்மையை வழங்குவதாக இருக்காது. எனவே, இந்தச் சட்டத்தை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்யும்போதே கடுமையாக எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1985-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



## 4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் —(தொடர்ச்சி.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் மொழியப்பெற்று, வழிமொழியப் பெறவேண்டும்.

**திரு. கு. ரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

(1) மத்திய மாநில உறவுகளில் மேலும் அதிக அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கிடைப்பதற்கான நடவடிக்கைகள்.

(2) மாநிலத்தில் அதிக அளவில் ஏற்பட்டிருக்கும் மின் வெட்டை தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள்.

(3) மாநிலத்தில் பல பஞ்சாலைகள் நீண்ட நாட்களாக மூடிக்கிடப்பதும், மூலப்பொருட்கள் தட்டுப்பாட்டினால் ஏரான மான சிறுதொழில்கள் செயல்படாமல் இருப்பதும் குறித்து தக்க நடவடிக்கைகள்.

(4) கைத்தறித் தொழிலில் துணி தேக்கத்தினால் பெரும் நெருக்கடி ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலை இழந்துள்ளதைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம்.

(5) விவசாய தொழிலாளர்களுக்கும், ஏழை விவசாயிகளுக் கும் நிலம் பகிர்ந்தளிக்க தகுந்த சட்டம் இயற்றவேண்டியது.

(6) விவசாயக் கூலி தொழிலாளிகளுக்கு வாழ்க்கைக்குப் போதுமான குறைந்தபட்சக் கூலி உத்தரவாதம் செய்வதற்கான ஏற்பாடுகள்.

(7) அதிகரித்து வரும் போலீஸ் அடக்குமுறையும், அதனால் வழக்கறிஞர்கள், தொழிலாளிகள் போன்ற பல்வேறு பகுதி மக்க ளுக்கு ஏற்பட்டு வரும் பாதுகாப்பற்ற நிலையை போக்குவதற்கு உள்ள நடவடிக்கைகள்.

(8) சத்துணவு மையங்களில் முறையான கண்காணிப்பு செலுத்த சர்வகட்சி கமிட்டிகள் அமைக்கப்படாமல் இருப்பது.

(9) அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்திற்கும் பெரு மளவு விலைவாசிகள் ஏறிக் கொண்டிருப்பதைத் தடுக்க உறுதி யான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது.

[திரு. கு. ராமணி] [1985 மார்ச் 14

(10) நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் லஞ்சம், ஊழல்கள் அதிகரித்து வருவதைத் தடுக்க உறுதியான நடவடிக்கை.

(11) அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் உள்ள பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒரே மாதிரியான வேலை நிலைமைகளும், சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்பட வேண்டிய அவசியம்.

(12) மாணவர்களுக்கு காலாகாலத்தில் கொடுக்கப்பட வேண்டிய உதவித் தொகை, பாட நூல்கள், மற்ற படிப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டிய அவசியம்.

(13) விவசாயிகள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு நியாய விலை கிடைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள்.

(14) இந்த ஆண்டு போதிய மழை இல்லாததன் காரணமாக வறட்சி ஏற்பட்டு பல பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டு வருவது.

(15) பெருகிவரும் வேலை இல்லா திண்டாட்டத்தைத் தடுக்கவும், வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்த, பொதுத் தொழில்கள் ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியம்.

—ஆகியவை பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. பொ. உத்திராபதி:** நான் இத்திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**THIRU T. VENKATA REDDY**: Mr. Speaker, I move the following amendment:

"Add at the end the following:

'but regret to note that no mention is made about :—'

(1) Establishment of Hosur Cattle Breeding Complex in Dharmapuri District.

(2) Need for the construction of Kalavarapalli Dam in Dharmapuri District."

**THIRU N. S. V. CHITHAN**: I second the amendment.



1985 மார்ச் 14]

**திரு. டி. என். முருகானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"Add at the end the following:

'but regret to note that no mention is made about :—'

(1) Solution to be adopted to the ethnic problem in Sri Lanka.

(2) Need to press Central Government to provide an alternate shipping service to "M. V. Chidambaram" from Madras to Singapore.".

**திரு. சி. பழனிமுத்து:** நான் இத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

* **திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த போடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என் வெற்றிக்காக அயராது பாடுபட்ட காங்கிரஸ், அகில இந்திய அண்ணா தி.மு.க. மற்றும் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் ஊழியர்களுக்கும் என் நன்றியைச் சொல்லி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையின்கீழ் இயங்கும் இந்த அரசின் எதிர்கால திட்டங்கள் பற்றி கூறியுள்ள மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது பேச நான் விழைகிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள், அனுதாப அலைகளினாலே நீங்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். அந்த அலைகளிலே இருந்து தப்பி வந்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். எங்களுடைய திட்டங்களுக்கும், கொள்கைகளுக்கும் கிடைத்த வெற்றியே ஒழிய, அனுதாப அலையின் போரால் எங்களுக்குக் கிடைத்த வெற்றியில்லை என்று சொல்லி, நாங்கள் வாக்குகளை சேகரிக்கும்போதும், நீங்கள் வாக்குகளைச் சேகரிக்கும்போதும் கேட்டுக்கொண்ட வித்தியாசங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் செருப்பைச் சொல்லி வாக்குகளைக் கேட்டீர்கள்; நாங்கள் திட்டங்களைச் சொல்லி வாக்குகளைச் சேகரித்தோம். நீங்கள் தாய்களைச் சொல்லி வாக்குகளைச் சேகரித்தீர்கள். நாங்கள் நாட்டின்

[திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்] [1985 மார்ச் 14

(முற்பகல் 9-30)

நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி வாக்குகள் சேகரித்தோம். ஏழாண்டுத் தண்டனை போதும் என்று சொல்லி நீங்கள் வாக்குகளைச் சேகரித்தீர்கள். கடந்த கால எங்களுடைய திட்டங்களை நாங்கள் செயலாற்றியதில் பெற்ற வெற்றியை எடுத்துச்சொல்லி நாங்கள் வாக்குகளை சேகரித்து இருந்தோம். அதுமட்டுமல்ல. சிகாம் வைப்பதுபோல் தெருத்தெருவாக மன்னிப்புக் கேட்டு நீங்கள் வாக்குகளைச் சேகரித்தீர்கள். நாங்கள் தூய்மையான ஆட்சியைத் தருவோம் என்று சொல்லி வாக்குகளைப் பெற்றிருக்கிறோம். ஆகவே அனுதாப அலை என்பதல்ல. பெரியகுளம் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் கம்பம் நடராஜன் அவர்களுடைய திருவுருவப் படத்தை வைத்துக்கொண்டு நீங்கள் வாக்குகள் கேட்டீர்களே, வெற்றி அடைந்தீர்களா என்று கேட்கிறேன். இப்போது சட்டமன்றத் தேர்தலில்கூட கம்பம் நடராஜனுடைய குழந்தை, பத்து வயதுப் பாலகனை வைத்துக்கொண்டு கம்பம் சட்டமன்றத் தொகுதியில் நீங்கள் வாக்குகளை, அனுதாப வாக்குகளைக் கேட்டீர்களே, வெற்றி பெற முடிந்ததா ? எங்களுக்குக் கிடைத்த வெற்றி எங்கள் பெரிய திட்டங்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். இலங்கைப் பிரச்னையில் இவர்கள் ஏதோ தமிழர்கள் தமிழர்கள் என்று சொல்லி மற்றவர்கள் எல்லாம் தமிழர்கள் இல்லை என்ற ஒரு கருத்தை மற்றவர்களுக்குப் படிப்படியாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். உங்களுக்கு எந்த அளவுக்கு உணர்வுகள் இருக்கின்றனவோ அதைக்காட்டிலும் அதிகப்படியான உணர்வுகள் எங்களுக்கு இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இங்கே இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் ஏதோ அவர்கள் மட்டும் வந்ததாக நினைத்துக் கொண்டு மற்றவர்களை எல்லாம் உதாசீனப்படுத்துவதாக இந்த மன்றத்தில் கூறிக்கொண்டிருக்கிறார்கள். எடுக்கக்கூடிய அத்தனை நடவடிக்கைகளையும் மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டு எடுக்க முடியுமா என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல. இலங்கைப் பிரச்னையில் அங்கே இருக்கக்கூடிய சிங்களப் பேராசிரியர் கூட சொல்லியிருக்கிறார்கள்.



1985 மார்ச் 14] [திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்]

லண்டனிலும் அமெரிக்காவிலும் அந்தத் திறவுகோல் இல்லை. அது இந்தியாவில்தான் இருக்கிறது. அங்கிருக்கக்கூடிய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு அந்தத் திறவுகோல் இந்தியாவில் தான் இருக்கிறது என்று அந்த சிங்களப் பேராசிரியர் சொல்லியிருக்கிறார்கள். இங்கே குறிப்பிட்டுச் சொல்லும்போது கூட எதிர்க்கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் பேராசிரியர் அவர்கள் குறிப்பிடும்போது அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இருக்கும்போது எங்களுக்கு அந்த நம்பிக்கை இருந்தது, இப்போது எங்களுக்கு அந்த நம்பிக்கை இல்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பத்தடி பாயும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு, அவர்கள் இலங்கைப் பிரச்னையில் ஒரு நல்ல தீர்வினைக் கொண்டுவருவார்கள் என்ற அந்தக் கருத்தை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்."

என்று திருக்குறளில் சொல்லியுள்ளபடி அந்தத் திட்டங்களில் நிச்சயமாக மத்திய அரசும் மாநில அரசும் முடிவெடுப்பார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, மேதகு ஆளுநர் உரை மீது பேசும்போது இங்கே சொன்னார்கள். நீண்டகால எதிர்பார்ப்பாக உள்ளாட்சித் தேர்தல்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படாமல் விடுபட்டதுபற்றி, அது ஒரு பெரும் குறையாக இருக்கிறது, விரைவிலே அந்தக் குறையை நீக்குவதற்கு உள்ளாட்சித் தேர்தலை கண்டிப்பாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய போடித் தொகுதியில் பதினெட்டாம் கால்வாய்த் திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. அது போடிக்கு மட்டுமல்ல, கம்பம், தேனி தொகுதிகளுக்கும் சேர்ந்துள்ள திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நிலத்தடி நீரையே நம்பி விவசாயம் செய்துகொண்டிருக்கிற அந்தப் பகுதி மக்களுக்கு பாசன வசதி கிடைக்கும். இப்போது அந்தப் பகுதியில் கிணறுகள் 100 அடி, 120 அடி ஆழத்தில் தோண்டப்பட்டாலும்கூட, [illegible]யாக தண்ணீர் இல்லாத காரணத்தால், அந்த பதினெட்டாம் கால்வாய்த் திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற வேண்டுமென்று

[திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்] [1985 மார்ச் 14

கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முன்னாள் அமைச்சர் இராஜா முகமது அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது அதற்கான ஆரம்ப பணிகளை மேற்கொள்வதற்கான திட்டத்தைத் தீட்டி, அது முடிந்துள்ள இந்த நிலையில், இந்தத் தேர்தலில் கிட்டத்தட்ட இருபதுக்கு மேற்பட்ட கிராம மக்கள் அந்தத் திட்டம் வரவில்லை என்று சொல்லி, ஓட்டுப் போட மாட்டோம் என்று சொல்லி, தேர்தலைப் புறக்கணித்தார்கள். அங்கே நமது மரியாதைக்குரிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வந்தபோது இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். நிச்சயமாக இந்தத் திட்டம் கொண்டு வரப்படும் என்று அப்போது உறுதி சொன்னார்கள். அதற்கு மேல்தான் அந்தக் கிராம மக்கள் எல்லாம் வாக்களிப்பிலே கலந்துகொண்டார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றி முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

போடி நகரில் குடிநீர் அபிவிருத்திக்காக உலக வங்கி ஒத்துழைப்போடு சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் உருவாகிக்கொண்டுள்ள திட்டம் டிசம்பர் 84-ல் முடிய வேண்டும். கிட்டத்தட்ட ஒரு இலட்சம் குடும்பங்கள் உள்ள போடி நகரில் இன்னும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வில்லை. அந்த வேலையை துரிதப்படுத்தி, விரைவிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போடி தொகுதியில் கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் உள்ளிட்ட சுமார் 20 கிராமங்களுக்கு ஒன்றரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன் அனுமதியான கூட்டுக் குடிநீர்த் திட்டம் அனுமதியாகி இன்னும் நிறைவேறாமல் உள்ளது. இந்தத் திட்டத்தை கூடிய விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

போடி தொகுதி சில்லமரத்துப்பட்டி உள்ளிட்ட 15 கிராமங்களுக்கு போடி கொட்டகுடி ஆற்றிலிருந்து குடிதண்ணீர் விநியோகிக்க 84 இலட்சம் ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டு, குடிநீர் வடிகால் வாரியத்திடம் முழுமையாகாமல் இந்தத் திட்டமும் நின்றுபோய் உள்ளது. இந்தத் திட்டத்தினை விரைவிலே செயலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 14] [திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்]

போடி தொகுதியில் தேவாரம் அருகில் தமிழ்நாடு-கேரளா இணைப்புப் பாதையான சாக்குளத்துமெட்டு ரோடு அமைக்க முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு குழந்தைவேலு அவர்களால் இந்த சாக்குளத்துமெட்டு மலைப் பாதையை 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு, 5 கிலோமீட்டர் சாலை போடப்பட்டுள்ளது. மீதியுள்ள எட்டு கிலோமீட்டர் பாதை போட மத்திய அரசு வனத் துறையினரின் அனுமதி வேண்டி, அப்படி நின்றுள்ளது. அதுபற்றி உடன் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு இந்தப் பாதையை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கோருகிறேன்.

போடி தொகுதியில் முதலமைச்சர் தனி அனுமதியோடு துவங்கப்பட்ட தேவாரம் அரசு மருத்துவமனைக்கு கட்டிடங்கள் ஒன்றும் இல்லை. மேற்படி மருத்துவமனைக்கு பார்ட்-2 திட்டத்தில் கட்டிடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

போடிநாயக்கனூருக்கு அரசு மருத்துவமனை கட்டப்பட்டு 15 ஆண்டுகள் ஆகின்றன. ஆரம்பிக்கும்போது 300 வெளி நோயாளிகளும், 45 உள் நோயாளிகளும் வருவார்கள் என எதிர்பார்த்து அமைக்கப்பட்டது. தற்போது தினமும் சுமார் 1,500 நபர்கள் வெளி நோயாளிகளாக வருகின்றனர். இந்த மருத்துவமனைக்கு பல் சிகிச்சை, கண் சிகிச்சை போன்ற பிரிவுகளை அமைத்தும், ரத்த சேமிப்பு வங்கி ஒன்றை அமைத்துத் தருவதுடன் கூடுதல் மருந்தினையும் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, போடித் தொகுதியில் மழைக் காலத்தில், பண்ணைப்புரம், கரியணம்பட்டி, மல்லிங்காபுரம் போன்ற கிராமங்களில் உள்ள வீடுகள் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகின்றன. இதனால் அரிசனங்கள் அதிகம் வாழும் இப்பகுதியில், இந்தக் காட்டாற்று வெள்ளத்தால் அவர்கள் மிகவும் துன்பப்படுகின்றனர். ஆகவே இந்தக் கிராமங்களுக்கு மேற்குப் பக்கம் ஒரு தடுப்புச் சுவர் கட்டி, ஒரு குளம் அமைத்திட வேண்டும் என்ற இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

போடித் தொகுதியில் ஆதிவாசிகள் நிறைய வாழும் மேற்கு மலைத் தொடரில், டீ, காபி, இலவங்கம், மா, எலுமிச்சை, பலா, வாழை போன்ற பொருட்கள் விளைகின்றன. எனவே, ஆதிவாசிகள் சென்று வரவும், அங்கே விளையும் பொருட்களை, பல்வேறு வியாபார இடங்களுக்குக் கொண்டு செல்லவும், எந்த விதமான ரோடு வசதிகளும் இல்லை. எனவே, குரங்கணி டு டாப் ஸ்டேஷன், குரங்கணி டு கொழுக்குமலை, போடி டு அகமலை, குரங்கணி டு அகமலை, பெரியகுளம் டு அகமலை, சாலைகளை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே மேற்படி திட்டங்களை செயலாக்கிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, போடித் தொகுதியில் உள்ள பூதிப்புரம், மஞ்சிநாயக்கன்பட்டி, கெப்புராங்கன்பட்டி, வளையப்பட்டி, வாழயாத்துப்பட்டி, ஆதிபட்டி போன்ற பல கிராமங்கள் போடி நகருக்கு வரும் பிரதான சாலையுடன் தொடர்பு கொள்ள இயலாமல் குறுக்கே கொட்டகுடி ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே அந்த ஆற்றின் மேல் ஒரு பாலம் கட்டி, அங்கே வாழும் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் மேற்குக் கடைசியில் உள்ளது எங்கள் பகுதி. (குறுக்கீடு) ஒன்றை மட்டும் சொல்லி நான் முடித்து விடுகிறேன். மதுரைக்கு உயர்நீதி மன்றத்தினுடைய கிளை ஒன்று வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் அங்குள்ள மக்கள் நீண்ட தொலைவில் இருந்து சென்னைக்கு வர வேண்டியதாக இருக்கிறது. இதற்கு அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

அடுத்ததாக, நிலவள வங்கிகள் கடன் வசூலிப்பது 31 ஆம் தேதியோடு முடிகிறது என்று சொல்கிறார்கள். வருமானம் இல்லாத நேரத்திலே பணம் வசூலிப்பது சிரமமான காரியமாக இருப்பதால், இன்னும் ஆறு மாதங்களுக்கு அந்தக் காலத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.





இதுபோக, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே விவசாயிகள் வறட்சியில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே மதுரை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முல்லை ஆற்றுப் பாசனத்திலே நெல் விளைச்சலிலே மிகவும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. அது போல் பருத்தி விளைச்சலில்கூட அங்கே பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. நேற்றுகூட பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. விவசாயம் செய்யக்கூடிய பெரிய நிலக்கிழார் ஒருவர் கூட, அந்தப் பகுதியிலே நெல் விவசாயம் பாதித்த காரணத்தால், 59 ஆயிரம் ரூபாய் கடன் வருமே என்று சொல்லி, தற்கொலை செய்து கொண்டதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத்தை எடுத்துக்கொண்டால், குறிப்பாக எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால், பம்பு செட்டுகளுக்கு முழுமையாக மின்சாரத்தை நம்பியிருக்கிறோம். திட்டமாக மின்சாரம் அங்கே கிடைப்பது இல்லை. விவசாயிகளாகிய நாங்கள் நீர் பாய்ச்சுவதற்காக சென்றால், குறிப்பிட்ட நேரங்களிலே எங்களுக்கு மின்சாரம் கிடைப்பதில்லை. எனவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மின்சாரம் கிடைக்கும் என்ற உறுதியை மின்சார இலாக்கா வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இங்கே பேச சந்தர்ப்பம் அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, அன்னை இந்திரா காந்தி நாமம் வாழ்க, ராஜீவ் காந்தி புகழ் ஓங்குக என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. முத்தையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைக்கும், புகழுக்கும் உரிய இந்த மாமன்றத்தில் தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் என்னுடைய சேடப்பட்டி தொகுதியினுடைய பிரதிநிதியாக இருந்து பணியாற்றத்தக்க வாய்ப்பினை வழங்கி இருக்கின்ற தமிழர் நலத்தினுடைய காவல் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவரின் பொற்பாதங்களுக்கு முதலாவதாக என்னுடைய காணிக்கையை செலுத்தி, எனக்கு இந்த மன்றத்தில் தங்களுடைய பிரதிநிதியாக இருந்து பணியாற்றுகின்ற வாய்ப்பினை தொடர்ந்து வழங்கிக்கொண்டு இருக்கின்ற என்னுடைய தொகுதி மக்களுக்கும் என்னுடைய

நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, திரு. செம்மலை அவர்களால் முன்மொழியப்பெற்று இருக்கின்ற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க முன்வந்திருக்கிறேன்.

ஏழை அழுத கண்ணீரை கண்டபோதெல்லாம் உள்ளம் உருகி ஓடிச்சென்று அவர்கள் கண்ணீரைத் துடைத்து, அவர்களுடைய துன்பம் கலைய உதவிகள் பல புரிந்து, ஏழைகள் வீட்டு ஒளி விளக்காக திகழும் மன்னாதி மன்னன் புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாவது பிறவி எடுத்து, இங்கே மூன்றாவது முறையாகவும் தமிழகத்தின் ஆட்சிக் கட்டிலில் அரியணை ஏறியிருக்கிறார்கள். வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்று வள்ளலார் பெருமகன் கூறுவார். அதுபோல எங்கே வறுமை இருக்கிறதோ, எங்கே வாட்டம் நெரிகிறதோ, எங்கே ஏழை எளியவர்கள் இன்னலுறுகிறார்களோ, அங்கேயெல்லாம் ஓடிச் சென்று உதவிய கரத்திற்குச் சொந்தமான எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இன்றைக்கு மூன்றாவது பிறவி எடுத்து இருப்பது கூட அந்த ஏழை எளியவர்கள், இல்லாதவர்கள் இலட்சக் கணக்கிலே கதறி அழுதார்களே, அந்த தலைவன் இல்லையேல் நாம் இல்லை, நமக்கு வாழ்வு இல்லை, வேறு எதுவுமே இல்லை என்று ஏக்கத்தோடு பரிதவித்தார்களே, அந்த பரிதவிப்பைப் போக்குகின்ற வகையிலே, தீர்க்கின்ற வகையிலே தான் மீண்டும் அந்த தலைவன் இங்கே மூன்றாம் பிறவி எடுத்து, ஆட்சிக் கட்டிலிலே அரியணை ஏறியிருக்கின்ற நிகழ்ச்சியும் என்பதாக நல்ல உள்ளம் படைத்த பெருமக்கள் அத்தனை பேரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த பெருமகன், மக்களுடைய எல்லையற்ற அன்பைப் பெற்றிருக்கின்ற அந்த தங்கத் தலைவன், தானைத் தலைவன், புரட்சித் தமிழன் தமிழ் மண்ணை மிதித்தவுடன் உள்ளம் உருகச் சொன்னார்கள். என் வாழ்நாளினுடைய எஞ்சிய நாள் அத்தனையையும், இந்த மண்ணினுடைய எழுச்சிக்கு, சிறப்புக்கு இழப்பேன் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் இந்த ஆட்சியினுடைய செயல் திட்டங்கள் அமையவிருக்கின்றன. அத்தகைய செயல் திட்டங்களில் ஒன்றிரண்டைத்தான் ஆளுநர் தன்னுடைய உரையிலே எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.



அந்த அளவிற்கு பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு ஆளுநர் உரையிலே தெரிவித்து இருப்பதைப்போல், வர இருக்கின்ற நிதி நிலை அறிக்கையிலே பல்வேறு திட்டங்கள் வெளியிடப்படலாம். அதேபோன்று எங்களுடைய தங்கத் தலைவர், புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். என்னென்ன சிந்தனைகளை தங்களுடைய நெஞ்சிலே தேக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்த சிந்தனைகள் எல்லாம் அவ்வப்போது செயல்வடிவம் பெற்று இங்கே பல்வேறு திட்டங்களாக அறிவிக்கப்படும். நல்ல திட்டங்கள் இந்த ஆளுநர் உரையிலே இருந்தாலும், எதிர்த் தரப்பிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளைச் சார்ந்த பெரியவர்கள் இந்த உரையிலே எதுவுமே இல்லை, இந்த உரை உப்பு சப்பில்லாமல் இருக்கிறது என்பது போன்ற கருத்துக்களை இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர், தொழிற் சங்கத்தைச் சார்ந்த திரு. ரங்கசாமி அவர்கள் ஒரு கருத்தை இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த உரையில் இருப்பதை சுட்டிக் காட்டிவிட்டு, தமிழகம், காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்தில் தொழிற் துறையிலே மூன்றாவது இடத்தில் இருந்தது இப்போது எந்த இடத்திலே இருக்கிறது என்பது தெரியவில்லை என்கின்ற ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

(முற்பகல் 9-50)

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், பல்வேறு தொழில்கள் இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பல்வேறு மாவட்டங்களில் சிப்காட் மூலமாகவும், சிட்கோ மூலமாகவும், பல்வேறு தொழிற்பேட்டைகள் இன்றைக்கு நிறுவப்பட்டிருக்கின்றன. அதுபோல சிறுதொழில்களுக்கு எந்த அளவுக்கு முதலீடு செய்ய வேண்டுமோ, அந்த அளவுக்கு முதலீடு செய்து அத்தகைய தொழில்கள் எல்லாம் இங்கே உருவாகியிருக்கின்றன.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இங்கே பத்திரிகை காகித உற்பத்தித் தொழிற்சாலை பெரிய அளவில் நிறுவப்பட்டு, அதுவும் தன்னுடைய உற்பத்தியைத் தொடங்குகின்ற நிலைமையிலே இருக்கிறது.

அதுபோல, கரும்பு உற்பத்தியாளர்களுடைய நலனைக் காக்கும் வகையில், தனியாரிடத்திலே இருந்த எங்கள் மாவட்டத்திலுள்ள மதுரா சுகர்ஸ் என்ற பாண்டியராஜபுர சர்க்கரை ஆலையை இன்றைக்கு அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதனுடைய திறனை ரூ. 5 கோடி அளவிற்கு உயர்த்துகின்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறது.

அதுபோல தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ. 10.8 கோடி செலவில் புதிய சர்க்கரை ஆலை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

இன்னும் 6, 7 கூட்டுறவு நூல் உற்பத்தி ஆலைகளும் இங்கே நிறுவப்பட்டு இருக்கின்றன. இந்த அளவிற்கு தொழில்களைப் பொறுத்தவரையில், மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதைப் போல, 1967-க்குப் பின்னாலே, பெரிய தொழில்களுக்கு ஆன கனரகத் தொழில்களை தமிழகத்தில் அவ்வப்போது ஏற்படுத்தாமல் இருந்த நிலைமையை மாற்றி, இப்போதாவது 2, 3 பெரிய தொழிற்சாலைகளை இங்கே நிறுவுகின்ற வகையிலே மத்திய அரசு முன்வந்திருக்கிறது. குறிப்பாக 2.8 மில்லியன் டன்னிலிருந்து 5.6 மில்லியன் டன்னாக நம்முடைய சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையினுடைய திறனை உயர்த்துகின்ற திட்டத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அதுபோல ரூ. 170 கோடி செலவில் 'ஹெவி அலாய் பெனட்ரேட்டர் ஃபாக்டரி' என்கின்ற கனரக உலோகக் கலவை ஊடுருவித் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான அனுமதியை வழங்கியிருக்கிறார்கள்.

இன்னும் திருச்சியில் இரயில் பெட்டித் தொழிற்சாலையின் இன்னொரு பகுதியை உருவாக்குவதற்கான நிலத்தை மாநில அரசு இலவசமாக வழங்கியிருக்கிறது.

அதுபோல ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்; மணலியிலுள்ள ரசாயனத் தொழிற்சாலையின் விரிவாக்கப் பணிகள் இங்கே நடக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கோரி வருகிறது. இந்தக் கோரிக்கைகள் எல்லாம் விரைவில் நிறைவேற்றப்படுமானால், இங்கேயும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அங்கம் வகிக்கிற பல இளம் உறுப்பினர்கள் உற்சாகத்தோடு, உத்வேகத்தோடு குறிப்பிட்டார்களே, இத்தகைய தொழில்களைப் போராடி, வாதாடிப் பெறுவோம் என்று, அந்த நிலைமைகள்



உருவாக்கப்படுமானால், மத்திய அரசினுடைய இத்தனை தொழில்களும், இங்கே வருமானால், தமிழகம் அவர் விரும்புவதுபோல், மூன்றாவது இடத்தில் இல்லை, முதல் இடத்திற்கு வருகின்ற நிலைமைகள் கூட உருவாகும் என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவுக்கு மத்திய அரசினுடைய தொழில்களை இங்கே உருவாக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பெரியவர் அவர்களும் செய்வார்கள் என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு இருந்தால், இன்றைக்கு இரண்டாவது எதிர்க் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்றக் கட்சியின் துணைத் தலைவர்—எங்களுடைய நாஞ்சிலார் அவர்கள் எங்களைப்போல் அவரும் தங்களுடைய கரத்தில் அண்ணாவின் உருவம் பொறித்த கொடியை ஏந்தி இருக்கிறார்கள்—அந்த உரிமையோடு எங்களுடைய நாஞ்சிலார் அவர்கள் ஒரு கருத்தை இந்த ஆளுநர் அவர்களுடைய உரை படிக்கப்பட்ட பின் பத்திரிகையிலே தெரிவித்தார்கள். இதிலே எதுவும் இல்லையே, இந்தி எதிர்ப்பு பற்றி இல்லையே, மாநில சுயாட்சி பற்றி இல்லையே என்று ஆதங்கத்தோடு வெளியிட்டிருந்தார்கள். அவர்கள் இந்தி எதிர்ப்பு இல்லையே, மாநில சுயாட்சி உணர்வுகளே இல்லையே என்று தெரிவித்த கருத்துக்களுக்கு பதில் சொல்லும் வகையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் ஒரு கருத்தை இங்கே வேடிக்கையாகச் சொன்னார்கள். இந்த ஆட்சி என்பது ஏதோ புதியதாக வந்த ஆட்சி என்று கருதி விடாதீர்கள், இடைவேளை முடிந்து, படம் மறுபடியும் ஆரம்பித்து இருக்கிறது என்று சொன்னார்கள். இடைவேளை முடிந்து மறுபடியும் படம் ஆரம்பிக்கிறது என்பதை வேடிக்கையாக விளையாட்டாக எடுத்துக் கொண்டு சொல்லியிருந்தாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். எப்படி இடைவேளை முடிந்த பிறகு மறுபடியும் காட்சி தொடங்குகிறதோ, அதைப்போன்று என்றும் அசைக்க முடியாத அளவுக்கு நிலைத்த தன்மையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சி தொடர்ந்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் படம் சில படங்களைப்போல் 10 நாட்கள் 8 நாட்கள் ஓடி பெட்டிக்குள்ளே ஒடுங்கி விடக்கூடியது அல்ல. பழைய காலத்தில் வெளிவந்த மதுரைவீரனைப் போல், நாடோடிமன்னனைப் போல் ஓராண்டு வரையில் ஓடிய வெற்றிப் படங்களைப் போல் இந்த ஆட்சியும் இந்தியாவிலே வேறு எந்தப் பகுதியிலும் புதுப் புது ஆட்சிகள்

[திரு. இரா. முத்தையா] [1985 மார்ச் 14

வந்தாலும் தமிழகத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கிறவரையில் அவர்களுடைய ஆட்சிதான் இருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக தான் அவர் அந்த உதாரணத்தைச் சொன்னார் என்று என்னால் சொல்ல முடியும்.

மேலும் எங்களுடைய நாஞ்சிலார் அவர்கள் சொன்னதற்குகூட நான் பதில் சொல்ல முடியும். இந்தி எதிர்ப்பு பற்றி இந்த உரையிலே இல்லை, என்று அவர் சொல்லியிருக்கிறார். இடைவேளைக்கு முன்னாலே வருகிற காட்சியிலே அது வந்து விடுகிறது. அதாவது அன்றையதினம் ஆளுநர் அவர்கள் உரையிலேயே அது தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வந்த ஆளுநர் உரையிலேயே இந்தி எதிர்ப்பு உணர்வு, தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அமைந்துள்ள எங்கள் அரசு அமரர் அண்ணா அவர்கள் கொள்கைகளை நிறைவேற்ற ஆர்வமும் நம்பிக்கையும் கொண்டுள்ளது. நேர்மைக்கும் நாணயத்திற்கும் சிறப்பாக பெயர் பெற்ற எங்கள் அரசு அதை உறுதிப்படுத்தும் வகையில், தூய்மையைப் பொது நிர்வாகத்தில் என்றும் நிலை நாட்டும் என்பதை அனைவரும் திடமாக நம்பலாம் என்று அண்ணா அவர்களால் வகுக்கப்பட்ட இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இரு மொழிக் கொள்கையைத் தொடர்ந்து இந்த அரசு உறுதியோடு கடைப்பிடிக்கும். இந்தத் தனித் தன்மையை எல்லாத் துறைகளிலும் தன்னுடைய முத்திரையாகப் பதிக்கும் என்று ஆளுநர் அவர்கள் உரையிலே அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். இடைவேளைக்கு முன்னாலேயே இந்தி எதிர்ப்பு உணர்வு சொல்லப்பட்டு அது இன்றைக்கும் தொடர்கிறது. அந்த அண்ணாவின் அரசு இன்றைக்கும் தொடர்கிறது.

அதேபோல் அந்த உரையிலே மாநில சுயாட்சி தன்மையை எந்த எந்த அளவில் இந்த மாநில அரசு மத்திய அரசால் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது என்றும் ஆளுநர் உரையிலே குறிப்பிடுகிறபோது, முதலாவது ஐந்தாண்டு திட்டத்திலே எந்த அளவுக்கு நமக்கு பங்கு இருந்தது, 2-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே எவ்வளவு இருந்தது, 3-வது ஐந்தாண்டு திட்டத்திலே எவ்வளவு இருந்தது என்பதை எல்லாம் கோடிட்டுக் காட்டி ஒட்டுமொத்தமாக இந்திய அரசினுடைய மொத்த திட்ட முதலீட்டில் வெறும் 4 சதவீதம் மட்டுமே தமிழ்நாட்டில் முதலீடு செய்யப்படுகிறது



1985 மார்ச் 14] [திரு. இரா. முத்தையா]

என்ற தன்மையை சுட்டிக்காட்டி அப்படிப்பட்ட நிலை மாற வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அன்றைக்கே அது சொல்லப்பட்டு இருக்கிறது. நம்முடைய நாஞ்சிலார் அவர்களும் அருமை நண்பர் ரகுமான்கான் அவர்களும் இன்றைக்குச் சொல்கிறார்கள், மாநில சுயாட்சியைக் காணவில்லையே என்று. 1980-ம் ஆண்டே மாநில சுயாட்சித் தன்மையைப் பற்றி எடுத்துச் சொல்லி இந்தி எதிர்ப்பு உணர்வை சுட்டிக் காட்டிய நேரத்திலே அன்றைக்கு பாராட்டு வந்ததா? யாராவது பாராட்டினார்களா? ஆளுநர் உரையின் மீது உரையாற்றிய பேராசிரியர் அவர்கள் பாராட்டினார்களா? அன்றைக்கு பேராசிரியர் அவர்கள் நீண்ட நேரம் பேசியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு நம்முடைய மாநிலம் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது என்பதை நாங்கள் சுட்டிக் காட்டிய நேரத்திலே எந்த அளவுக்கு நம்முடைய மாநிலத்தினுடைய உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றன என்று அவர்கள் சொல்லி நாங்களும் துணை நிற்கிறோம்; விடாதீர்கள் என்று பேசியிருக்கிறார்களா? இல்லை.

நான் பேராசிரியர் அவர்கள் பேசியதை படித்துப் படித்துப் பார்த்தேன். அதைப்பற்றி அவர் பேசவில்லை. அன்றையதினம் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் தலைவராக இருந்த திரு. சங்கரய்யா அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பிராமண துவேஷத்தை தமிழகத்திலே யாரும் தூண்டிவிடுவது நல்லதல்ல என்று பொதுவாக பேசிய பேச்சுக்கு நீண்ட நேரம் பதில் அளித்த பேராசிரியர் அவர்கள் மாநில சுயாட்சி உணர்வு கொண்ட அந்த ஆளுநர் அறிக்கையை பாராட்டி இருக்கிறார்களா? என்றால் இல்லை. பேராசிரியர் அவர்களுக்கு நேரம் இல்லாமல் இருந்து இருக்கலாம். அவர்களுடைய கருத்து நமக்குத் தெரியும். அதற்கு பின்னால் நிதிநிலை அறிக்கையின்மீது பேசிய டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தக் கருத்தை தன்னுடைய உரையிலே சேர்த்துக் கொள்கிறார். சேர்த்துக்கொள்ளுகிற கலைஞர் அவர்கள் மாநில சுயாட்சிக்கு ஒட்டுமொத்தமாக உரிமை உடையவர் என்று வெளியே பேசிக்கொள்ளுகிற டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு தன்னுடைய உரையிலே இந்தி எதிர்ப்பு உணர்வு, மாநில சுயாட்சி உணர்வையும் வெளிக் காட்டினாரா என்றால் இல்லை. அவர் பேசுகிறபோது குறிப்பிடுகிறார்.

(முற்பகல் 10-00)

மத்திய அரசு திட்டங்களிலே மாநில அரசு எந்த அளவுக்கு புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது என்பதை நிதிநிலை அறிக்கையின் 52-வது பக்கத்திலே நாவலர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் மாநிலத்தின் பங்கு மத்திய அரசாங்கம் இங்கே திட்ட முதலீடு செய்தது 10.8 சதவீதம், 2-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே 9 சதவீதம், 3-வது ஐந்தாண்டுக் திட்டத்திலே 7 சதவீதம், 4-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே 5.5 சதவீதம், 5-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே 4.1 சதவீதம் என்பதை சுட்டிக்காட்டி இந்த நிலைமைக்கு இந்த மாநில அரசு பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதை சொல்லியிருக்கிறார். அந்தக் கூற்றை குறிப்பிட்ட டாக்டர் கலைஞர் அவர்கள் உரத்த குரலில் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து இருக்கிறாரா? என்றால் இல்லை. அவருடைய பேச்சின் ஒரு பகுதியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக படித்துக் காண்பிக்க விரும்புகிறேன்.

டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சொல்கிறார்; நிதிநிலை அறிக்கையினுடைய 52-வது பக்கத்தில் மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு வழங்கும் திட்ட நிதி உதவி குறைந்துகொண்டே வருவதன் காரணமாக தமிழ்நாட்டின் நபர் வாரி திட்டச் செலவும் குறைந்து வருகிறது என்று நம்முடைய நிதி அமைச்சர் சொல்கிறார்கள். டாக்டர் கலைஞர் மேலும் சொல்கிறார், தமிழகத்திற்கு ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் நாம் கேட்கிற நிதி ஒதுக்கீட்டுத் தொகை கொடுப்பது இல்லை. அதை நியாயப்படுத்துகிற வகையில் அதை பேசுகிறார். திட்டங்களுக்காக மாநில அரசுக்கு மத்திய அரசினுடைய உதவி போதுமான அளவுக்கு கிடைக்காவிட்டாலும் தமிழக அரசு திட்டச் செலவீடு திட்டத்தில் சேராத வளர்ச்சிப் பணிகளுக்கு தன்னுடைய சொந்த முயற்சியில் வருவாயைப் பெருக்கிக் கணிசமான தொகையை செலவழித்து தமிழகத்தின் திட்ட அளவைப் பெருக்க வரவேண்டும் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டவும் வேண்டுகோளாக வைக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில அரசு எந்த அளவுக்கு புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது என்கின்ற ஒரு குறிப்பைச் சொன்ன டாக்டர் நாவலர் அவர்களுக்கு அன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த



டாக்டர் கலைஞர் அவர்களுடைய பதிலுரை இதுதான். இப்படிதான் குறைந்துகொண்டே எல்லா காலத்திலும் வந்திருக்கிறது. எனவே, உங்கள் நிதி ஆதாரத்தை பெருக்கிக்கொண்டு திட்டச் செலவை அதிகப்படுத்தப் பாருங்கள் என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறாரே தவிர இதை விடக்கூடாது, போராடத் தயார், நீங்கள் தயாரா என்று எப்படி நெஞ்சுயர்த்தி நேற்றையதினம் பேராசிரியர் அவர்கள் கேட்டாரோ, நாங்கள் அதற்குத் தயார் நீங்கள் தயாரா என்று அதைப்போல அத்தகைய கோரிக்கையை நாங்கள் தயார், நீங்கள் தயாரா என்ற வினாவை டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு எழுப்பத் தயாராக இல்லை. அவர்கள் அப்படி குறைத்துக்கொண்டுதான் வருவார்கள், உங்கள் நிதியை நீங்கள் கூட்டுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார். ஏன் மாநில சுயாட்சி பேசுகின்ற கட்சியினுடைய தலைவர் உரத்த குரலில் இந்த மாநில அரசு பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னபோது அதற்காக போராட தயார் என்று குரல் எழுப்ப முன்வராதவர்கள் நாங்கள் தயார், நீங்களும் தயாராக இருங்கள் என்று அன்றையதினம் ஏன் சொல்லவில்லை என்றால் காங்கிரஸ் கட்சியோடு தி.மு.க. உடன்பாடு கொண்டிருந்தது என்பதை காரணமாக நான் சொல்லமாட்டேன்.

அவ்வளவு ஒரு சிறிய காரியத்திற்காக மாநில சுயாட்சியை கைவிடுகிற அளவுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் இறங்கி விடமாட்டார்கள். ஆனால் அன்றையதினம் போடப்பட்டு இருந்த சி.பி.ஐ. வழக்கும், சர்க்காரியா வழக்கும் திரும்பப் பெறப்படாமல் இருந்த நிலையில் டாக்டர் கலைஞர் அவர்கள் மாநில சுயாட்சி கொள்கையை உரத்தக் குரலில் எழுப்பமுடியவில்லை. அதனாலே தான் நழுவுகிறார், வழுவுகிறார் என்ற வகையில் அன்றையதினம் பேசியிருக்கிறார். அவர் சொன்னது போல் இந்த ஆட்சி இடைவேளைக்கு முன்னாலே மாநில சுயாட்சிக்கு அந்த அளவுக்கு குரல் எழுப்புகிற நேரத்திலே குரல் கொடுக்க முன்வராதவர்கள் இன்றைக்கு மாநில சுயாட்சி பற்றி குறிப்பிடப்படவில்லையே என்று குறைபாடு சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் அன்றைக்கும் குறிப்பிட்டு இருக்கிறோம், இன்றைக்கும் குறிப்பிட்டு இருக்கிறோம். மாநில சுயாட்சி என்பதை மாநில நிர்வாக அதிகாரங்களை அதிகம்

[திரு. இரா. முத்தையா] [1985 மார்ச் 14

பெறுவது, மாநிலத்திற்கு வேண்டிய நிதி ஆதாரங்களை அதிகம் பெறுவது என்ற முயற்சியிலே அன்றைக்கு இருந்தே நாங்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த மாநில சுயாட்சி என்ற வார்த்தையே கூட எந்த அளவுக்கு மற்ற மாநிலங்களில் இருக்கிறவர்களால் ஓரளவிற்கு சந்தேகக் கண்ணோட்டத்தோடு பார்க்கப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் அந்த வார்த்தை கூட ஓரளவுக்கு கொச்சைப்படுத்தப்பட்டு விட்டது. அந்த வார்த்தைக்கே கூட வேறு விதமான விளக்கங்களை காண வேண்டும் என்று அன்றைக்கு குறிப்பிட்ட எங்களுடைய நாஞ்சிலார் அவர்கள் இன்றைக்கு உங்கள் கட்சியின் துணைத் தலைவராக இருக்கிறார்கள். அவர்கள் தான் அன்றைக்கு எங்களுக்குச் சொன்னார்கள். அவர் சொல்லித் தான், அவர் அன்றைக்கு ஒன்றைச் சொன்னார்கள் ஆங்கிலத்தில். மாநில சுயாட்சி என்று நாம் கேட்கக் கூடாது; நாம் எப்படிக் கேட்க வேண்டுமென்று சொன்னால் **We want neither despondent nor dependent but inter-dependent** என்கின்ற பொதுத் தத்துவத்தை இன்றைக்கு உங்களுடைய துணைத் தலைவராக இருக்கின்ற நாஞ்சிலார்தான் அன்றைக்கு எங்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார், மாநில சுயாட்சி என்கின்ற வார்த்தைகளை உச்சரிக்க வேண்டியதில்லை என்று. அதற்கு மொழி பெயர்க்கின்றபோது கூட நான், நம்முடைய பேரவைத் தலைவர் போன்ற இளைஞர்களெல்லாம்கூட இதிலே வார்த்தைகள் கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தோம். அந்த நோக்கிலே நாஞ்சிலார் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் சொன்னோம், கொஞ்சம் கடுமையான வார்த்தைகள் இருக்க வேண்டுமென்று சொன்னவுடன், இணைந்தும் வாழ்வோம், பிரிந்தும் செல்வோம் என்பது இருந்தால் போதும் என்று சொல்லிக்கொண்டிருந்தார். அதற்குப் பிறகு கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டுமென்று என்னைப் போன்றவர்கள், பேரவைத் தலைவரைப் போன்ற இளைஞர்கள், இன்னும் எங்கள் இயக்கத்திலே இருக்கின்ற இளைஞர்களெல்லாம் —1972-லே ஒருவிதமான உரத்த குரலை எழுப்பியதற்குப் பிறகு எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் எங்களுடைய உணர்வுகளுக்கு அன்றைக்கு மதிப்பளித்து அன்றைக்கு ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். கட்டுண்டு வாழோம், பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம்



1985 மார்ச் 14] [திரு. இரா. முத்தையா]

என்று சொன்னாலும்கூட, கட்டுண்டு வாழோம் என்பதிலேகூட நம்முடைய உணர்வுகளை ஓரளவிற்கு எழுச்சியோடு கூறுகின்ற தன்மை இருக்கின்றது என்று அவர்கள் கண்டு பிடித்துச் சொன்னார்கள். அன்றைக்கு இதற்கு அவர்களுடைய துணைத் தலைவரவர்கள் எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நிலைமை அன்றைக்கு இருந்தது. ஆனால் இன்றைக்கு அவர் பேசுகிறார், மாநில சுயாட்சி பற்றி இல்லையே என்று.

அதற்குப்பின்னால் இந்த கவர்னர் உரையைப்பற்றிப் பலரும் பேசுகின்றபொழுது பெரிதும் குறைபட்டுக்கொண்டது, இன்றைய தினம் மின் உற்பத்தியிலே நம்முடைய மாநிலம் மிகவும் பின்தங்கி விட்டது; மின் கட்டுப்பாடு மிகவும் கடுமையாக இருக்கிறது; மின் வெட்டை ஏழை எளிய விவசாயிகளால் தாங்க முடியவில்லை என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இந்த மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், இந்த அரசு அக்கறை செலுத்தாமல் இல்லை. ஏறத்தாழ ஒதுக்குகின்ற திட்டச் செலவில் 25 சதவீதத்தை இந்த மின்சார உற்பத்திக்காகத் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டில் இருந்ததைவிட 1984 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 300 மெகாவாட் மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்துகின்ற அளவிற்கு உற்பத்தியைக் கூட்டியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு உற்பத்தியைக் கூட்டியிருந்தாலும் கூட இன்றைக்கு அரசாங்கம் செய்திருக்கின்ற பல்வேறு பணிகளின் காரணமாக, ஏறத்தாழ 6 இலட்சம் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியிருக்கின்ற காரணத்தாலும், பத்து இலட்சம் மின்சார பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுத்து இருக்கின்ற காரணத்தாலும், இதனுடைய தேவையும் அதிகரிக்கின்றது. ரகுமான்கான் அவர்கள்கூடப் பெருமையாகச் சொன்னார்கள். நாங்கள் ஆறு இலட்சம் பேர்களுக்கு—விவசாயிகளுக்கு மின்னிணைப்பு கொடுத்தோம் என்று. ஆனால் இன்றைக்குப் பயன்படும் அளவு ஏறத்தாழ 10 இலட்சம். எனவே, அதிலிருந்து குறைந்துவிடவில்லை என்பதையும் அவருக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் மின்சாரக் கட்டுப்பாடு இந்த அளவிற்கு மிகவும் கடுமையாகிவிட்டது என்று சொல்கின்ற மாண்புமிகு உறுப்பினர் [illegible] அவர்களுடைய கட்சிக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுடைய ஆட்சியிலே இல்லையா என்ன?

இந்த மின் தட்டுப்பாடு வருகின்ற காலங்களிலேயெல்லாம் எங்களுடைய மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே ஏற்படுகின்ற ஒரு கடுமையான சோதனையைக் கருதி, அந்த மாவட்டங்கள் பாதிக்கப்படாத அளவிற்குப் பார்த்துக்கொள்வதற்காகத்தான் அன்றைக்குச் சமயநல்லூர் அனல் மின்சார நிலையம் இருந்தது. இதைப்போன்று திடீர் திடீரென்று விவசாயிகளுக்கு மின்சாரம் நின்றுவிடுகின்ற சூழ்நிலையைத் தடுக்கும் அளவிற்கு அந்த இரண்டு மாவட்டங்களுக்கு அது பயன்பட்டு வந்தது. அந்த அளவிற்குப் பயன்பட்டு வந்த அந்த அனல் மின் நிலையத்தை ஏலம் கூவி விற்றவர்கள் இன்றைக்கு மின்சாரத் தட்டுப்பாட்டைப் போக்குகின்ற முயற்சியில் ஈடுபடுகின்ற இந்த அரசாங்கத்தைக் குறைசொன்னால் என்ன பொருள்? ஏலம் கூவி விற்றவர்கள் எப்படி விற்றார்கள்? எதிர்காலத் தேவையைக் கருத்திற்கொள்ளாமல் ஏதோ அன்றைய ஆதாரங்களை மட்டும் மனத்திற்கொண்டுதான் சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை ஏதோ பழைய இரும்புக் கடைக்காரனுக்கு ஏலம் போட்டு விற்பதைப்போல விற்றிருக்கிறார்கள். ஆனால், அந்த நிலைமை இன்றைக்கிருக்கிறதா? இருக்கின்ற அனல் மின் நிலையத்தைப் பயன்படுத்தாத ஒரு நிலைமை இன்றைக்கு இருக்கிறதா என்றுதான் அவரை நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

எனவே, எங்களுடைய இந்த நல்ல அரசாங்கத்திற்கு இந்த மதுரை, இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பாக நான் வேண்டுகோளாக வைக்க ஆசைப்படுகிறேன். அன்றைக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் ஏலம் கூவி விற்று, இன்றைக்கு இல்லாமற்போய்விட்ட அந்தச் சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை மீண்டும் உருவாக்கித் தர வேண்டும் என்கின்ற வேண்டுகோளை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அந்த அளவுக்கு அதை உருவாக்கிக் கொடுத்தால் அந்த இரண்டு மாவட்டத்திலும் அடிக்கடி இந்த அளவுக்கு மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகின்ற நிலைமை இல்லாமல் இருக்கும். எனவே சமயநல்லூர் அனல் மின்சார நிலையத்தை மீண்டும் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

வைகை ஆற்றின் குறுக்கே ஆண்டிப்பட்டி தொகுதியில் வரிசை நாட்டுப் பகுதியில் இன்னொரு அணையைக் கட்டி வெள்ளங்களில் ஏற்படுகின்ற சேதத்தைத் தவிர்ப்பதற்கு மாண்புமிகு





முதலமைச்சர் அவர்களே நேரிலே வந்து உறுதியளித்திருக்கிறார்கள். எனவே அந்த அணைக்கட்டைக் கட்டித் தர வேண்டும்.

தேரம்பாறை அணைக்கட்டுத் திட்டம், கட்டளைக் கோம்பை அணைக்கட்டுத் திட்டம், பதினெட்டாம் கால்வாய்த் திட்டம் மற்றும் நம்முடைய அவையின் துணைத்தலைவர் அவர்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய உடைந்துபோன குடகனாறு அணை ஆகியவற்றை எல்லாம் கட்டித் தரவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே பல்வேறு பகுதிகளில் சாலைகள் இந்த ஏழாண்டுக் காலத்தில் தான் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்ட சாலைகள் என்ற காரணத்தால் அவ்வப்போது ஏற்படுகின்ற வெள்ளச் சேதத்தின் காரணமாக அவை எல்லாம் பழுதடைந்து பயன்படுத்துவதற்கு முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. எனவே அவற்றை எல்லாம் புதுப்பிப்பதற்குரிய ஒரு தனி நிதியாதாரத்தை அரசாங்கத்தினிடத்திலே கேட்டிருக்கிறார்கள். அந்த நிதியினைக் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த வெள்ளத்திலே அடித்துக்கொண்டு செல்லப்பட்டுவிட்ட என்னுடைய பகுதியிலே உள்ள வள்ளிவேலம்பட்டிப் பாலம், தேசையூர் அருகே இருக்கின்ற நாகையாபுரம் பாலம் ஆகியவற்றைக் கட்டித் தரவேண்டும். என்னுடைய சேடப்பட்டி தொகுதியில் குறிப்பாகத் திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காக்களில் இந்த முறை பருவமழை தவறி கடும் வறட்சிக்கு இலக்காகி இருக்கின்றது. அந்தப் பகுதியில் வறட்சி நிவாரணப் பணிகள் உருவாக்கப்படவேண்டும். உசிலம்பட்டி, திருமங்கலம், சேடப்பட்டி ஆகிய பகுதிகளில் எந்தவிதமான தொழிற்சாலைகளும் உருவாகாத சூழ்நிலை இருக்கின்றது. ஏதோ சிரோ இண்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட் என்று சொல்கிறார்களே, அதுபோல் இது எந்தத் தொழிலுமே, சிறு தொழில்கள் கூட இல்லாத ஒரு பகுதியாக இருக்கின்றது. எனவே வர இருக்கின்ற சிப்காட் தொழில் மையத்தை அந்தப் பகுதியிலே அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

: அனுதாப அலை காரணமாக நாங்கள் வெற்றி பெற்றோம் என்ற ஒரு குற்றச்சாட்டைப் பலரும் குறிப்பிட்டார்கள். குறிப்பாக அருமை நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் கடுமையாக அதைப்பற்றி விமரிசித்தார்கள். அனுதாப அலை பற்றிக் கவலை இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் எங்களுடைய தலைவன் பெயருக்காகவே ஓட்டு உண்டு. நிற்பது யார் என்று கூடக் கவலை இல்லை. எம்.ஜி. ஆருக்காக ஓட்டுப் போடுகிறோம் என்ற நிலைமை உண்டு. அந்த அளவுக்கு எங்கள் தலைவன் பெற்ற ஓட்டுகளைத்தான் நாங்கள் பெற்றோம். அனுதாபமாகவும் இருக்கலாம்; அவர் மீது மக்கள் கொண்ட ஆசையின் காரணமாக இருக்கலாம்; அன்பின் காரணமாகவும் இருக்கலாம். ஆனால் அந்த அனுதாபத்தை அறுவடை செய்ய முயற்சித்தது தி.மு.க. தானே தவிர நாங்கள் அல்ல. அந்த அனுதாபத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவசரம் அவசரமாக எங்கள் தலைவருடைய படத்தைப்போட்டு 'நண்பரின் நலிவு நீங்கிட வாக்களிப்பீர் உதய சூரியனுக்கு' என்று அறுவடை செய்யக் கருதியது தி.மு.க. தான். அந்த அளவுக்கு. . (குறுக்கீடு) . இன்னொரு தலைவருடைய படத்தைப் போட்டு அனுதாபத்தைப் பெற்று வர்க்குப் பெற்றிருக்கிறார்கள் பலர். தலைவருக்காக ஓட்டுப்போடுகிறேன் என்று ஓட்டுப்போடுபவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்று சொன்னேனே அப்படி என்னுடைய தொகுதியிலே கூட ஒருவர் எங்களுடைய தலைவருடைய படத்தைப்போட்டு சுயேச்சையாக நின்று ஏறத்தாழ 8 ஆயிரம் ஓட்டுக்களை வாங்கினார்கள். அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் ஏறத்தாழ 3 ஆயிரம், 4 ஆயிரம் வோட்டுக்களை எங்களுடைய தலைவருடைய படத்திற்காக பெற்று இங்கே வெற்றிபெற்று வந்திருக்கின்ற தி.மு.க. உறுப்பினர்கள் பத்து, பன்னிரண்டு பேர்களாவது. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. இரா. முத்தையா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எப்போதும் நடப்பதுதான். தமிழ்நாடு முழுவதும் அவ்வாறு போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. எல்லா பத்திரிகைகளிலும் அந்தப் படத்தை எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். இப்போது நீங்கள் ஓட்டவில்லை என்று சொன்னால் அந்த உருவப்படத்தை எப்படி வெளியிட்டார்கள்? எனவே அனுதாப அலையின் மூலம் . . . (குறுக்கீடுகள்) ஆனால் இன்றைக்கு



படமே ஓட்டவில்லை என்று சொல்கிறவர்கள் நாளைக்கு அவருக்காக எங்களுக்கு ஓட்டு வரவில்லை என்று சொல்வதற்கு அதிக நேரம் ஆகாது. அதற்காகத்தான் இந்தக் கருத்தைச் சொல்ல வருகிறேன். அந்த வகையில் ஏறத்தாழ ஒரு தொகுதிக்கு 3 ஆயிரம், 4 ஆயிரம் ஓட்டுக்களை, எங்களுடைய தலைவருக்காக விழுந்த ஓட்டுக்களைப் பெற்றவர்கள் அந்தத் தலைவருக்கு எந்தக் காலத்திலும் துரோகம் இழைக்காதீர்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். . . (மணியடிக்கப்பெற்றது)

**திரு. ஆ. நடராசன்** : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேசிய உறுப்பினருக்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால், நீங்கள் பேசும்போது பதில் சொல்லுங்கள்.

**திரு. டி. என். முருகானந்தம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த என்னுடைய செஞ்சி தொகுதி மக்களுக்கு நன்றியைச் சொல்லி, நான் வணங்குகின்ற அன்னை இந்திராவை இந்த நேரத்திலே நினைத்து, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச விழைகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்று இலங்கையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை, கொடுமைகளை, நம்மால், தாங்கிக்கொள்ள முடியவில்லை. 1948 ஆம் ஆண்டு முதல் இலங்கையிலே தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை இந்தியர்கள் மீது இலங்கை அரசு தொடுக்கின்ற காட்டுமிராண்டித்தனம் தாங்க முடியாத அளவு இருந்துகொண்டிருக்கிறது. இலங்கையில் தமிழர்கள் சிறுபான்மையினர் என்றாலுங்கூட மூன்றில் ஒரு பங்கினர் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. இப்படி இருக்கிற அவர்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் பங்கம் விளைவித்து, சுதந்திரம் இல்லையென்ற நிலையைக் காணும்போது நமக்கு வருத்தமாக இருக்கிறது. சேனநாயகா முதல் ஜெயவர்த்தனே வரை நமது இனத்தவரை ஒழித்து, இலங்கை மண்ணிலே நம் இனத்தவர் இல்லாமல் ஆக்குவதுதான் இலங்கை அரசினுடைய குறிக்கோள் என்று சொன்னால், அதைப் பார்த்துக் கொண்டு, சகித்துக் கொண்டிருப்பதற்கு நாம் ஒன்றும் பிணங்கள் இல்லை.

[திரு. டி. என். முருகானந்தம்] [1985 மார்ச் 14

இந்தியன் உலகிலே எந்த மூலையில் அடக்கி ஒடுக்கப்படுகின்றானோ, அப்போது, அல்லது மனித இனம் முரட்டுப் பிடிவாத சர்வாதிகார அரசியல்வாதிகளால் அழிக்கப்படுகிறது, நசுக்கப்படுகிறது என்று சொன்னால், நாமும் நமது அரசாங்கமும் அதைப் பார்த்துக் கொண்டிருந்ததாக வரலாறே இல்லை என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, இலங்கை உள்நாட்டு மந்திரி, மற்றும் அதிபர் ஜெயவர்த்தனே நம் இந்தியாவுக்கு வந்து சென்றதும் அதற்குப் பின்னாலே நம்முடைய உள்நாட்டு மந்திரி அவர்கள் இலங்கைக்குச் சென்றதும், அதற்குப் பின்னாலே நம்முடைய அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய தனிப் பிரதிநிதி திரு. பார்த்த சாரதி அவர்கள் இலங்கைக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியதும் அதற்குப் பின்னாலே அன்னை இந்திரா காந்தி ரூ. 1 கோடி நிதி அளித்து அங்கே இருக்கிற இலங்கை தமிழர்களுக்கு உதவி அளித்ததும் அதற்குப் பின்னாலே ஐ.நா. சபையில் 38-வது பொதுக் குழுவிலே அன்னை இந்திரா காந்தி அவர்கள் உலகத் தலைவர்களிடத்திலே இந்த இலங்கைப் பிரச்சினைபற்றி பேசி ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்த முயற்சித்ததும் அதற்குப் பின்னாலே இந்திய தேசிய காங்கிரசும், தமிழகக் காங்கிரசும், இளைஞர் காங்கிரசும், அதற்குப் பின்னாலே, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்திருக்கிற, கோடிட்டுக் காட்டியிருக்கிற முயற்சிகளை எல்லாம் வருத்தத்தோடு மனதிலே வைத்து சீர் தூக்கி நல்ல நிலைமையை எடுப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே கூறி வாழ்த்துகின்றேன்.

(முற்பகல் 10-20)

இதற்கு பின்னும் குட்டிச்சாத்தான் இலங்கை அரசு திமிர்பிடித்தப் போக்கிலே நமது இனத்தவரை அழித்துக் கொண்டிருக்கிறதென்றால் இலங்கை அரசிற்குப் பின்னாலே அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற ஏகாதிபத்திய நாடுகள் தூபம் போட்டுக் கொண்டிருக்கிறதோ என்று எண்ண வேண்டியுள்ளது. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், நீ உன்னுடைய வேலையை செய் என்ற போக்கிலே அவர்கள் அந்த அரசுக்குப் பின்னாலே தூபம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த எதிர்ப்புகளை முறியடிக்கிற



1985 மார்ச் 14] [திரு. டி. என். முருகானந்தம்]

வலிமையை இந்தியப் பேரரசு இப்போது பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழர்கள் மீது இலங்கை அரசும், அதற்கு துணைபோய்க் கொண்டிருக்கிற அரசுகளும் நடத்துகிற காட்டு தர்பாரை அடக்குகிற நாள் வெகு தூரத்தில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு எப்போதும் இல்லாத அளவிற்கு கிட்டத்தட்ட 20 ஆயிரம் தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். வருகின்றவர்கள் நம் நாட்டவர், நம் இனத்தவர் என்று சொன்னாலும் கூட அவர்கள் வருகின்ற இந்த நேரத்தில் நம்முடைய நிதிநிலைமையை பார்த்தால் அது ஏற்றதாய் இல்லை. அவர்களை பாதுகாக்கிற கடமையை பெற்றிருக்கிற நாம் அதே நேரத்தில் நம்முடைய நிதிநிலைமையையும் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த சூழ்நிலையில் தமிழக அரசு விழிப்பாக இருந்து துணிவோடு சில முடிவுகளை எடுக்கவேண்டுமென்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் கட்சி இந்த மாமன்றம் எடுக்கின்ற நல்ல முடிவுகளை வரவேற்க தயாராக இருக்கிறது.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து"

என்ற குறளுக்கேற்ப இந்தியப் பேரரசும் கொக்கினைப் போன்று காத்து இருக்கிறது. தக்க தருணத்தில் இலங்கையை கொத்த இந்தியப் பேரரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனித இனத்தின் மீது இலங்கை அரசு தொடுக்கின்ற தாக்குதலை உலக நாடுகள் எல்லாம் கண்டித்து வருகின்றன. ஆனால் சில ஏகாதிபத்திய நாடுகளின் வெறியூட்டுதலாலே இலங்கை அரசு தன்னுடைய கும்மாளத்தை நிறுத்தாமல் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். நம்முடைய மீனவர்களுக்கு ஆபத்து என்று சொன்ன உடனே இந்திய கப்பல் படையைச் சேர்ந்த ஒரு கப்பலை அங்கே அவர்கள் பாதுகாப்பிற்காக அனுப்பி வைத்தது இந்தியப் பேரரசு. இந்தியப் பேரரசு எப்போதாவது எங்கேயாவது சோடை போனதுண்டா? ஆனால் பல்வேறு உலக பிரச்சினைகளும், பஞ்சசீலக்

[திரு. டி. என். முருகானந்தம்] [1985 மார்ச் 14

கொள்கை அடிப்படையில் எடுக்கவேண்டிய முடிவுகளும் காரணமாக நாம் உடனடியாக ஒரு முடிவை எடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். இந்தியப் பேரரசு இலங்கை அரசின் தாக்குதலைக் கண்டு மனம் வெதும்புகிறது. அவர்களை சிதற அடித்து ஓட்டுகிற நாள் வெகு தூரத்தில் இல்லையென்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மனித உணர்வுகளை மதிக்காத, சுதந்திர உணர்வுகளை புறக்கணித்து செயல்படுகிற இலங்கை அரசு அவர்களுடைய பின்னங்கால்கள் பிடரியில் பட ஓட ஓட விரட்டுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கைத் தமிழர்கள் கேட்கும் கோரிக்கைகள் நியாயமானவை. அவைகளைப் பெற்று தருவது நம்முடைய தார்மீக கடமையாகும். ஆகவே இந்தப் பிரச்சினையை அண்டை நாட்டுப் பிரச்னை என்று நாம் ஒதுக்கிவிட முடியாது. நம்முடைய நாட்டவர்கள் அங்கே அழிக்கப்படுகிறார்கள். அவர்கள் அங்கே புறக்கணிக்கப்படுகிறார்கள். நாம் எந்த நிலையை எடுத்தேனும் அவர்களை காத்தே தீரவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை நாட்டின் உள்நாட்டு மந்திரி அவ்வப்பொழுது வாய் கொழுப்பெடுத்து பேசிக் கொண்டிருக்கிறார். அவரை அடக்க வேண்டும். இலங்கை அரசு தமிழ் இன எதிர்ப்பை முன் வைத்து ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த நாட்டின் முன்னாள் பிரதமரும், மக்களால் வெகுவாக ஆதரிக்கப்பட்டவருமான பண்டாரநாயகா அவர்களுடைய உரிமைகள் அங்கே பறிக்கப்பட்டிருக்கின்றன. அவருடைய ஓட்டுரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தேர்தலில் நிற்கும் உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. ஏன் குடியுரிமை கூட இன்னும் சில நாட்களில் பறிக்கப்படும் சூழ்நிலை இருந்கிறது. எப்படியாவது நம்முடைய இனத்தவரை, நம்முடைய நாட்டினரை நாம் காப்பாற்ற வேண்டும். ஆனால் காலத்தின் கட்டாயம் 'மயிலே மயிலே இறகு போடு என்றால் அது போடாது'. இந்த நிலையில் சிங்கள அரசை பணிய வைக்க போர்தான் முடிவு என்றால், படையெடுக்கவும் மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு இலங்கைவாழ் இந்தியர் உயிருக்கும் உடைமைக்கும் இலங்கை அரசு நிச்சயமாகப் பதில் சொல்லியாக வேண்டும்; உத்திரவாதம் அளித்தாக



1985 மார்ச் 14] (திரு. டி. என். முருகானந்தம்)

வேண்டும். நம்மவர்களை பிரிவினை வாதிகள் என்று சொல்லி, அந்த முத்திரையைக் குத்தி, அங்கே தாக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதை நாம் நிச்சயமாகக் கண்டித்தாக வேண்டும்.

இன்றைக்கு இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பங்களாதேஷ் பிரச்சினையில் அகதிகள் இலட்சக்கணக்கில் வந்த பிறகுதான் நாம் போர் தொடுத்தோம். அதைப் போன்று இன்றைக்கும் நம்மவர் அதிகமாக தமிழகத்திற்கு, இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே நடந்தது இங்கேயும் நடக்கலாம். அதனால் நமது சகோதரர்களுக்காக நாம் நமது மார்பிலே துப்பாக்கிக் குண்டுகளை ஏந்துவோம்.

அடுத்து, தமிழ்நாட்டில் தொழில் வளத்தைப் பொறுத்த வரையில் சிறு தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். அதே நேரத்தில் சிறு தொழில்களுக்கு அங்கீகாரம் அளிக்கும்போது, அந்த அங்கீகாரம் பெரிய தொழிற்சாலைகளை நடத்துகிறவர்களுக்குப் போகாதவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். படித்த இளைஞர்கள், பட்டதாரிகள் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் வெளிவந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும். அப்படியானால் தான் அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற மின்சார வெட்டு தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் மிகுந்த கவலையை அளித்திருக்கிறது. இப்போது ஒரு நாளைக்கு 6 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படுகிறது. இது போதாது. 6 மணி நேரம் என்பதை மாற்றி ஒரு நாளைக்கு குறைந்தது 12 மணி நேரமாவது மின்சாரத்தைக் கொடுத்து, தொழில்களையும் விவசாயத்தையும் ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய செஞ்சி தொகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். அது மட்டும் போதாது, அங்கே தண்ணீரும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செஞ்சியிலே இரண்டு

மேல்நிலை தண்ணீர்த் தொட்டிகளைக் கட்டி, தண்ணீர் விநியோகம் செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தாழவாய்-செஞ்சி-செட்டுவாய் பகுதிகளை இணைக்க இடையிலே தரைப்பாலம் மிக மிக அவசியமாகிறது. அங்கே தரைப் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக்கு இடையூறு இருக்கிற காரணத்தால் உலக்கூர் மேம்பாலத்தைக் கட்டுவித்து, போக்குவரத்தை சீர் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களை நான் சந்தித்து, என்னுடைய தொகுதியில் சில பஸ்களை விட வேண்டுமென்று கேட்டேன். அவர்களும் பெரியமனது பண்ணி, இரண்டு பஸ்களை விட தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை நாங்கள் எல்லாம் வரவேற்கிறோம். அது மட்டும் போதாது. மேலும் இரண்டு பஸ் ரூட்டுகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சியிலே உள்ள மருத்துவ மனைக்கு எக்ஸ்ரே பிரிவும், ஆம்புலன்ஸ் வண்டியும் மிகவும் அவசியம். அவற்றுக்கு தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. எஸ். நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே ஆளுநர் உரைமீது நன்றி சொல்லுகின்ற இந்த நேரத்திலே இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு பெறுவதற்கு எனக்கு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த தமிழக முதலமைச்சர், சரித்திர நாயகனாக விளங்குகிற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, திருநெல்வேலியிலிருந்து நான் வந்து பேசுவதற்கான வாய்ப்பை, பெருவாரியான வாக்குகள் அளித்து வெற்றிபெறச் செய்து, ஏற்படுத்திய வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.





இந்த மாமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினரான திரு. செம்மலை அவர்கள் ஆளுநர் உரையின்மீது நன்றி சொல்லி, முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகின்ற வகையிலே நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதோடு இணைந்து நின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும், காந்தி காமராஜ் தேசிய காங்கிரசும் ஒரு மகத்தான வெற்றியைப் பெற்றன. இந்த வெற்றியை அலை வீசிய வெற்றி என்றும், அனுதாப வெற்றி என்றும் இங்கே இருக்கிற தி.மு.க. நண்பர்கள், சட்ட

(முற்பகல் 10-30)

மன்ற உறுப்பினர்கள் விமர்சித்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்வேன். புரட்சித் தலைவருடைய அரசியல் நடந்துமுடிந்த சட்டமன்றத் தேர்தலிலே துவக்கப்பட்ட அரசியல் அல்ல, என்பது அவர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் அரசியலிலே இல்லாவிட்டாலும், தமிழகத்திலே ஒரு புகழ் பெற்ற ரிதனாக விளங்கி வந்தார்கள் என்பதற்கான சான்றுகள் அவர்களுக்குத் தெரியும் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். காலம் சென்ற சட்டமன்றத்தினுடைய சபாநாயகராக இருந்த கிருஷ்ணா ராவ் அவர்கள், புரட்சித்தலைவரைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்திலே, அவர்கள் ஒரு தங்கச் சுரங்கம் என்று சொன்னார்கள். கடுமையாக உழைத்து, அதிலே வருகின்ற பணத்திலே ஏழை எளியவர்களுக்கு வாரி வழங்குகிற வள்ளல் தமிழகத்திலே ஒருவர் உண்டு என்று சொன்னால், அது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். எனவேதான் அவர்களைத் தங்கச் சுரங்கத்திற்கு ஈடானவர், தமிழகத்திலே உள்ள தங்கச் சுரங்கம் என்று சொன்னார்கள்.

அதுபோல புரட்சித் தலைவரைப் பற்றிச் சொல்லுகின்றபோது நம்முடைய கிருபானந்தவாரியார் அவர்கள் வானத்திலே ஒரு சந்திரன் எப்படி இருக்கிறதோ, அதைப்போல, தமிழகத்திலே ஒரு சந்திரன் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்று சொன்னார்கள். அதுபோல் தமிழகத்திலே உள்ள மக்களுக்கு, சூரியனுக்கு அடுத்தபடியாக, சந்திரனுக்கு அடுத்தபடியாக, ஒளி வழங்கிக் கொண்டிருக்கின்ற மிகப் பெரிய வள்ளலாக இருப்பவர்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை நாம் எல்லாம் அறிவோம். இங்கே அடித்த அலை அவருக்காக அடித்த அலை என்று சொன்னால், அது ஆண்டிப்பட்டித் தொகுதியிலே மட்டும் வீசியிருக்கும். ஆனால் அவருடைய தலைமையிலே நிறுத்தி வைக்கப்பட்ட ஜனநாயக முற்போக்கு அணியைச் சேர்ந்த வேட்பாளர் பெற்றிருக்கிற வெற்றியைப் பார்த்தால், அது கடந்த காலத்திலே ஏற்பட்ட சாதனைகளின் பலன் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த அளவிற்கு எங்களுடைய இயக்கம் இன்றைக்கு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது, என்பதை நான் இங்கே சொல்லவேண்டும். ஆனால் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள், எந்தக் காரணத்தால், தமிழக மக்கள் இப்படி ஓட்டு அளித்தார்கள் என்பதற்கு விளக்கத்தைச் சொல்கிறபோது, எதை எதையெல்லாமோ அவர்கள் எண்ணிப் பார்த்திருக்கிறார்கள் என்பதை இங்கே அவர்கள் பேசிய பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த நண்பர்கள் நன்றாக புரிந்துகொண்டு இருக்கிறார்கள்.

இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில், கல்வித் திட்டங்களை எடுத்துக்கொண்டால், அன்றைக்கு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எத்தனை என்ஜினியரிங் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் இருந்தன என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைக்கு, தமிழுக்கு என்று தனியாக ஒரு பல்கலைக் கழகத்தையும், பெண்களுக்கு என்று தனியாக ஒரு பல்கலைக் கழகத்தையும் ஆரம்பிக்கின்ற அளவிற்கு இன்றைக்கு தமிழகத்திலே கல்விக் கூடங்கள் வளர்ந்து கொண்டு வருகின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அதுபோல, ஆளுநர் உரையிலே கல்வித்திட்டத்தைப் பற்றிச் சொல்லப்பட்டு இருக்கிறது. தமிழகத்தில் கிட்டத்தட்ட 1000 கோடி ரூபாய் அளவில் தொழில் கல்விக்காக செலவிடப்போவதாகவும் அதற்கான திட்டங்களையும் அறிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டத்திற்கு நாம் எல்லாம் நன்றி சொல்ல வேண்டாமா? என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுபோல் இன்றைக்கு பாலர் பள்ளிகள் துவக்கப்பட்டு அவைகள் எல்லாம் அரசுடைமையாக்குகின்ற அளவிற்கு திட்டங்களை ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிறார்கள் என்பதை நாம்,



எல்லாம் அதை படித்துப் பார்த்து புரிந்துகொள்ள முடியும். இப்படிப்பட்ட சாதனையை நிச்சயமாக நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த ஆளுநர் உரையைப் பற்றி விமர்சிக்கின்றவர்கள் இதிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று சொன்னார்கள். இதைக் கேட்டு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஏன் என்றால், வெற்றிலையை அடிக்கடி போடுகிறவர்களுக்கு நாக்கு மாத்துப் போகும் என்று சொல்வார்கள். அவர்களுக்கு 24 வகை உணவுகளைப் பரிமாறினால் கூட ருசிக்கவில்லையே என்று தான் சொல்வார்கள். உப்பைப் பார்த்து சொல் என்றால், சப்பென்று இருக்கிறது என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு ஆளுநர் உரையிலே இருக்கின்ற சில உயரிய கொள்கைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏதோ, எங்கோ ஒருசில குற்றங்களைக் கண்டால், அதை விமர்சிக்கின்ற தன்மையை இன்றைக்கு நாம் பார்க்கிறோம். இன்னும் சொல்லப்போனால், நடந்து முடிந்த தேர்தலில், மக்கள் எல்லாம் இந்தச் சத்துணவுத் திட்டத்தைப்பற்றி எந்த அளவிற்கு வரவேற்று இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்வேன்.

(முற்பகல் 10-40)

தானத்திலே சிறந்தது அன்னதானம் என்று சொல்வார்கள். அன்னதானம் என்று சொன்னால், எவ்வளவு பெற்றாலும் ஏற்றுக் கொள்கிற தன்மையிலே இல்லை என்பதை நாமெல்லாம் உணர்ந்திருக்கிறோம். பணம் எவ்வளவு கொடுத்தாலும் போதவில்லை இன்னும் வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் சாப்பாடு போடுகிறபோது, இனிமேல் சாப்பிட முடியாது இனிமேல் போட வேண்டாம் என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு அன்னதானம் தான் உலகத்திலேயே தானங்களில் சிறந்தது என்று சொல்வார்கள்.

எனவே, அப்படிப்பட்ட ஒன்றும் வழி இல்லாத ஏழைக் குழந்தைகளுக்கு, ஏறத்தாழ 80 லட்சம் குழந்தைகளுக்கு, இந்த சத்துணவுத் திட்டம் மிகப்பெரிய மனிதாபிமானம் உள்ள மானசீகமான திட்டமாகும் என்பதை நான் இங்கே சொல்லியாகவேண்டும். அந்த திட்டத்தைப் பாராட்டாத தலைவர்கள் இல்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த திட்டத்தினுடைய வரவேற்பு தான் நடந்து முடிந்த சட்ட

மன்றத் தேர்தலில், மிகப் பெரிய வெற்றியை ஈட்டித் தந்திருக்கிறது என்பதைக் கூட சொல்வேன். இன்னொன்றையும் சொல்வேன். தன்னிறைவுத் திட்டம் என்ற ஒரு உத்தான திட்டத்தைப் பற்றி.

கடந்த பல ஆண்டுகளில் எத்தனையோ கட்சிகள் இந்த தமிழகத்தை ஆண்ட நேரத்திலே, கிராமங்கள் என்ற ஒன்று நம் தமிழகத்தில் இருக்கிறது. அங்குள்ள மக்களுக்கு ரோடு வசதி வேண்டும். தண்ணீர் வசதிக்கான திட்டங்கள் வேண்டும்; அந்த கிராம மக்களுக்கு பள்ளிக் கூடங்கள் வேண்டும் என்று நினைத்துக் கூடப் பார்க்காத நிலைமையிலே தமிழகம் இருந்ததை நாமெல்லாம் பார்த்ததுண்டு.

ஆனால் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தான், இந்த தமிழகத்தில் உள்ள கிராம மக்களுக்காக, தன்னிறைவுத் திட்டம் என்ற ஒன்றைத் தீட்டி; ஊருக்குள்ளே கூட போக முடியாத அளவுக்கு ரோடு வசதி இல்லாத கிராமங்களுக்கெல்லாம் ரோடுகளை அமைத்துக் கொடுத்து, கிராம மக்களுடைய பெரு மதிப்பை அவர்கள் பெற்றார்கள் என்பதையும் நான் இங்கே சொல்லியாக வேண்டும். அந்த திட்டத்தினுடைய வெற்றிதான், இன்றைக்கு இந்த வெற்றி என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சத்திய சோதனை என்னும் நூலில் மகாத்மா காந்தியடிகள் எழுதியதைப் போல, 'உனக்கு உணவு இல்லாத நேரத்தில் ஒருவன் உணவு அளித்தான் என்று சொன்னால், நீ உயர்ந்த நிலையிலே இருக்கும்போது அவனுக்கு ஆயுள் காலம் முழுவதும் உணவு அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். உனக்கு உடை இல்லாத நேரத்தில் ஒருவன் உடை தந்து உதவினான் என்று சொன்னால், நீ உயரிய நிலையில் இருக்கும்போது அவனுடைய ஆயுள் காலம் முழுவதும் உடை அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதேபோல வீடு இல்லாத நேரத்திலே உனக்கு ஒருவன் வீடு கட்டித் தந்தான் என்றால், நீ நல்ல நிலைமையில் இருக்கும் போது அவனுக்கு மாட மாளிகையைக் கட்டித் தரவேண்டும் என்று சொன்னார்கள்.' அந்த தாத்பரியத்தின் அடிப்படையில் தான், புரட்சித் தலைவர் அவர்களின் திட்டங்களும், வெற்றிகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன என்று என்னைப் பொறுத்த மட்டில் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





இன்னும் சொல்லப்போனால், அரசாங்கத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் என்.ஜி.ஓக்களுக்கு, அவர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கும்போது இறந்து போனால், அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயை நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டும், அவர்களுடைய குடும்ப நல பராமரிப்பிற்காக கொடுக்க வேண்டும் என்று இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். திரு. கருணாநிதி அவர்களின் காலத்திலேதான் இந்தத் திட்டம் இன்டிராடியூஸ் செய்யப்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது என்று நான் கருதுகிறேன் என்றாலும் கூட, அன்றைக்கு அதை நடைமுறையில் எப்படிச் செய்தார்கள் என்பது என்.ஜி ஓக்களுக்கு மிக நன்றாகத் தெரியும். மாதம் 10 ரூபாய் அவர்கள் கட்டிவந்தால், அவர்கள் பணிபுரியும் போது இறக்க நேரிட்டால், அதற்காக அவர்களுக்கு 10 ஆயிரம் தரவேண்டும் என்று இருந்தது. அவர்கள் எவ்வளவு பணம் கட்டி வருகிறார்களோ அவை அத்தனையும் கூட்டி, அரசு கான்டிரிபியூஷனையும் சேர்த்து, அதற்குள்ள இன்டிரஸ்ட்டையும் கூட்டி, அவர்களுக்கு திரும்பி தந்து விடுவதாக அறிவித்திருந்தார்கள்.

ஆனால் இந்தத் திட்டம் ஏதோ இன்ஷ்யூரன்ஸ் திட்டம் போல் இருக்கிறது என்று அதை ஆட்சேபித்தார்கள். அதன்பிறகு என்.ஜி.ஓ.-க்கள் ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் கட்ட வேண்டும். அந்த ஒவ்வொரு ரூபாயையும் கூட்டி மொத்த 80 லட்சம் ரூபாயை பிரித்து, யார், யார் அப்படி " "died while in service" என்ற முறையில் வருகிறார்களோ அவர்களது குடும்பத்திற்கு பத்தாயிரம் வழங்குகிற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அதைப் பார்த்து என்.ஜி.ஓ.-க்கள் இது லாபகரமான திட்டம் அரசாங்கத்திற்குத்தான் ஆனால் என்.ஜி.ஓ.-க்களுக்கு அல்ல என்று விமர்சனம் செய்த காரணத்தாலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் அந்தத் தொகையை அதிகமாக்கித் தரவேண்டும் என்று அவர்கள் கேட்ட சூழ்நிலையிலேதான் அதை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த மாமன்றத்திலே உள்ள மன்ற உறுப்பினர்கள் அதைப் பாராட்ட வேண்டாமா என்றுதான் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

இப்படி எத்தனையோ பல திட்டங்கள் இந்த ஆளுநர் உரையிலே பாராட்டக் கூடிய வகையிலே இருக்கின்றன. அடுத்து, திருநெல்வேலி மிகப் பெரிய ஒரு நகரமாக இருக்கிறது. நெல் வயல்களால் சூழப்பட்டு, அழகான செழிப்பான நல்ல அற்புதமான ஒரு நகரமாக இருக்கிறது. ஆனால் அந்த நகரத்தினுடைய குறைபாடு என்னவென்றால், வீட்டுக்கு ஒரு வாசல் என்று சொல்வார்களே, அது போல திருநெல்வேலி நகரத்திற்கே ஒரு ரோடு தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நகரத்திற்கு மாஸ்டர் பிளேன் என்று ஒரு பிளானை கடந்தக் கால ஆட்சிக் காலத்தில் தயாரித்தார்கள். ஆனால் அது செயல்பட்டதாகத் தெரியவில்லை. அந்த திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்றையும் சொல்வேன். பை-பாஸ் ரோடு என்று சொல்லி 47வு என்று நேஷனல் ஹைவேசில் கன்னியாகுமரிக்குச் செல்கிற தேசீய நெடுஞ்சாலைத் திட்டம் ஒன்று நீண்டகாலமாக இருந்து வருவது யாவரும் அறிந்த உண்மை. அந்த ரோட்டிலே நகரத்திற்குள்ளேயே வந்து செல்கிற மாதிரி, பை-பாஸ் ரோட்டை உருவாக்கியிருக்கிறார்கள். அத்தகைய பை-பாஸ் ரோடு, கடந்த காலத்திலே விருதுநகரிலே போட்டு முடிக்கப்பட்டிருக்கிறது. சாத்தூரிலே போட்டு முடிக்கப்பட்டிருக்கிறது. கோவில்பட்டியிலே போட்டு முடித்திருக்கிறார்கள். ஆனால், பாளையங் கோட்டை திருநெல்வேலியிலே அந்த ரோட்டை சர்வே பண்ணி 36 லட்சம் ரூபாயை செலவிட்டு, லேண்ட் அக்குயர் பண்ணி இப்போது அந்த திட்டத்தை பழையபடி, இது இரண்டு நகரத்திற்கு இடையே வருகிறது. பத்தாண்டுகளுக்குள்ளே அந்த ரோடு கன்ஜஸ்டிக் ஆகிவிடும் என்று சொல்லி தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதை நான் நம்முடைய அமைச்சர் நாவலர் அவர்களிடத்திலே சொல்லி, இந்த திருநெல்வேலி நகரம் ஒரே ரோட்டை கொண்டுள்ளதாக இருக்கிறது. இன்றைக்கு டிராஃபிக் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது பை-பாஸ் ரோடு கிடையாது. நீண்டகாலமாக சர்வே செய்து அதைச் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்கள், பின்னர் சைனா வார் கிரைஸிஸ் வந்து விட்டது என்று ஒத்திப் போட்டு விட்டார்கள்.





இப்படி பல ஆண்டுகளாக ஒத்தி போடப்பட்டுக் கொண்டே வந்து இம்பிளிமெண்ட் செய்ய முடியாத நிலைமையிலே பாளையங் கோட்டை திருநெல்வேலி பை-பாஸ் ரோடு, இரண்டிற்கும் இடையே வருகிறது. பத்தாண்டுகளில் நெருக்கடியாக ஆகிவிடும் எனவே பை-பாஸ் ரோடு அந்த இடத்திலே வேண்டாம் என்று சொல்லி, வேறு வழியாக சர்வே செய்துக் கொண்டிருப்பதாக தெரிவித்துக் கொண்டேன், என்று சொல்லியிருக்கிறேன். நான் இப்போது இந்த அவை மூலமாக அமைச்சரிடத்திலே மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன். இது மிக அவசியமான ரோடு. நேஷனல் ஹைவேஸ் எடுக்காவிட்டாலும் ஸ்டேட் ஹைவேசாவது எடுத்து நடத்த வேண்டும் என்று நான் அவரிடத்திலே வேண்டுகோள் விடுக்கிறேன். அதை நிச்சயமாக செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து டவுனிலே வாழ்கிற அரிசனங்களுக்கு வீட்டு வசதி பெறுவது மிகக் கஷ்டமாக இருக்கிறது. டவுனிலே வாழ்கிற அரிசனங்கள் தாட்கோவிலோ அல்லது பஞ்சாயத்து யூனியனிலோ போய் வீடு கட்டக் கடன் வேண்டும் என்று கேட்டால், உங்களுக்கு ஸ்கீம் இல்லை என்று சொல்லுகிறார்கள். நான் இந்த மாமன்றத்திலே கேட்டுக் கொள்வது, கிராமப்புறத்திலே வாழ்கிற அரிசனங்களுக்கு, அவர்களுக்குரிய எல்லா சலுகைகளையும் வழங்குகிறபோது, நகரத்திலே வாழ்கிற அரிசனங்களை அரிசனங்களாக ஏற்றுக் கொள்ளாது, அவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை வழங்காது இருக்கும் நிலைமை தொடர்ந்து நடப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது என்று நான் கருதுகிறேன். எனவே நகர்ப்புறத்திலே வாழ்கிற அரிசனங்களுக்கும் தாட்கோவிலோ அல்லது முனிசிப்பாலிட்டி மூலமாகவோ வீடு கட்டுவதற்கு கடன்களை கொடுப்பதற்கு, ஒரு புதிய திட்டத்தை தயார் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல நகர்ப் பகுதிகளிலே அரிசனங்களுக்கு லே-அவுட் போட்டு வெல்ஃபேர் டிபார்ட்மெண்டிலேயிருந்து கொடுக்கிறார்கள். ஆனால் அந்த லே-அவுட்டைப் பெற்றுக் கொண்டு, முனிசிப்பாலிட்டியில் போய் பிளான் கேட்டால், முனிசிப்பாலிட்டி லே-அவுட் அப்ரூவல் ஆகவில்லை, வெல்ஃபேர் டிபார்ட்மெண்ட் மூலமாக ரோடுகளைப் போட்டுக் கொடுத்தால், செய்வோம் என்று

சொல்கிறார்கள். அதனால் லே-அவுட்டைப் பெற்றிருந்தாலும் அரிசன மக்களுக்கு பிளான் அப்ரூவல் ஆகாததினால் லோன் கிடைப்பதில்லை. அதையும் மீறி யாராவது சொந்த சக்தியில் வீடுகளைக் கட்டிக் கொண்டால், பிளான் அப்ரூவல் ஆகவில்லை என்று சொல்லி, அவர்களை பிராசிக்யூட் செய்து, 6 மாதங்களுக்கு கோர்ட்டில் தண்டனை விதித்து விடுகிறார்கள் அல்லது அபராதம் போட்டுவிடுகிறார்கள். எனவே, நகர்ப்புற அரிசனங்களுக்கு முனிசிப்பாலிட்டி லிமிட்டிலேயே வழங்குகிற லே-அவுட்டுகளை கொடுத்து, அல்லது வெல்பேர் டிபார்ட்மெண்ட் மூலம் ரோடுகளைப் போட்டுக் கொடுத்து, முனிசிப்பாலிட்டி நிலையிலேயே இவைகளையெல்லாம் முடித்துக் கொடுத்து, அவர்களுக்கு வீட்டு வசதிக்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று நான் அரசைப் பார்த்துக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

*** திரு. அ. பிரணவநாதன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினராக இந்த மன்றத்திலே இன்று பேசுவதற்காக வாய்ப்பு அளித்த, நான் வணங்குகின்ற தெய்வம் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எனக்கு வாக்களித்த என்னுடைய தொகுதி மக்களுக்கும் நன்றியை சொல்லி, இன்றையதினம் கவர்னர் உரையிலே எனக்கும் வாய்ப்பு அளித்ததற்கு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியை சொல்லி, சில கருத்துக்களை கூற விழைகின்றேன்.

மக்கள் உங்கள் மீது மிகப்பெரிய நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் நிறைவேற, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் வெற்றிபெற வாழ்த்துகிறேன் என்று ஆளுநர் அவர்கள் ஏற்கனவே சொல்லிவிட்டு சென்றார்கள். அந்த வகையிலே என்னுடைய உரையும் அமைந்திடும் என்கின்ற வகையிலே பேச இருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்றாவது பிறவி எடுத்து வந்ததாக மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களில் பலர் இங்கே குறிப்பிட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். அந்த அளவிற்கு மூன்றாவது முறையாக, மூன்றாவது பிறவி எடுத்து விட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்த பலவிதமான திட்டங்களை, புரட்சிகரமான





திட்டங்களை இந்த மன்றத்திலே வைப்பார் என்று எதிர்பார்த்தேன். காரணம், நான் இந்த மன்றத்திற்குப் புதியவன் என்ற முறையிலே அப்படியெல்லாம் வரும் என்று எதிர்பார்த்தேன். ஆளுநர் வாசித்துச் சென்ற உரையினை நான் பஞ்சாங்கமாகக் கருதுகிறேன். ஆண்டிற்கு ஒரு முறை வெளிவரும் பஞ்சாங்கத்தில், இராகுகாலம், எமகண்டம் போன்றவைகள் தொடர்ச்சியாக வருவதுபோன்றுதான் இந்த ஆண்டிலும் புதுமையான ஒரு பஞ்சாங்கமாக ஆளுநர் உரை இருக்கின்றதே தவிர, ஒரு அரசு, ஓராண்டுக் காலத்திற்கு கொடுக்கின்ற திட்டங்கள், லட்சியங்கள், கொள்கைகள் எதுவுமே இல்லை என்பதைப் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே நான்காவது பாராவில், ஆறாவது திட்ட காலத்தில், மற்ற மாநிலங்களைவிட தமிழகத்திற்குக் குறைந்த நிதியை மத்திய அரசு வழங்கியது என்ற குறைபாட்டைச் சொன்னாலும் கூட, அதிகப்படியான தொகை இந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கு வேண்டும் என்று கேட்கின்ற அளவு தெம்போ, திறனோ இந்த அரசுக்கு வந்ததாக என்னால் உணர முடியவில்லை.

ஆளுநர் உரையிலே ஐந்தாவது பாராவிலே, இலங்கைத் தமிழர்களைப்பற்றி ஆளுநர் அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இலங்கைப் பிரச்சனையில், நேற்றைய தினம் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் பொன்முத்துராமலிங்கம் அவர்கள் பேசியபிறகு, ஒரு தீர்க்கமான, தெளிவான முடிவிற்கு மாண்புமிகு அவை முன்னவர் நாவலர் அவர்கள் வந்திருக்கிறார்கள். அதாவது கச்சத் தீவினை மீண்டும் நாம் கேட்போம், நிச்சயமாக அரசு அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரத் தயார் என்று மார் தட்டிச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அவை முன்னவர் பேச்சினை நம்பி இலங்கைப் பிரச்சனையிலே அதிகமாகப் பேசவில்லை என்றாலும்கூட இலங்கையிலிருந்து வந்திருக்கின்ற அகதிகள் இன்றையதினம் 10,000 பேர்களுக்கு மேலாக, மண்டபம் முகாமில் தங்கியிருக்கிறார்கள். பல்வேறு மாவட்டங்களிலும் அவர்களை குடியமர்த்தியிருக்கிறார்கள். அப்படி அகதிகளாக வந்த பல பேர் படகுகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் படகுகளை அவர்கள் கடலிலேயே விட்டுவிட்டு பல நூறு மைல்களுக்கு அப்பால் அவர்கள் குடியேறியிருக்கிறார்கள். அவர்களுடைய சொத்துக்களை தமிழக அரசே பறித்துக்கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே அதை

[திரு. அ. பிரணவநாதன்] [1985 மார்ச் 14

அந்த அகதிகள் படகுகளை மண்டபம் முகாமில் நிர்வகிக்கின்ற அளவுக்கு, மண்டபம் முகாமில் வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே 7-வது பாராவில், ஆர்.எல்.இ.ஜி.பி., ஆர்.ஏ.டி.பி. மற்றும் என்.ஆர்.ஈ.பி. போன்ற திட்டங்களைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம், மத்திய அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்ற திட்டங்களே தவிர மாநில அரசுக்கும் அந்த நிதிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அந்த வகையில் மத்திய அரசின் நிதி உதவியுடன் தான் இன்றையதினம் சாலை வசதியானாலும் சரி, கண்மாய்கள் மராமத்தானாலும் சரி, ஹரிஜன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் டெவலப்மெண்ட் திட்டமானாலும் சரி, தமிழக அரசு ஒதுக்குகின்ற நிதியினை நிறுத்திவிட்டு மத்திய அரசு கொடுக்கின்ற நிதியின் மூலமாகத்தான் தமிழகத்தினுடைய கிராமப் புறங்களில் வேலைகள் நடைபெறுகின்றன. எனவே எங்களுடைய

(முற்பகல் 10-50)

தொகுதியைப் பொறுத்தவரையில், பல்வேறு சாலைகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன; பல்வேறு கண்மாய்கள் தூர் வாரப்படாமல் இருக்கின்றன; இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள களரிக் கண்மாய் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குப் பிறகு, 12 ஆண்டுக்காலமாக இன்னும் தூர் வாரப்படாமல் இருக்கிறது. அதனுடைய ஆயக்கட்டு மொத்தம் 5,000 ஏக்கர். பயன் அடைகின்ற கிராமங்கள் 40-க்கும் மேற்பட்டவை. கிராமங்களில் இப்படிப்பட்ட மிகப் பெரிய கண்மாய்கள் பராமரிக்கப்படவில்லை.

இராமநாதபுரத்திலிருந்து கீழக்கரை செல்வதற்கு இடையேயுள்ள தூரமான 10 மைல்களைக் கடப்பதற்கு ஒரு மணி நேரமாகிறது. அந்த அளவிற்குச் சாலைகள் குண்டுங்குழியுமாக இருக்கின்றன. தமிழகத்திலே இப்படிப்பட்ட பெரிய திட்டங்களுக்குப் பணம் ஒதுக்காத காரணத்தால், ஆர்.எல்.ஈ.ஜி.பி., என்.ஆர்.ஈ.பி. திட்டங்களின் மூலமாகத்தான் செய்து முடிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே ஏற்கனவே ரூ. 44½ கோடியை இந்தியத் துணைக் கண்டத்திலே அதிகமாக நாம் நிதியைப் பெற்று, செலவுகள் செய்திருக்கிறோம் என்று பெருமை அடித்துக் கொள்ளும் அரசு, இன்னும் எந்த வேலையையும் முழுமையாகச்



1985 மார்ச் 14] [திரு. அ. பிரணவநாதன்]

செய்யவில்லை. எனவே பல கோடி ரூபாய்களைப் பெறவேண்டும், பிற்று கிராமங்களுக்கு வேண்டிய பள்ளிகளையும், ஹரிஜன வீடுகளையும், பால் மாட்டுக் கடன் போன்றவைகளுக்காகவும், இதன் மூலமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து 12 ஆவது பாராவில் இந்த ஆண்டு திருப்திகரமாக உணவு நிலைமையிருக்கிறது. குறுவை விளைச்சல் 14 இலட்சம் டன் வந்திருக்கிறது என்றும், 6.27 இலட்சம் டன் கொள்முதல் செய்ததாகவும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

நான் பிறந்த மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம். இந்த மாவட்டத்து மக்கள் இந்த ஆண்டு வரலாறு காணாத அளவிற்கு மிகப் பெரிய பஞ்சத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பலர் கிராமங்களை காலி செய்துவிட்டு, தஞ்சாவூருக்குப் பிழைக்கச் சென்று விட்டார்கள். அங்கே ஒரு சில நடுத்தர குடும்பங்கள் எல்லாம் ஆடுமாடுகளைக் காப்பாற்றுவதற்கு வழியின்றி, குடிக்கத் தண்ணீர் இல்லாத நிலையில், மாடுகளுக்குத் தீவனம் இல்லாத நிலையில், அங்கே தங்களுடைய இல்லங்களையெல்லாம் இழந்து விட்டு, எங்கே செல்வது என்கிற ஒரு அவலநிலையில் இருக்கிறார்கள். எங்களுடைய தொகுதி மக்கள், மாவட்ட மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையைப்பற்றி, கவர்னர் அறிக்கையிலே ஒரு வார்த்தைகூட சேர்க்கவில்லையே என்று நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

இங்குள்ள பெரியோர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, ரெவின்யூ அதிகாரிகள் அத்தனை பேரும் 12 பைசா தீர்வையைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். 35 பைசா தீர்வையைக் கொடுத்தால்கூட, அது வறட்சியாக அறிவிக்கப்பட வேண்டிய ஒரு மாவட்டமாகும். ஆனால் அதற்கு மாறாக, 12 பைசா தீர்வையையே ரெவின்யூ அதிகாரிகள் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அது மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரியுமா, தெரியாதா என்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். அதிகட்டாய வசூலுக்கான உத்தரவை மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்து இருக்கிறார்கள்.

ஆணை எண் நே.மு.க. ஏ1/19083/85, நாள் 4—2—1986; டி.ஆர்.ஓ. கலெக்டர் ந.க. எண் 1803/85, நாள் 11—2—1985—ன்படி உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள்.

தயவுசெய்து பேரவைத் தலைவர் அவர்களும், இந்த மாமன்றத்தின் முன்னவராக இருக்கின்றவர் அவர்களும், நாங்களும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கென்று ஒரு ஆட்சித் தலைவர் இருக்கிறார் என்பதை அறிவோம். அவர்களிடமிருந்து ஒரு அறிக்கையைப் பெற்று, நிச்சயமாக நீங்கள் எங்கள் மாவட்டத்தை பஞ்சப் பிரதேசமாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு தனி அதிகாரிகள் இனிமேலும் வேண்டாம். பத்து ஆண்டு காலம் தனி அதிகாரிகள் அரசோச்சி விட்டார்கள். நிர்வாகத்திலே எப்படி எல்லாம் தங்களுக்கு வேண்டியவாறு மாற்றி தங்களுக்கு வேண்டியவைகளை செய்து கொண்டு இருக்கிறார்கள் என்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். எனவே, முறையான தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே மின் சக்தியைப் பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள். குடிசைகளுக்கு எல்லாம் மின் விளக்கு அளித்தாகி விட்டது என்று சொல்கிறார்கள். எங்கள் தொகுதியில் ஆயிரக் கணக்கான குடிசைகளுக்கு இன்னும் மின் விளக்குகள் பொருத்தப் படவில்லை. நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களே மின் இணைப்பு இல்லாத கிராமங்களாக இருந்து கொண்டு இருக்கிற நேரத்திலே மின் இணைப்புக் கொடுத்துவிட்டோம் என்று சொல்லுவது சரியல்ல. சிறு விவசாயிகள் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்து இருக்கிறோம் என்று சொல்வது எல்லாம் உண்மைக்கு மாறானது. கிராமங்களிலே ஒரு பழமொழி சொல்வார்கள். கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானத்தைப் பிளந்து வைகுண்டத்தைக் காட்டுவேன் என்று சொல்வானாம் அதைப் போல் தான் இது இருக்கிறது. எங்களுடைய தொகுதியிலே சாதாரண குடிசைகளுக்கு மின் விளக்குகள் கிடையாது. பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டு மனு செய்து ஐந்து ஆண்டு களுக்கு மேலாகியும் இன்றுவரை கிடைக்காத நிலைமைதான் இருக்கிறது.

தொழிற்துறையைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் வாலிநோக்கம் சால்ட் கார்ப்பரேஷன் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உருவாக்கப்பட்டு இன்றையதினம் அது நஷ்டத்தில் ஓடுகிறது என்று சொல்கிறார்கள். ஏற்கனவே





வேலையில் இருந்தவர்கள் அத்தனைபேரும் வீட்டுக்கு அனுப்பப் பட்டு விட்டார்கள். புராஜெக்ட் மேனேஜர் மற்றும் சில கிளார்க்குகள் மட்டும் இருக்கிறார்கள். வாலிநோக்கம் கார்ப்பரேஷன் என்பது ஒரு அருமையான திட்டம் ஆகும். 12 வகையான இரசாயன பொருள்கள் தயாரிக்கலாம் என்று அரசு அறிக்கையிலே கூறப்பட்டு இருக்கிறது. என்றாலும் இன்றைக்கு அது நஷ்டத்தில் ஓடுகிறது என்று தகவல் வந்திருக்கிறது. ஏற்கனவே, சென்ற ஆண்டு தொழில் அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் நேரடியாக வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே வாலிநோக்கம் தொழிற்சாலையை மிகப் பெரிய தொழிற்சாலையாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அங்கே ஒரு துறைமுகத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக 149.42 கோடி ரூபாய் செலவில் மதுரை, கோயம்புத்தூர், சேலம் போன்ற பெருநகரங்களுக்காக கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். எங்களுடைய முதுகுளத்தூர் மாவட்டத்திற்கு 8¼ கோடி ரூபாய் செலவில் முதுகளத்தூர், கடலாடி போன்ற பகுதிகளுக்கு குடிநீர் வசதி அளிக்கும் திட்டத்திற்காக ஒதுக்கி இருப்பதாக 8—1—1985-லே மாண்புமிகு மதிப்பிற்குரிய எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அது உண்மையா? பொய்யா என்று சந்தேகப்படுகிற சூழ்நிலையில் நான் இருக்கிறேன். ஏன் என்றால், ஏற்கனவே வாகைக்குளம் திட்டம் கொண்டுவரப்பட்டு அங்கே துப்பாக்கிச் சூடு நடந்து பலபேர்கள் இறந்தது எல்லாம் நமக்குத் தெரியும். வாகைக்குளம் திட்ட அடிக்கலிலே எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயர் இருக்கிறது, அங்கே குழாய்கள் இருக்கின்றனவே தவிர தண்ணீர் இல்லை. எங்கள் தொகுதிக்கு ராஜகம்பீரம் என்ற இடத்தில் வைகை யிலிருந்து குடிநீர் கொடுக்கிற திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில் 24-வது பாராவில் சொல்லியிருக்கிறார்கள். வாரபந்தி திட்டம் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. எங்களுடைய தொகுதிக்கு நிரந்தரமான திட்டமாக இருப்பது கிருதமால் திட்டமும், மலட்டாறு திட்டமும் தான்.

ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் 1975 ஆம் ஆண்டில் அதை துவக்கிவிட்டு வந்தார்கள். அதற்குப் பிறகு அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது. நிச்சயமாக அந்த கிருதுமால் திட்டத்தையும், மலட்டாறு திட்டத்தையும் இந்த அரசு மேற்கொள்ளுவதன் மூலம் பல லட்சக்கணக்கான ஏக்கர்கள் பாசனம் பெறக்கூடிய வகையில் கடலாடி தொகுதியும், முதுகுளத்தூர் தொகுதியும் வளம் கொழிக்கும் பகுதிகளாக திகழ முடியும் என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. சத்திய மூர்த்தி அவர்கள் ஒரு விழாவிலே பேசும்போது சொன்னார்கள். அங்கே 4¼ கோடி ரூபாய் செலவில் மலட்டாறு திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டார்கள் என்று சொன்னார்கள். ஆளும் கட்சி உறுப்பினர் சொல்லுவது உண்மையாக இருக்கும் என்று நம்புகிறேன். அந்தத் திட்டத்தை உடனடியாக துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எட்டாவது வகுப்பு வரை குழந்தைகளுக்கு சீருடை வழங்குவது பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதில் தகுதி வாய்ந்த பிள்ளைகள் என்று சொல்லியிருக்கிறார்கள். குழந்தைகளில் தகுதி வாய்ந்த பிள்ளைகள் என்று சொல்ல வேண்டாம். ஏன் என்றால் அந்த வார்த்தை இருப்பதால் அங்குள்ள அமைப்பாளர்கள் யார் யார் வீட்டு குழந்தைகள் வேறு கட்சிக்கு வோட்டு போட்டார்கள் என்று பார்த்து அவர்களுக்கு எல்லாம் தகுதியில்லை என்று சொல்லக்கூடிய ஒரு நிலை உருவாகக்கூடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குழந்தைகளைப் பொறுத்தவரை அனைத்து தரப்பினருக்கும் சீருடை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இடிந்த பள்ளிக்கூடங்களை கட்டுவது பற்றி சொல்லியிருக்கிறார்கள். புதிய பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமங்கள் பல இருக்கின்றன. புளியமரத்தடியில் நடக்கின்ற பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன, மாட்டுக்கொட்டகைகளில் நடக்கின்ற பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஆகவே, கக்கூஸ் கட்டுவதை நிறுத்திக் கொண்டு பள்ளிக்கூடங்கள் கட்டுவீர்களேயானால் பிள்ளைகள்





படிப்பதற்கு வசதியாக இருக்கும். மதுரை மாநகராட்சியிலே கக்கூஸ்கள் சமூக விரோதிகளால் இன்றையதினம் எதற்காக பயன் படுத்தப்படுகின்றன என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கக்கூஸ் கிராம மக்களுக்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதுகுளத்தூருக்கு ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடலாடியை ஏற்கனவே தாலுக்கா தலைநகரமாக ஆக்க வேண்டும் என்ற புரப்போசல் அரசிடம் இருக்கிறது. ஒன்றரை லட்சம் மக்களைக் கொண்ட யூனியன் பெரியதாக இருக்கிற காரணத்தால் கடலாடி யூனியனை இரண்டாகப் பிரித்து 60 பஞ்சாயத்துகள் அடங்கிய அந்த யூனியனை சாயல்குடி யூனியன் என்றும், கடலாடி யூனியன் என்றும் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கடலாடியை தாலுக்கா தலைநகரமாக ஆக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய சில சகோதரர்கள் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படத்தோடு கலைஞர் அவர்கள் படத்தைப்போட்டதால் 15 பேர்கள் வந்து இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நடந்து முடிந்த பெரியகுளம் பாராளுமன்ற தேர்தலில் எங்களுடைய தலைவர் படத்தைப் போட்டு அதிலே இரட்டை இலையை கொடியை போட்டு நீங்கள் வாக்கு கேட்டீர்கள். அதை எதிர்த்து திரு. சம்பம் ராமகிருஷ்ணன் அவர்கள் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர்கள் பற்றி திராவிட முன்னேற்றக் கழக அறிக்கையில் ஏதாவது உண்டா என்ற வினாவை சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் கேட்டார். நான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு அதை படித்துக்காட்டலாம் என நினைக்கிறேன்.

ஈழத் தமிழர் இனப்படுகொலைக்கு ஆவேசத்தை கண்டித்து கொதித்தெழுந்தது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மக்கள் அறிவர். ஆனால் இந்திய பேரரசு மெத்தனமாக இருப்பது நாங்கள் விரும்பும் தமிழர் என்ற ஒரே காரணத்தால் தான். அந்த இனப்படுகொலைக்கு எதிராக இந்திய அரசு சர்வதேச கருத்தைத் திரட்டாமல் இருந்ததை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

தமிழ் ஈழம் ஒன்றினால்தான் அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்று உறுதியாக நம்புகிறோம் என்று தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறோம். இந்த அளவுக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். நமது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பெரியகுளம் நாடாளுமன்ற தேர்தல் சமயத்தில் கலைஞர் படத்தோடு இரட்டை இலை சின்னத்தைப்போட்டு அ.இ.அ.தி.மு. கழகம் வெற்றிப் பெற்றது என்று சொன்னார்கள். அதற்கு ஆதாரம் அவர் வைத்து இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். இது ஒரு கேலிக் கூத்தாக இருக்கிறது என்பதை நான் உங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படிப் போட்டதாக அவர்கள் சொல்கிறார்கள்; இந்த உறுப்பினர் அப்படிப் போடப்படவில்லை, அதற்கு ஆதாரம் கிடையாது என்று சொல்கிறார்கள். இரண்டும் அவைக் குறிப்பிலே இருக்கின்றன.

* **திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பெரியகுளம் இடைத் தேர்தல் நேரத்தில் ஒரு சுவரொட்டி, கலைஞருடைய படத்தைப் போட்டு, அதன் அடியிலே இரட்டை இலைச் சின்னத்தைப் போட்டு, என்ன காரணத்தினாலேயோ, எப்படியோ, இரட்டை இலைச் சின்னத்தைக் கலைஞருடைய படத்தோடு போட்டு ஒட்டப்பட்டிருந்ததை நானே பார்த்தேன். அதை வேண்டுமானால் நாங்கள் செய்யவில்லை என்று ஆளுங் கட்சி நண்பர்கள் சொல்லலாமே தவிர, சுவரொட்டி போடப்படவில்லை; சுவரொட்டி எங்குமே காணப்படவில்லை என்று சொல்வது தவறு. ஏனென்றால் நாங்கள் நேராகப் பார்த்தோம்.

**திரு. இரா. முத்தையா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெரியகுளம் இடைத்தேர்தல் நேரத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் பிரச்சாரப் பணியில் பொறுப்பேற்றிருந்தவன் நான்தான். எந்த இடத்திலேயும் கலைஞர் அவர்களுடைய படத்தோடு நாங்கள் சுவரொட்டி கொடுக்கவும் இல்லை; ஒட்டவும் இல்லை.





ஆனால் ஒருவேளை அந்தப் படத்தைப் போட்டு இரட்டை இலையையும் போடுகின்ற காரணத்தினால் கொஞ்சம் ஓட்டு குறையட்டுமே என்று யாராவது செய்த வேலையாக இருக்கலாம்.

* **திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவரவர்களே இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாங்கள் செய்யவில்லை என்று சொன்னதில் எனக்கு மறுப்பு இல்லை. யார் செய்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்கின்ற அந்தச் சூழ்நிலையில் உள்ளபடியே அரசாங்கம் ஒருவேளை முயற்சி எடுத்துக் கொண்டிருந்தால் கண்டுபிடித்திருக்கலாம். ஆனால் எப்படி நடைபெற்றிருந்தாலும், கலைஞருடைய படமும், இரட்டை இலைச் சின்னமும் போட்ட சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது என்பது அந்தச் செய்தி அளவிற்கு அது உண்மை. அது சட்டமன்றத்திற்கு அப்பாற்பட்டது.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த நமது புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைக் கூறி, இந்த வாய்ப்பைப் பெறுவதற்கு இன்னொரு காரணமாக இருந்த என்னுடைய தாம்பரம் சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த தோழர் அவர்கள் இரட்டை இலைச் சின்னத்தைப் போட்டு கலைஞருடைய படத்தைப் போட்டு இரட்டை இலைக்கு ஓட்டுக் கேட்டோம் என்று சொன்னார்கள். இது உலக அதிசயங்களில் எட்டாவது அதிசயமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைப்பற்றிப் பேசி முடித்துவிட்டார்கள்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மன்னிக்கவும். நான் இந்தச் சட்டமன்றத்திற்குப் புதியவன். ஆனால் தாம்பரம் நகராட்சி மன்றத்திலே ஒரு உறுப்பினராக, துணைத் தலைவராக, தலைவராக இருந்து இதுபோன்று அங்கே பல நிகழ்ச்சிகள் நடந்ததைக் கண்டவன். ஆனால் இங்கே வந்தாலும் அதே நிலைதான் இருக்கிறது என்பதைக் கண்டு வருந்தப்படாமல் இருக்க முடியவில்லை. ஒரே நிலையிலேயே இருக்கிறார்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள்,

எப்படிப் பேசினாலும் ஆளுங் கட்சியை எந்த விஷயத்திலேயும் தாக்கியே பேசுவது என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் என்னதான் பதில் சொன்னாலும் ஏற்கப் போவதில்லை. அதே நேரத்தில் ஆளுங்கட்சியான நாங்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றோம், நீங்கள் சொல்லுகின்ற நல்ல கருத்துக்களைக் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் எங்களுடைய புரட்சித் தலைவரவர்களுக்கு உண்டு; இங்குள்ள எங்கள் அனைவருக்குமே உண்டு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அருமை மன்றப் பெரியோர்களே நான் திரு. ரகுமான்கான் அவர்களுடைய பேச்சை மேடையிலே கேட்டதுண்டு. இப்போது தான் சட்டமன்றத்திலே கேட்கின்ற வாய்ப்பைப் பெற்றேன். அவர் பேசுகின்ற நேரத்தில் அதைச் செய்ததாலா உங்களுக்கு ஓட்டுப் போட்டார்கள், இதைச் செய்ததாலா உங்களுக்கு ஓட்டுப் போட்டார்கள் என்று பத்துப் பன்னிரண்டு காரண காரியங்களைச் சொல்லி எதற்காக உங்களுக்கு ஓட்டுப் போட்டார்கள் என்றெல்லாம் கேட்டு எங்களுக்கு 86 இலட்சம் பேர் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள் என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

(முற்பகல் 11-10)

உங்களுக்கு 86 இலட்சம் வாக்குகள் அளிக்கப்பட்டது உண்மை. ஆனால் எங்களுக்கு ஒரு கோடியே 26 இலட்சம் வாக்குகள் அளித்து எங்களை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். நீங்கள் தேர்தல் நேரத்திலே எவ்வளவோ குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். நீங்கள் குற்றச் சாட்டு சொல்லாத மேடையே கிடையாது. எங்களை எப்படி எப்படியெல்லாமோ தாக்கினீர்கள். என்னுடைய தொகுதியில், தாம்பரத்திலிருந்துதான் தி.மு. கழகத்தினுடைய தலைவர் பேர்சைத் தொடங்கினார்கள். அன்றைய தினம் அவர் பேசிய பேச்சுக்களை டேப் எடுத்துக்கூட வைத்திருக்கிறோம். முதல் காரணமாகச் சொன்னார்கள், எம்.ஜி.ஆர். அவர்களுடைய உடல்நலம் பற்றி. அவர் 10 நாள் குழந்தையாக இருக்கிறார் என்று சொன்னார்கள். அவர் சிகிச்சை பெற்று வந்தாலும் இந்த மன்றத்தில் வந்து செயல்பட முடியாது அவர் ஒரு 10 நாள் குழந்தை; எனவே அந்த 10 நாள் குழந்தையை வைத்து





ஆட்சி நடத்த முடியாது என்று அப்போது அவர்கள் கூறினார்கள். ஆனால் அந்தப் பத்து நாள் குழந்தை உதைத்த உதை இன்றைய தினம் எதிர்க் கட்சிகள் எங்கே இருக்கின்றன என்று கூடத் தெரியாத நிலைமையை ஏற்படுத்தி இருக்கின்றது. எனவே நாம் எல்லாம் குற்றத்தை மாறி, மாறிச் சொல்கிறோமே தவிர ஒரு உண்மையைக் கவனிக்கத் தவறிவிட்டோம். அருமைப் பெரியவர்கள், என்னைவிட மூத்தவர்கள், அரசியல் அனுபவம் உள்ளவர்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். ஆனால் அரசியல் காரணத்திற்காக, குற்றம் சொல்ல வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, மன்றத்தின் நேரத்தைக் கெடுத்து, தேவையில்லாத குற்றச்சாட்டுக்களைச் சொல்வதை உண்மையிலேயே நான் ஏற்றுக்கொள்வதாக இல்லை.

நாம் எல்லாம் நினைத்துப் பார்த்தோம். இந்த இந்தியாவில் பல நெருக்கடிகள் உள்ளன என்பதை நாம் அனைவரும் அறிவோம். எனக்கு முன்னாலே திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் பேசியதைப் பார்த்தால் இந்த நாட்டில் அவர் இந்த நாட்டிலே இப்போதுதான் வந்து பிறந்திருப்பதாகத் தெரிகின்றது. எவ்வளவோ குறைகளைச் சொல்கிறார்கள். நீங்கள் ஓட்டுக் கேட்கப் போகும்போது வாக்காளர்கள் என்னென்ன குற்றத்தையும், குறைகளையும் உங்களிடத்திலே சொன்னார்களோ அதேபோன்று எங்களிடத்திலும் சொன்னார்கள். ஆகவே பிரச்சினைகளை எப்படி, எப்படி யாரிடத்திலே சொல்லித் தீர்க்கலாம் என்ற வகையிலேதான் பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறோம். ஆனால் பிரச்சினைகள் என்பது வீட்டிலே இல்லையா? அது நாட்டுக்கு மட்டும்தான் பொதுவானதா? வீட்டுப் பிரச்சினைகளே இல்லையா? அண்ணன், தம்பிகளுக்குள்ளேயே எவ்வளவோ முரண்பாடுகள் இருக்கின்றன. அதை எல்லாம் எண்ணிப் பார்க்காமல் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு பேசுவது அவ்வளவு அழகாக இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இந்த மன்றத்திலே அலையின் மூலமாகத்தான் வந்தோம் என்றார்கள். அலை என்பது தமிழகத்தோடு சரியா? தமிழகத்திலேகூட தாம்பரத்திற்கு இந்தப் பக்கம் அலை அடித்ததா? அப்படி உங்களுடைய வாதத்தின்படியே வைத்துக் கொண்டாலும் சென்னையிலே ஏன் அலை அடிக்கவில்லை?

[திரு. எல்ல. இராசமாணிக்கம்] [1985 மார்ச் 14

சென்னையிலே நீங்கள் எத்தனையோ பேர் ஜெயித்திருக்கிறீர்களே, எனவே மக்கள் சிந்திக்கத் தெரியாதவர்கள் என்ற போக்கிலே அலை தொடங்கியது என்றெல்லாம் பேசுவது நியாயமான காரியமல்ல.

அடுத்து இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1980-லே நடந்த தேர்தலில் மத்திய அரசிலே அன்னை இந்திரா அவர்கள் தான் பிரதமராக வரவேண்டும் என்று கேட்டபோது அன்றைய தினம் நீங்களும், அவர்களும் சேர்ந்துதான் மெஜாரிட்டி இடத்தைக் கைப்பற்றினீர்கள். ஆனால் அதிலிருந்து ஆறு மாதம் கழித்து சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடத்திய நேரத்திலே நாங்கள் பெரும்பான்மையாக மக்களின் வாக்குகளைப் பெற்று இங்கே ஆட்சி அமைத்திருக்கிறோம். எனவே ஐந்து ஆண்டு ஆட்சிக் காலத்தில் எங்களுடைய ஆட்சிக்குக் கிடைத்த எங்களுடைய கொள்கைகளுக்குக் கிடைத்த, நாங்கள் செய்த தியாகத்திற்குக் கிடைத்த, செய்த உழைப்புக்குக் கிடைத்த, வெற்றிதான் எங்களுடைய வெற்றி என்பதை மறுக்க முடியாது. பொதுவாக எல்லா மாண்புமிகு உறுப்பினர்களையும் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். நமக்கு இருக்கிற ஒரு தர்மசங்கடமான நிலை—1984 அக்டோபர் 31 ஆம் தேதி—நடந்த ஒரு பயங்கர நிகழ்ச்சி நாம் அனைவருமே அடிக்கடி எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக அந்தச் சம்பவத்தைச் சொல்கிறேன். இந்தியாவின் பிரதமராக இருந்த அன்னை இந்திரா அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். யாரால்? தனக்கு மெய்க் காப்பாளராக இருந்த சீக்கியர்களால் சுட்டுக் கொல்லப் பட்டார்கள். அந்தச் சீக்கியர் யார்? பிரச்னைகள் ஆயிரம் இருக்கலாம். ஆனால் எடுத்த முடிவை நாம் யாரும் ஆதரிக்க வில்லை என்றாலும் ஒன்று நிச்சயம். ஒரு உயிரைக் காக்க வேண்டிய காப்பாளனே அன்னை இந்திராவினுடைய உயிரைப் பறிக்கின்ற ஆட்பாளனாக மாறினால் நாமெல்லாம் வருத்தப் படாமல் இருக்க முடியாது. இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்டு, இந்திய மக்களிடமிருந்து வரியைப் பெற்று, அந்த வரியின் மூலமாக, சம்பளத்தை அவர்களுக்குக் கொடுத்து, இந்தியப் பிரதமரைக் காக்க வேண்டுமென்று வைத்திருந்தவனுடைய போக்கு மாறி இப்படி ஒரு உயிரை மாய்த்தார்கள் என்றால் அதை என்னவென்று சொல்வது?



சென்னை-600 008 136366

1985 மார்ச் 14] (திரு. எல்ல. இராசமாணிக்கம்)

எதிர்க்கட்சிப் பெரியவர்களைப் பார்த்து கேட்கிறேன், இருக்கின்ற எட்டு இலட்சம் என்.ஜி.ஓ.-க்களில் அரசுக்கு ஆதரவாளர்கள் எத்தனை பேர்கள் என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஆதரவாக இருக்க வேண்டாம், போடுகின்ற சட்டங்களை, போடுகின்ற திட்டங்களை ஒழுங்காகவும் முறையாகவும் நடத்திச் செல்கின்ற பொறுப்பிலே உள்ள அதிகாரிகளில் பலர் தங்கள் பணியைச் சரியாகச் செய்யவில்லை என்பதற்கு உதாரணம் காட்ட எனக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற மாதத்தில் நான் வெற்றி பெற்றவுடன் எனது அலுவலகத்தில் இருந்தேன். ரிக்ஷா தொழிலாளர்கள் மூன்று பேர்கள் சேர்ந்து மயக்கமுற்ற நிலையில் இருந்த ஒரு பெரியவரை என் அலுவலக அறைக்கு அழைத்து வந்தார்கள். அழைத்து வந்து, "அந்தப் பெரியவர் பஸ்ஸிலே இருந்து இறங்கினார். இறங்கியவுடன் மயக்கமுற்றார். யாரும் அவருக்கு உதவி செய்யாததால், ரிக்ஷாவிலே ஏற்றி, பக்கத்திலே உள்ள மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றோம். அங்கேயிருந்த டாக்டர், 'இந்தப் பெரியவர் யார்' என்று எங்களைப் பார்த்துக் கேட்டார். 'எங்களுக்குத் தெரியாது' என்று சொன்னோம். 'தெரியாதவரை இங்கே அனுமதிக்க முடியாது' என்று சொல்லி திருப்பி அனுப்பி விட்டார்கள்" என்று சொன்னார்கள். உடனடியாக நானே மயக்கமுற்ற வயதானவரை அழைத்துச் சென்று, ஏன் அப்படிச் சொன்னீர்கள் என்று கேட்டேன். அவர் அப்படிச் சொல்லியிருந்தால் கூட பரவாயில்லை. எடுத்துக் கொண்டு போங்கள் என்று சொன்னவுடன், ரிக்ஷாக்காரர்கள் எங்களை எங்கே எடுத்துக் கொண்டு போகச் சொல்லியிருக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு அந்த டாக்டர், கொண்டுபோய் அந்தத் தண்டவாளத்திலே போடு என்று சொன்னார். ஆஸ்பத்திரிக்கு வந்தவுடனே அனுமதித்து ஏதாவது சிகிச்சை செய்திருந்தால் அந்தப் பெரியவருக்கு நோயும் போயிருக்கும், டாக்டருடைய கடமையும் கூட அது. அதை விடுத்து அவர் செய்த இந்த அக்கிரமமான செயலை, அங்கே நிறைய ஜனங்கள் கூடி இருந்ததால், அந்த இடத்திலே நாமே கண்டித்துப் பேசினால், விபரீதங்கள் ஏற்படும் என்று கருதி, மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை மேலதிகாரிகளிடம் சொல்லி, அந்த டாக்டரிடம், நீங்கள் உதவி செய்கிறீர்களோ,

[திரு. எல்ல. இராசமாணிக்கம்] [1985 மார்ச் 14

இல்லையோ, நன்று நிச்சயமாகச் சொல்லுங்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள், அந்தப் பெரியவரைக் கொண்டுபோய் தண்டவாளத்தில் போட்டுவிட்டுப் போ என்று நீங்கள் சொன்னதாக. இது எந்த விதத்தில் நியாயம் என்று கேட்ட பொழுது, அவர் பதிலே கூறவில்லை. அவர் வெறுமனே இருந்தவுடன் நான் அங்கிருந்து வந்துவிட்டு, மற்றைய பெரியவர்களிடம், என்னுடைய குறிப்போடு, பொதுமக்கள் கொடுத்த புகாரைக் கொடுத்தேன். அதைப் போல் எத்தனையோ நிகழ்ச்சிகளைச் சொல்ல முடியும். இந்த மன்றத்திலே உள்ள நாம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வந்திருக்கிறோம். தேவையற்ற விவாதங்களைக் கிளப்பி, பிரச்சினைகளை எங்கோ கொண்டு போகக்கூடாது. நாமெல்லாம் பலர் அதுபோன்ற நிலையில் இருக்கிறோம் என்பதை உணரவேண்டும்.

நம்முடைய மதிப்பிற்குரிய ரகுமான்கான் அவர்கள் சகோதரி ஒருவர் கற்பழிக்கப்பட்டது பற்றிக் கூறிய நேரத்திலே உண்மையிலே வேதனையாக இருந்தது. யாராவது அதற்கு ஆதரவு காட்டுகிறோமா? நாம் இதற்கு ஆதரவு கொடுப்போமா? நல்ல அரசியல் பாரம்பரியம் மிக்கவர்கள், யாரேனும் இந்தப் பிரச்சினையில் தலையிடுவோமா? தயவுசெய்து அதை எண்ணிப் பார்க்க வேண்டும். தயவுசெய்து அதை அரசியல் பிரச்சினையாக்கி, முதலமைச்சரோ அல்லது பொறுப்பு வகிக்கின்ற அமைச்சர்களோ அதற்குக் காரணம் என்று கூறுவது பொருத்தமுள்ள காரியம் அல்ல. அதுபோன்ற நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் தெரிந்தும் தெரியாமலும் பல இடங்களிலும் நடக்கலாம். நாம் நினைத்தால், அதை முறையாகவும் ஒழுங்காகவும் அந்தந்தப் பகுதியிலே தீர்த்துக்கொள்கின்ற முடிவை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்து, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் பேசுகின்ற வாய்ப்பை கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

(முற்பகல் 11.20)

*** திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் எட்டாவது பொதுத் தேர்தலில் என்னுடைய கட்சியின் சார்பாக அன்னை இந்திரா காந்தி அவர்கள், என் கட்சித் தலைவர் இராஜீவ் அவர்கள், ஆசிர்வாதத்துடன் வேட்பாளராக நின்று இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில்



1985 மார்ச் 14] [திரு. எஸ். வேணுகோபால்]

நான் வெற்றிபெறுவதற்கு எனக்கு வாக்களித்த பெருமக்களுக்கும், கூட்டணி நண்பர்களுக்கும் நான் முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலக சமாதான தலைவி அன்னை இந்திரா காந்தி அவர்கள் இந்த நாடு நல்லதொரு நிலையில் இருக்கவேண்டும் என்பதற்காக சிந்திய ஒவ்வொரு துளி ரத்தமும் பயன்பட வேண்டும் என்ற முறையில் அவரை நினைவு கூறும் வகையில் அவருடைய படத்தை இந்தப் பேரவையில் வைக்கப் போகிறோம் என்று அறிவித்த போது நாங்கள் எல்லாம் மகிழ்ந்தோம். அந்த அறிவிப்பை நாங்கள் அனைவரும் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் இந்திய நாட்டுச் சுதந்திரத்திற்குப் பின்னால் எழுத்துரிமை, பேச்சுரிமை, ஓட்டுரிமைகளைத் தந்த ஜவஹர்லால் நேரு அவர்களுடைய படத்தையும் இந்த மன்றத்திலே வைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையிலே தமிழர்களை அங்கே இருப்பவர்கள் மிகக் கொடுமையாகத் தாக்குகிறார்கள். அவர்களின் தாக்குதலுக்குத் தப்பி தமிழர்கள் அகதிகளாக நம் நாட்டிற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் பல்வேறு கட்சிகள் இந்தியப் பிரதமர் இந்தப் பிரச்னையை சரியாக அணுகவில்லை, உடனே அங்கே இராணுவத்தை அனுப்பவேண்டும் என்ற முறையில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றை தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இலங்கைத் தமிழர் பிரச்னையை இன்றைக்கு என்னுடைய கட்சியின் தலைவராக இருக்கிற இராஜீவ் காந்தி அவர்களால் தான் தீர்க்க முடியும் என்பதை இந்த மாமன்றம் உணர்ந்தாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கேயிருந்து வருகிறவர்களுக்கு போதிய இடவசதியையும், மற்ற வசதிகளையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மத்திய சர்க்காரால் தான் அதிகமான நிதியுதவி செய்யப்படுகிறது. மாநில சர்க்காரும் அதிகமான நிதியுதவியை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இராமேஸ்வரத்தில் இருக்கிற மீனவர்கள் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்றால் 1974 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமல்படுத்த வேண்டும். அதற்குப் பின்னாலே

செய்யப்பட்ட ஒப்பந்தம்தான் மீனவர்களுக்குப் பாதகமானது ஒப்பந்தம் என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்ட விழைகிறேன். இலங்கை சர்பயத்திலே பட்டு இறந்தவர்களுக்கு, மீனவத் தோழர்களுக்கு தமிழக அரசு விசைப்படகுகளை வழங்குவதற்கு வழிமுறைகளைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை கடற்படையால் 35 மீனவர்களும், 24 விசைப்படகுகளும் அங்கே கைப்பற்றப்பட்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதில் 17 மீனவர்களையும், 17 விசைப்படகுகளையும் தான் மீட்டிருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்டி மீதம் அங்கே இருக்கிற மீனவர்களையும், விசைப்படகுகளையும் நாம் கேட்டுப் பெற வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க ஆசைப் படுகிறேன்.

மத்திய அரசு மீனவர்களுக்கு மானியமாக கொடுக்கிற வீடுகளை ஒரே இடத்தில் குவிக்காமல் பல இடங்களிலும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல உணவுத் துறையில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகமான சலுகைகள் செய்வதையும், மானியம் கொடுப்பதையும் நான் பாராட்டுகிறேன். இன்றைக்கு ஏர் உழவர்களுக்குக் கொடுப்பதைப் போல கடல் உழவர்களாக இருக்கிற மீனவ சமுதாய மக்களுக்கு கொடுப்பதில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மீனவர்களுக்குத் தொழில், சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள் மத்திய அரசினால் மட்டுமே செய்யப்படுகிறது. இந்த நிலையில் மாநில அரசும் மீனவர்களுக்குக் கணிசமான நிதியுதவி செய்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசால் செயல்படுத்தப்படும் என்.சி.டி.சி. என்று ஒரு ஸ்கீம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் உதவிகள் முறையாகவும், சரியாகவும் மீனவச் சமுதாய மக்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

கடலூரில் தேவனாம்பட்டு என்ற இடத்தில் 6—1—1985 அன்று ஒரு கோரச் சம்பவம் நடைபெற்றது. படகிலே ஏற்றிச்சென்ற 100 பேர்களுக்குமேல் அந்த விபத்தில் இறந்திருக்கிறார்கள். அந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 12,000 ரூபாய்தான் உதவித் தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டு-





மல்லாமல், நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் மீனவர் சமுதாயத்திற்குப் பாதகமான ஒரு அறிவிப்பையும் செய்திருக்கிறார்கள். அதாவது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை விசைப்படகுகளைச் சோதனை செய்ய வேண்டும்; மோட்டார் வாகனச் சட்டத்தைப்போல் விசைப்படகுகளுக்கும் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து அல்லது மோட்டார் வாகனச் சட்டத்தையே அமுல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆண்டுக்கு ஒருமுறைதான் மோட்டார் வாகனங்களை சோதனை செய்து பார்க்கும் சட்டம் இருக்கிறதே தவிர மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்ல என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நீங்கள் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால் அது மீனவர் சமுதாயத்திற்கு மிகுந்த வேதனை அளிப்பதாக இருக்கும். கடலிலே செல்வது இங்கே சாலையில் செல்வதுபோல் அல்ல. எப்போதோ சில நேரங்களில் இப்படி அசம்பாவிதங்கள் நடந்துவிடுகின்றன. அதுவும், ஆக்சிடென்டாக, தற்செயலாக ஏற்படுகிற ஒரு சம்பவமாக இருக்கிறது. அதனால், அந்த மீனவர் சமுதாயத்திற்கு இப்படிப்பட்ட ஒரு தண்டனை கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்களைப் பொறுத்தவரையில் இந்த ஆளுநர் உரையிலே ஒன்றுமே இல்லை. அவர்கள் என்ன பாவம் செய்தார்களோ. அவர்களைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. இது மீனவர் சமுதாயத்திற்கு மிக மிக வேதனை அளிப்பதாக இருக்கிறது.

இன்னொன்றையும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மீனவர்கள் என்றால் உண்மையான மீனவர்கள். அவர்கள் ஆக்டிவ் ஃபிஷர்மென் என்று வரையறை செய்து, அவர்கள் மட்டுமே கூட்டுறவுச் சங்கத்தில் இடம் பெறலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளானாலும் தறியாளர்களானாலும் மற்ற கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கலாம், அதற்கு வரைமுறை கிடையாது. ஆனால் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைத் தவிர வேறு யாரும் இடம் பெறக் கூடாது என்று சொல்வது சரியல்ல.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் ஆண்ட காலத்தில்தான் மீனவர் சமுதாயம் மேலே வந்தது. நாங்கள் எல்லாம் வசதியோடு வாழ்ந்தோம். கடற்கரை ஓரமாக இருந்த மீனவர்களைப்பற்றி கேட்பாரில்லாமல், நாதியற்றவர்களாக இருந்த நேரத்தில் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் கைகொடுத்து உதவினார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகுதான் எங்களுக்கு ஒரு பொற்காலம் ஏற்பட்டது. அந்தப் பொற்காலத்திலே அவர்கள் எங்களை எல்லாம் அழைத்து விசைப்படகு வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். விசைப்படகு வைத்துக்கொண்டால் மீன்பிடித் தொழிலில் வளம் ஏற்படும்; தொழிலில் வளம் ஏற்பட்டால் பொருளாதாரத்தில் முன்னேறுவீர்கள், பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டால் கல்வி வசதி வரும். கல்வி வசதி பெற்றால் சிந்தனை வளரும்; சிந்தனை வளர்ந்தால் அரசியல் வரும். அரசியல் தெளிவு பெற்றால் வாழ்க்கையில் மேம்பாடு வரும் என்று சொல்லி எங்களுக்கு நம்பிக்கையூட்டினார்கள். அந்தக் காலத்தில் அரசியல் ஆசான் காமராஜ் அவர்களுக்குத் தெரியாத கருத்தா இன்றைக்கு வந்திருக்கிறது. அவர்கள் போடாத சட்டத்தை இன்றைக்குப் போடுகிறார்கள்.

இதற்கு முன்னாலே இருந்த அமைச்சர் எட்மண்ட் அவர்கள் ஒரு சட்டத்தை உருவாக்கினார்கள். அந்தச் சட்டத்தில் உண்மையான மீனவர் என்றால் அந்த மீனவன் ஒரு கோமணம் கட்டிக்கொண்டு, தலையிலே ஒரு தொப்பி வைத்துக்கொண்டு, கட்டுமரத்திலே போய் மீன்பிடித்து வருபவன் என்று விளக்கம் கொடுத்தார்கள். பொருளாதாரத்தில் முன்னேறிய மீனவன் கல்லூரிக்குப் போகிறான். படிக்கிறான். முன்னேறுகிறான். அவன் மீனவன் இல்லை என்று சொன்னால். அவன் யார்? அவன் சமுதாயம் மீனவர் சமுதாயம் இல்லையா? அவன் விஞ்ஞான அறிவு பெற்று, விசைப்படகு வைத்துக்கொள்ளக்கூடாதா? இது என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். தயவுசெய்து அமைச்சரவர்கள் இதைப்பற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர் சமுதாயம் வீழ்ந்த சமுதாயம், தாழ்ந்த சமுதாயம். பெருவாரியான சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பியிருக்கிற ஒரு சமுதாயம்.





இருந்தாலும் எங்களுடைய சமுதாயத்திலிருந்து இரண்டுபேர் தான் வந்திருக்கிறோம் என்று நினைக்கிறேன்; மூன்று பேராகவும் இருக்கலாம். இப்படிப்பட்ட மீனவர் சமுதாயத்தை முன்னேற விடாமல் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் ஏற்படக்கூடாது, அவர்களை உயரவிடாமல் ஆக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக முதியோர் பென்ஷன் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 2,80,488 பேர் முதியோர் பென்ஷன் பெறுவதாகவும் கூடுதலாக இன்னும் 81,273 பேர் பென்ஷன் பெறப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்கள்; பாராட்டுகிறோம்; வரவேற்கிறோம். அதேநேரத்தில் ஏற்கெனவே கொடுத்து வந்த முதியோர் பென்ஷனை பலருக்கு நிறுத்தியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால் நிறுத்தத்தான் செய்வோம், வேறு வழியில்லை என்று சொல்கிறார். இதற்கு என்ன காரணம் என்றால் நிர்வாகம் சரியில்லை என்பது தான்.

நியாய விலைக் கடைகளை எடுத்துக் கொண்டால் அங்கே நியாயம் கிடைப்பதில்லை, கடைகள்தான் இருக்கின்றன. வருகின்ற பொருள்கள் எல்லாம் கள்ள மார்க்கெட்டுக்குப் போய் விடுகின்றன. அங்கே போடுகின்ற அரிசி சாப்பிட முடியாத அளவுக்கு இருக்கிறது. பாமாயில் கொடுப்பதாகச் சொல்கிறார்கள், ஆனால் கிடைப்பதே இல்லை. சர்க்கரையிலே ரவையைக் கலந்து கொடுக்கிறார்கள். எடையைப் பார்த்தால் கிலோவுக்கு 20 கிராம், 25 கிராம் குறைவாக இருக்கிறது. ஆக, நியாயவிலைக் கடைகள் மக்களை ஏமாற்றுகின்ற கடைகளாகத் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

குறைகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்வதற்கு என்று ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். அது எப்படி இருக்கிறது என்று நான் சொல்ல விரும்பவில்லை. முறையாக இயங்கவில்லை, சரியாக இயங்கவில்லை. இந்த நிலையை மாற்றி, மக்களுக்குப் பாடுபடுகின்ற மக்கள் பிரதிநிதிகளைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புயல் நிவாரணம் என்று கொடுத்தார்கள். என்னுடைய சென்னை மாவட்டத்திலே புயல் அடித்தது. குறிப்பாக வட சென்னையிலே அதிகமான பேர்கள் இந்தப் புயலால் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் அங்கே புயலால்

பாதிக்கப்பட்ட. அத்தனை பேர்களுக்கும் முறையாக பணம் வழங்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்திருப்பதாகவும், உயிர்நாடியற்று இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். உயிர்நாடியற்று இருப்பதற்கு காரணம் நியமன முறை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து குடிநீர் வடிகால் வாரியம் என்று ஒன்று சென்னையிலே இருக்கிறது. என்னுடைய தொகுதி இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்ட தேசியத்தலைவர்கள் பெயராலே அங்கே 30 குப்பங்கள், அல்லது குடிசைப்பகுதிகள் இருக்கின்றன. அங்கே தண்ணீர் கிடைப்பதேயில்லை. தண்ணீர் தண்ணீர் என்று இரவெல்லாம் கண்விழித்து கண்ணீர் வடித்து கொண்டிருக்கிற அந்தக் கொருக்குப்பேட்டை பகுதியிலே தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று அதிகாரிகளை கேட்கிற நேரத்திலே, டாங்கியிலே தண்ணீர் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அங்கே இருக்கின்ற டாங்குகளைச் சென்று பார்த்தால் டாங்குகள் இருக்கின்றன— அங்கே தண்ணீர் இல்லை. தண்ணீர் ஏன் இல்லை என்றால் அங்கே காசு கொடுக்கவில்லை, அதனால் இல்லை என்றார்கள். ஒரு குடம் 25 பைசா என்று சொல்கிறார்கள். அங்கே வாழ்கின்ற மக்களோ, அரிசன மக்கள் பின்தங்கிய மக்கள், தாழ்த்தப் பட்டவர்கள் என்பதால், அங்கே சரியாக தண்ணீர் கொடுக்க வில்லை.

சென்னை நகரத்தைப் பற்றிச் சொல்லும்போது, அழகான சீரான சிங்காரச் சென்னை என்கிறார்கள். ஆனால் இங்கேதான் சாக்கடை நீர் வெள்ளமாக ஓடுகிறது. பாய்ந்து ஓடுகிறது. பார்க்கிற இடத்திலே எல்லாம் சாக்கடைகள். சாலைகள் எல்லாம் குண்டும் குழியுமாக இருக்கின்றன. அழகான நகரம் இன்று சீரழிந்து இருக்கிறது என்பதை நான் உங்கள் முன்னாலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட சிங்கார சென்னைக்கு நகராட்சி மன்றத் தேர்தலை நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் எல்லாம் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோமே தவிர, காலையிலே எழுந்தவுடன் இங்கே





சாக்கடை அடைப்பு, அங்கே தண்ணீர் வரவில்லை, இங்கே விளக்கு எரியவில்லை என்று சென்னை நகரத்தின் சுகாதாரத்தைப் பற்றிய விஷயங்களை பேசுவதற்கே நேரம் சரியாக இருக்கிறது. அதனால் சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்; யார் இந்த நகராட்சியைப் பிடிப்பார்கள் என்ற பிரச்சனையிலே கவனம் செலுத்தாமல், மக்கள் நலனில் நீங்கள் அக்கறை செலுத்தி, இந்த நகராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

காரணம் என்னவென்றால், இங்கே கொசுத்தொல்லை அதிகமாக இருக்கின்றது. இந்தக் கொசுத்தொல்லையால், சென்னையில் இருக்கிற மக்கள், அது படித்தவர்களானாலும், சரி, பண்பாளர்களாக இருந்தாலும் சரி, விவரம் தெரிந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது குடிசைப் பகுதிகளிலே இருப்பவர்களாக இருந்தாலும் சரி, மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இதனால் புரட்சித் தலைவர் ஆட்சியை புனித ஆட்சி என்று சொல்லக் கூடிய மக்கள் இன்று கடுமையாக கண்டனம் செய்கிறார்கள், வருத்தப்படுகிறார்கள், கடுமையாகச் சாடுகிறார்கள். எனவே இந்தத் தாக்குதலுக்கு ஆளாகாமல் இருக்க இந்த அரசு கொசுத்தொல்லையை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், காங்கிரஸ் கட்சியினுடைய அங்கத்தினர் என்ற முறையிலேயும் கேட்டுக்கொள்கிறேன். இது நாடு தழுவிய பிரச்சனை. இந்தப் பிரச்சனையிலே நமக்கும் பங்குண்டு என்ற காரணத்தால், உங்கள் முன்னாலே சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, வடிகால் வாரியத்தைப் பற்றிச் சொல்லவேண்டு மானால், 50 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்த சென்னை நகரத்தின் மக்கள் தொகை 12 லட்சமாக இருந்தது, அதற்கு ஏற்றாற்போல் அப்போது கழிவுநீர் வசதிகள் செய்யப்பட்டன. ஆனால் தற்போது ஏறத்தாழ 48 லட்சம் மக்கள் வாழ்கின்ற இந்தச் சென்னையிலே, வடிகால் வாரியம் முறையாக இயங்க வில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாக்கடை நீர் தேங்குவதைப் பார்க்கின்றபோது மிகவும் அருவருப்பாக இருக்கிறது.

[திரு. எஸ். வேணுகோபால்] [1985 மார்ச் 14

எங்கள் கொருக்குப்பேட்டைத் தொகுதியில் தண்ணீர் இல்லை. எனவே அங்கே ஒரு தண்ணீர் தொட்டி கட்டுவதற்காக குடிசை மாற்று வாரியம் நகராட்சிக்கு பணம் கொடுத்தும்கூட, நகராட்சி, கலெக்டர் ஆபீசுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அதை நிறுத்திவிட்டு, இன்றைக்கு சிகப்பு நாடா முறையாலே, அங்கே அதிகாரிகளால் கீழே வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்..

அடுத்து சத்துணவுத் திட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது, அங்கே உணவு இருக்கிறதே தவிர, சத்து இல்லை. சத்தெல்லாம் வேறு எங்கோ போகிறது. முதல்வர் அவர்கள் எந்தக் காரியத்திற்காக இந்தச் சபையிலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாரோ, அந்த நிலைமை நடைபெறவில்லை என்பதை என்னால் சுட்டிக்காட்ட முடியும். சத்து வேறு இடத்திற்குப் போகிறது, உணவு மட்டும் அங்கே இருக்கிறது. எனவே இந்த அரசின் எண்ணங்கள் ஈடேற வேண்டுமானால், துரிதமான நடவடிக்கை எடுத்து இந்த சத்தையும் உணவையும் சேர்த்து முழுமையாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

* திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தியாக வாழ்வையே தேசிய வாழ்வு என்று தன்னுடைய வாழ்க்கையையே இந்த தேசத்திற்காக தியாகம் செய்த மறைந்த மக்களுடைய தெய்வீகத் திருமகன் தேவர் பெருமானுடைய ஆசியைப் பெற்றவன் என்ற முறையிலே, இந்த மாமன்றத்திலே மக்களுடைய பிரதிநிதியாக சேவை செய்ய உசிலம்பட்டி தொகுதியினுடைய மக்களின் ஏகோபித்த ஆதரவோடு வந்து நிற்கும் நான், அரசியலிலே முதலிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்டு, அதற்குப் பின்னாலே, தற்போது உசிலைத் தொகுதியினுடைய மக்களின் பெரும்பான்மையான அபிமானத்தைப் பெற்று விளங்கும் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால், நிலையான இடத்தைப் பெற்று, அவர்கள் ஆசியோடு இன்றைக்கு இந்தப் பேருரையை ஆற்றுவதற்கு மிகுந்த மகிழ்ச்சிக் கொள்கிறேன்.



1985 மார்ச் 14] [திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்]

இந்த மாமன்றத்திலே பல பெரியவர்களும், என்னைப் போன்ற இளைஞர்களும் ஆற்றிய உரைகளைக் கேட்டு, நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது இங்குள்ள அத்துணை பேரும் சொல்கிற விவாதங்களைக் கேட்டு, இதன் மூலம் எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு இந்த அரசு என்ன காரியத்தைச் செய்ய இருக்கிறது, நாம் இன்றைக்கு மக்களின் பிரதிநிதியாக இங்கே வந்திருக்கிறோமே நம்முடைய தொகுதிக்கு என்ன பணியைச் செய்வதற்கு இந்த அரசு வழி வகுத்திருக்கிறது என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிற நேரத்திலே இங்கே ஆற்றப்பட்ட உரைகள் எல்லாம் எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது. 'நீங்கள் தான் குற்றவாளி என்றும், இல்லை நீங்கள் தான் எங்களை குற்றவாளியாக்கினீர்கள்" என்றும் பேசப்படுகிற வாதங்களையும், "நாங்கள் நல்ல முறையில்தான் வெற்றிபெற்றோம், நீங்கள் எங்களை பழியாகச் சொல்கிறீர்கள் என்றும்" பேசப்பட்ட இப்படிப்பட்ட வாதங்களைத்தான் அதிகமாகக் கேட்டோமேத் தவிர ஆளுநர் அவர்களுடைய உரை மீது, அவர் முன் மொழிந்திருக்கிற திட்டங்களின் மீது இங்கே எந்தவித பிரச்சினையும் முக்கியமானதாக எடுத்துக் கொள்ளப்பட்டு, விவாதிக்கப்படவில்லை என்பதுதான் என்னைப் போன்ற இளைஞர்களுக்கு மிக வருத்தத்தைக் கொடுக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

அரசினுடைய திட்டங்களை முன் மாதிரியாகச் சொன்னாலும், திரூஸ் இன் நட்ஷெல் என்கிற அளவுக்கு அது கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஆளும் கட்சி தரப்பிலேயிருந்து சொன்னாலும், அவற்றிலே நானும் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியினுடைய உறுப்பினர் என்ற முறையில் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டம் மிக அழகாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய முதலமைச்சருடைய சத்துணவுத் திட்டத்தை வரவேற்கிற நபர்களிலே நானும் ஒருவன் என்றாலும், இந்தத் திட்டம் மிக நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்ற ஒரு கருத்தும் என்னிடத்திலே இருக்கிறது. சத்துணவுத் திட்டம் இன்றைக்கு கல்வியை மேம்படுத்தியிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

பள்ளிக்குச் செல்கிற பிள்ளைகளின் விகிதாச்சாரம் உயர்ந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நீங்கள் எண்ணிக்கையை கணக்கிட்டுச் சொல்லுகிறீர்களா? சதவிகிதமாக கணக்கிட்டுச் சொல்லு கிறீர்களா? என்று நான் அறிய விரும்புகிறேன். எண்ணிக்கையை கணக்கிட்டுப் பார்த்தால் நம்முடைய சத்துணவு திட்டத்தின் மூலமாக இன்றைக்கு அதிகக் குழந்தைகள் பள்ளிகளில் வந்து சேருகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அப்படி வருகிற பிள்ளைகளின் எண்ணிக்கை மிக ஏராளமாக இருப்பதிலும், அந்தக் குழந்தைகள் சுவையான சத்துணவைப் பெறுவதிலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. நானும் ஒரு மருத்துவக் கல்லூரி மாணவன் என்ற முறையில் உடல் நலத்தை பேணவேண்டும், அதிக அக்கறை காட்ட வேண்டும் என்பதில் ஆர்வம் உடையவன். ஆனால் இதன் மூலம் கல்வி மேம்பாடு அடைகிறதா என்று கண்காணித்துப் பார்க்க வேண்டும். அதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றுதான் அரசை வலியுறுத்துகிறேன். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் வருகிறார்கள், சத்துணவும் சாப்பிடுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் பள்ளிகளிலேயே இருக்கிறார்களா என்பதையும் கண்காணிக்க வேண்டும் என்று அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

அதேபோல பள்ளிக் கூடங்களிலே சீருடைகள் வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். மிக நல்ல ஏற்பாடு. அதே போல செருப்பு இல்லாதவனுக்கு காலுக்கு செருப்பளிக்க வேண்டும் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால் கூட அதை நான் வரவேற்பேன். "On medical grounds. I am ready to accept that". இந்த மாதிரியான திட்டங்கள் எல்லாம் இந்த வகையில் நம் நாட்டிற்கு மிக முக்கியமாகத் தேவை. ஆகவே, அந்த வகையில் பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்குவதை, மானத்தைக் காக்க உடைகள் வழங்குவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் சீருடை வழங்கும் அந்தத் திட்டத்தை எல்லாம் சாராயத்திலிருந்து வருகிற பணத்தை வைத்துத்தான் செய்கிறார்கள் என்று சொன்னால், அதை நான் மிகவும் வருத்தத்தோடுதான் ஏற்றுக்





கொள்ள வேண்டிய காலக் கட்டத்தில் இருக்கிறேன். சாராயத்தோடு இத்தகைய திட்டங்களை இணைக்கிற நேரத்திலே அந்தப் பிள்ளைகள் எந்த அளவிற்கு வாழ்வில் வளர முடியும். அந்தக் குழந்தைகள் இன்றைக்கு தாய், தகப்பனுடைய அன்பையும் அவர்களுடைய 'மியர் எக்சிஸ்டென்சை'யுமே இழக்கக்கூடிய ஒரு காலகட்டத்திலே இருக்கிறார்கள். எனவே ஏன் மதுவிலக்கை முழுவதுமாக அமுல்படுத்தவில்லை என்பதை வாதமாக இந்த அரசினிடத்திலே வைக்கிறேன். அவ்வாறு சாராயத்தை நம்பி நீங்கள் இந்த திட்டங்களை நடத்த வேண்டாம், நல்முறையிலே வழங்குவதாக இருந்தால், நிச்சயமாக நாங்கள் வரவேற்போம், என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே, ஆதி திராவிடர்களுக்கு அதிகமாக ஒன்றும் சொல்லப்படவில்லை. ஏனென்றால், ஆதிதிராவிடர்கள் மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கக்கூடியவர்கள். அவர்களுடைய வளர்ச்சியை பார்ப்பது நம் சமூகத்தில் இருப்பவர்களுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதி திராவிடர்களின் நலனுக்கான பணிகள் பல செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன. ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீட்டு வசதி என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் காலனி வீட்டு வசதி அங்கே ஏற்பட்டிருக்கிறதா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். உண்மையிலேயே ஒருவருக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்றால், ஒரு காண்ட்ராக்டர்—லாபம் எதுவும் எதிர்பார்க்காத காண்ட்ராக்டர் கூட நிச்சயமாக அந்த காரியத்தை செய்து கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் ஒருவர் கூட அந்தத் தொகையை உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்தத் தொகையினை ரூ. 6,000 லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்திக் கொடுத்தால், அந்த பகுதியிலே நிச்சயமாக நல்லதொரு வீட்டை பழுதடையாத வீட்டை ஏற்படுத்திக்கொடுக்க முடியும் என்ற பரிந்துரையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஏற்கனவே கொடுக்கப்பட்ட காலனி வீடுகள் பழுது பார்க்கப்படாத நிலையிலே. ஓட்டை வீடுகளாக, வெய்யில் காலத்திலே வெய்யில் அடிக்கக்கூடிய, மேலே எந்தவிதமான சீலிங்கும் இல்லாமல் இருக்கின்றன. அந்த வீடுகளை ரிப்பேர் செய்வதற்கு எந்தவித திட்டமும், ஒதுக்கீடும் இல்லை என்பதை

வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்து, அந்த ஆதிதிராவிட மக்களின் மேம்பாட்டிற்கு அவர்கள் குடியிருக்கக்கூடிய அந்த வீடுகளுக்கு ஒரு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நம்முடைய பள்ளிக்கூடங்களை பழுது பார்க்க வேண்டும் என்ற கட்டாயத்தை பலர் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே பள்ளிக் கூடங்களுக்கு மராமத்து வேலைகள் செய்வதற்கும், மெயின்டனென்ஸுக்கும் தனியாக ஒதுக்கீடு இருந்தாலும், அடிக்கடி பழுதுபட்டு கொண்டிருக்கின்ற காரணத்தினால், அவைகள் பழுதடைய வேண்டும் என்ற நோக்கத்தினால் ஏற்படுத்தியது போல் தோன்றுகிறது. எனவே அவற்றை நல்ல முறையில் பராமரிக்கக்கூடியவர்கள் பராமரிக்கிறார்களா என்பதை பார்க்க வேண்டும். இல்லையென்றால் அந்த பணத்தை வேறு திட்டங்களுக்கு, அதாவது பள்ளிக் குழந்தைகளின் சீருடைக்கு செலவழித்தால்கூட பயன் உள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தொழில் துறையில் நம்முடைய தமிழகம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. இதற்கு காரணம் நம்முடைய தொழில் அதிபர்களை நல்ல முறையில் ஆதரித்து, அவர்களை காப்பாற்றுகின்ற ஒரு உத்திரவாதத்தை கொடுக்காததினால் அவர்கள் அத்தனை பேரும் மற்ற மாநிலங்களுக்கு சென்று, நம்முடைய தொழில்களை மற்ற இடங்களில் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களை நல்லமுறையில் ஆதரிக்க வேண்டும் என்றும் மாவட்டங்களில் ஏற்கனவே தொழில்கள் இருந்தாலும் பரவாயில்லை. இன்னும் அதிகமான தொழில்கள் வரவேண்டும் என்ற கருத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய உசிலம்பட்டி தொகுதியைப்பற்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய உசிலம்பட்டி தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதி, தாழ்த்தப்பட்ட தொகுதி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அங்கே இருக்கக் கூடிய அத்தனை பேரும் ஒருமனதாக, எந்தவித அரசியல் பாகுபாடும் இல்லாமல் வாக்களித்திருக்கிறார்கள். எனவேதான்





நான் உங்களை இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்வது, நீங்கள் எதிர்க்கட்சிகளை எதிரிக் கட்சிகளாக ஆக்கிவிடாமல், எதிர்க்கட்சிகளின் நல்ல விவாதங்களுக்கு இடம் கொடுத்து, இளைஞர்களாக வந்திருக்கின்ற எங்களுக்கு ஆர்வம் கொடுத்து, இந்த அரசியல் வானிலே நாங்கள் முன்னேறுவதற்கான முன்னுதாரணமாக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அந்த ஆதரவைச் செய்திட வேண்டும். அந்த முறையில் அரசு அதிகமான அளவில் நன்மைகளை செய்து, நாங்கள் எங்களுடைய விவாதங்களில் நீங்கள் செய்த நன்மைகளை எடுத்து வைக்கின்றபோது அவைகளை நீங்கள் கேட்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது) என்னுடைய பேச்சு கன்னிப் பேச்சாக இருக்கின்ற காரணத்தால், இன்னும் கொஞ்ச நேரம் கொடுக்க வேண்டும்.

நம்முடைய இந்திய தேசத்தை அரட்டிக்கொண்டிருக்கின்ற, மதக் கலவரங்கள், இனக் கலவரங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. 'யுனிட்டி இன் டைவர்சிட்டி' என்று இணைந்திருக்கின்ற நாம், ஜாதி மத பேதமற்ற முறையில் பாடுபட வேண்டுமென்ற நிலையில், இந்தக் கலவரங்கள் அனைத்தையும் ஒடுக்க வேண்டிய நிலையில், அனைத்துக் கட்சிகளும் அடங்கிய ஒரு குழுவை நீங்கள் நியமிக்க வேண்டும். அதிலே மத நம்பிக்கை உள்ளவர்களை ஈடுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஈழத் தமிழர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் இன்றைக்குத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்ற என்னுடைய தந்தை, இந்த மாமன்றத்தின் முன்னாள் உறுப்பினராக இருந்த அமரர். மூக்கையாத்தேவர் அவர்கள் 1974-ல் பாராளுமன்றத்தில் மிக முக்கியமான பிரச்சினையான கச்சத் தீவைப் பற்றி கர்ஜித்தார்கள். அந்த நேரத்தில் அன்னை இந்திரா காந்தி அவர்கள் கச்சத் தீவை இலங்கைக்கு தாரை வார்க்கக் கூடாது என்று, மிக முக்கியமான தனி ஒரு நபராக இருந்து வாதிட்டார்கள். அந்த நேரத்தில் தமிழகத்திலே உள்ள நிலைமைகள் அவருக்கு சாதகமாக இல்லாத நிலையில், ஆதரவற்ற ஒரு காரணத்தால் கச்சத் தீவு தாரை வார்க்கப்பட்டது. அந்தக் கச்சத் தீவை மீண்டும் பெறுவதற்கு

[திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்] [1985 மார்ச் 14

நம்முடைய அனை முன்னவர் மூலமாக பெறப்பட்ட வாக்கு மூலத்தின் காரணத்தால், அந்தத் தீர்மானத்தை ஆளுங்கட்சியின் சார்பில் கொண்டுவந்து நிறைவேறுகின்ற வகையிலே, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக நாங்கள் நிச்சயமாக ஆதரவு தரத் தயாராக இருக்கிறோம்.

இலங்கைக்கு ராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்தி இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காக துணை நிற்போம் என்றும், நாட்டிற்கு நிர்நு விளைவிக்கின்ற நேரத்திலே அதைச் சுட்டிக்காட்டுவதற்குத் தயங்க மாட்டோம் என்று அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் கூறி, வாழ்க நேதாஜி, வாழ்க தேவர் என்று சொல்லி விடை பெறுகிறேன், ஜெய்ஹிந்த்.

* திரு. ஆ. பிரேம் குமார்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உலகத்திற்கு ஒளி விளக்காய் இங்கே நன்மை செய்கின்ற உத்தமர், புத்தர், ஏசு, காந்தி அவர்களின் வழியிலே இன்றைக்கு தமிழகத்திற்குக் கிடைத்த மனித புனிதர், மூன்றாம் பிறவி எடுத்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், எனக்கு சிறப்பாக வெற்றி தந்த அருமை திண்டுக்கல் தொகுதி மக்களுக்கும் முதற்கண் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏசுவைச் சிலுவையில் அறைந்த பிறகு, மூன்றாம் நாள் காலையில் உயிர்த்தெழுந்ததாக படித்திருக்கிறேன், கேட்டிருக்கின்றேன்; நான் நேரில் பார்த்தது கிடையாது. ஆனால் எங்களுடைய புரட்சித் தலைவர் மூன்றாம் பிறவி எடுத்து, தமிழகத்திற்கு வந்து, 'என்னுடைய எஞ்சிய வாழ்நாளை தமிழக மக்களுக்கு தொண்டு செய்வதில்தான் கழிப்பேன்' என்று கூறி, அதன்படி இன்று செயல்பட்டு வருவது கண்டு உள்ளபடியே நான் கொடுத்து வைத்தவன், பாக்கியம் செய்தவன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தவர் அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே கவிழ்ந்த படகாக தமிழகம் கடலிலே தத்தளித்துக் கொண்டிருக்கிறது. தடுமாறுகிறது என மக்களிடம் முதலைக் கண்ணீர் வடித்தவர்கள் மேலும் நம்மைப்பார்த்து நல்லாட்சி



1985 மார்ச் 14] [திரு. ஆ. பிரேம்குமார்]

இருக்கட்டும் நிலையான ஆட்சியாவது நம்மால் தர முடியுமா முடியாது. முடியவே முடியாது என தேர்தல் அறிக்கை கொடுத்தவர்களுக்கு முகத்தில் அறைந்தாற் போல் மூன்றாம் முறை வெற்றியை தந்து எங்கள் புரட்சித் தலைவரை முதலமைச்சராக ஆக்கி உள்ளார்கள். மூன்று முறை மட்டுமல்ல இன்னும் 30 முறை என்றாலும் தமிழகத்தில் ஆட்சி நடத்த சிறந்தவர் எங்கள் புரட்சித் தலைவர் என்பதை நிரூபித்துக் காட்ட சிறந்த உதாரணம் தான் எங்கள் கூட்டணி வேட்பாளர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் பெற்ற அதிக வாக்கு வித்தியாசங்கள்.

(முற்பகல் 11-50)

திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியைப் பொறுத்தமட்டில் என்னை 32,766 அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்துள்ளார்கள். ஏறத்தாழ 20 ஆண்டுகாலமாக ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திண்டுக்கல்லில் வெற்றி பெறவில்லை. இதுவரை கம்யூனிஸ்டு கோட்டை என்று சொன்னதை தவிடு பொடி ஆக்கி புரட்சித்தலைவரின் கோட்டையாக மாற்றி உள்ளார்கள். இந்த வெற்றியை அனுதாப வெற்றி என்று சொல்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் இந்த தமிழகத்திற்கு செய்து இருக்கிற நன்மைகளையும் சிறந்த திட்டங்களையும் மறந்து அனுதாப அலை என்று கூறுவதை நினைக்கும்போது குருடர்கள் சேர்ந்து யானையை தொட்டுப் பார்த்து யானையை முறம், என்றும் உலக்கை என்றும் தூண் என்றும் விமர்சித்தது போல் தான் உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற குறளுக்கு ஏற்ப உதாரணமாக திகழ்கிறார் ஒருவர் என்றால் புரட்சித் தலைவர் தான். அதற்குச் சிறந்த உதாரணம் நுழைவு வரி.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்ற குறளுக்கு ஏற்ப ஒரு அரசு உள்ளது என்றால் அது சத்துணவு தந்த புரட்சித் தலைவர் அரசு தான். ஆதலால் தான் எதிர்க்கட்சி நண்பர்கள் கருத்துக்களுக்கும், வணிக பெருமக்கள்

[திரு. ஆ. பிரேம்குமார்] [1985 மார்ச் 14

கருத்துக்களுக்கும் செவிசாய்த்து நுழைவு வரியை திரும்பப் பெற்றுள்ளார். இதுவரை எந்த மாநிலத்திலாவது இப்படிப்பட்ட போட்ட வரியை ரத்து செய்த நிகழ்ச்சி உண்டா சொல்லுங்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய ரகுமான் கான் அவர்கள் பேசுகையில் கவர்னர் உரையில் உருப்படியான திட்டங்கள் எதுவும் இல்லை என்று கூறினார். திராவிட முன்னேற்றக்கழக தேர்தல் அறிக்கையில் பணிக்காலத்தில் ஊழியர் உயிர் இறந்தால் தரும் தொகையினை 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரமாக தருவோம் என்று பெரிய திட்டமாக கூறியுள்ளார்கள். ஆனால் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் கவர்னர் உரையில் அரசு பணியாளர்களுக்கான குடும்ப நல நிதி ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்தப்படும் என்று கூறி உள்ளார்கள். நீங்கள் பெரிய திட்டமாக அறிவித்ததை விட அதிகமாக அறிவித்துள்ளார்கள். இது பாராட்டப்பட வேண்டியது இல்லையா என கேட்கிறேன். நீங்கள் சொன்னால் பொன், நாங்கள் சொன்னால் மண்ணா? மேலும் மரியாதைக்குரிய ரகுமான்கான் அவர்கள் போலீசாருக்கு சங்கம் அமைக்க உறுதிக் கொடுத்தீர்களே அதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று கேட்டார்கள். தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப் படும் என்று சொல்லுவார்கள். மேலும் போலீஸ் சங்கம் தேவையில்லை என்ற அளவுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் அளித்து வருகிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் முகமூடிக்கொள்ளையர்களை பிடிக்க முடியவில்லை என போலீஸ் நிர்வாகத்தை குறை கூறினார்கள். சென்னையில் கர்நாடக வங்கியின் கொள்ளையின்போது அவர்களை கைது செய்தது தமிழக போலீசாரின் செயல்முறைகளை மறந்துவிட்டது ஏனோ? இந்திரா நகரில் பிரேமா கொலை வழக்கில் எவ்வாறு போலீசார் செயல்பட்டார்கள் என்பதை மறந்தது ஏனோ, அது போல கோட்டம்பாக்கம் கொலை வழக்கில் நமது போலீசாரின் நடவடிக்கைகளை மறந்தது ஏனோ, 9 பேரை கொன்ற ஜெயப்பிரகாசின் கொலை வழக்கில் தமிழக போலீசார் எந்த அளவுக்கு செயல் பட்டார்கள் என்பதை மறந்தது ஏனோ. சென்னை விமான நிலையத்தில் வெடிகுண்டு வெடித்தபோது அதை சிறந்த முறையில் துப்பு துலக்கிய தமிழக போலீசாரின் திறமையை மறந்தது ஏனோ?



1985 மார்ச் 14] [திரு. ஆ. பிரேம்குமார்]

மரியாதைக்குரிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பஸ் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று சொல்லி, பல்லவன், அழகிரி போக்குவரத்தில் நஷ்டம் ஆனால் பாக்கி கழகங்களில் லாபம் வருகிறது. இதற்கு காரணம் என்ன என்றால் பல்லவன் போக்குவரத்துக் கழகம் கள்வர் குகை போல் நடைபெற்று வருகிறது என்று கூறினார்கள். திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி தமிழகத்தை விட்டு விலகிய சமயம் எல்லா போக்குவரத்து கழகங்களும் நஷ்டத்தில் தான் இருந்தன. ஆகவே அவை அனைத்துமே கள்வர் குகை போல்தான் தவறுகள் நடந்தன என்பதை அவர் ஒப்புக்கொள்கிறாரா. பஸ் கட்டணம் 10 பைசா உயர்த்தப்போவதை கண்டிக்கிறார்கள். ஏறத்தாழ 500 கிலோ மீட்டர் நாம் பேருந்தில் பயணம் செய்தால் 37.50 ரூபாய் ஆகிறது. ஆனால் கேரளாவில் ரூ. 50 ஆகிறது. கர்நாடகாவில் ரூ. 45 ஆகிறது. ஆந்திராவில் ரூ. 43 ஆகிறது. அது மட்டும் இன்றி டவுன் பஸ்ஸில் குறைந்த கட்டணம் 2 கிலோ மீட்டருக்கு 30 பைசா என வைத்துள்ளார்கள். கேரளாவில் இது 40 பைசா, கர்நாடக அர்பனில் 30 பைசா, சப் அர்பனில் 50 பைசா, ஆந்திரா அர்பனில் 30 பைசா, சப் அர்பனில் 50 பைசா.

உலக வங்கியில் கடன் வாங்கியிருக்கும் பம்பாயில் பஸ் கட்டணம் உயர்த்தவில்லையே என கூறினார்கள், ஆனால் பம்பாயில் ஏற்கனவே ஆர்டினரிக்கு 45 பைசா, எல்.எஸ்.எஸ்.-க்கு 50 பைசா ஆகவும் இருக்கிறது. அவர்களுக்கு இது தெரியாது என நினைக்கிறேன். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் பேசும்போது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்ட நமது முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் எங்கே, அண்ணாவின் உருவப்படத்தை கொடியில் போட்டு அண்ணாவின் கொள்கை என்று சொல்லுகின்ற ஆளும் கட்சி எங்கே என்று கேட்டார். அவருக்கு நான் சொல்லிக் கொள்ளுகிறேன். வறட்சி காலத்தில் எந்த மாநில முதல்வர்களுக்கும் இல்லாத துணிவோடு புரட்சித் தலைவர் அவர்கள் 7 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்து மைய அரசின் தவறான போக்கை சுட்டிக்காட்டி வறட்சியினை புரட்சித் தலைவர் சமாளித்தார். அந்த துணிவை மறந்துவிட்டீர்களா என கேட்க விரும்புகிறேன். ஆனால் வறட்சி காலத்தில் மேற்கு வங்கத்தில் எப்படி இருந்தது என்பதை எக்கனாமிக் அண்டு பொலிட்டிக்கல்

விக்லி என்ற பத்திரிகை எப்படி சீர்கேடு இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டி உள்ளது. பார்வாடு பிளாக்கைச் சேர்ந்த அசோக் கோஷ் என்ற பொதுச் செயலாளர் சொல்கிறார். எங்கே குழாய் கிணறுகளைபபோட்டு இருக்கிறது என்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி அமைத்து இருக்கிற அரசு சொல்கிறதோ அங்கே போய் அவர்கள் புள்ளிவிவரம் வைத்துப் பார்த்தால் அங்கே குழாய் கிணறுகளே இல்லை என்ற நிலைமை இருக்கிறது என்பதை நான் உங்கள் நினைவுக்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை 15,639 சிற்றூர்களில் நாம் 31-3-1983 வரை மின்இணைப்பு தந்துள்ளோம் இந்தியாவில் எந்த மாநிலத்திலாவது இந்த அளவு உள்ளதா? குடிசைகளில் மின் இணைப்பு செய்துள்ளதைப் போல் எந்த மாநிலத்திலாவது உண்டா? ஏன் மேற்கு வங்கத்தில் உண்டா? ஏறக்குறைய 6 லட்சம் குடிசைகள் இதனால் பயன் அடைந்து இருக்கின்றன.

ஆதி திராவிட குடியிருப்புகள் 100-க்கு 100 மின்வசதி பெற்றுள்ளன தமிழகத்தில், என காமர்வு ஏட்டில் பாராட்டி உள்ளார்கள். தற்போது இலவச மின்சாரத்தை புரட்சித் தலைவர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இப்படிப்பட்ட அரிய திட்டம் வேறு எந்த மாநிலத்திலாவது உண்டா? இது பாராட்டும்படியான திட்டம் இல்லையா என கேட்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான திண்டுக்கல் தொகுதியின் பிரச்சினையைப் பற்றி சொல்ல விரும்புகிறேன்; எனது தொகுதியான திண்டுக்கல்லில் தலையான தீராத பெரும் பிரச்சினை குடிநீர் பிரச்சினையாகும். இது தீர்க்கப்படாமல் இருந்ததற்கு முக்கிய காரணம் இதற்குமுன் இருந்த உறுப்பினர்கள் அதனை அரசுக்கு சரியான முறையில் தெரிவிக்க மறந்ததுதான். செக்குக்கு மாடு கொடுத்தாலும் திண்டுக்கல்லுக்கு பெண் கொடுக்காதே என பழமொழி சொல்வார்கள். காலனையே காலி செய்த புரட்சித் தலைவர் இந்த பழமொழியை காலி செய்து விடுவார் என நம்புகிறேன். தற்போது ஒரு வாரத்திற்கு ஒரு முறை திண்டுக்கல் நகர் மக்களுக்கு குடிநீர் கிடைக்கிறது. தற்போது ஆத்தூர் காமராஜ் நீர்த்தேக்கத்திலிருந்து விவசாயத்திற்கு போக வருகிற நீரைப் போல் இன்னும் 10 மடங்குக்கு மேல் தண்ணீர் வந்தால் தான் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஆத்தூரில் வெற்றிப் பெற்ற மாண்புமிகு நாவலருக்கு இது நன்குத் தெரியும். ஆனைப்பட்டியிலிருந்து பேரணை திட்டம் மூலம் செம்பட்டி வழியாக தண்ணீர் திண்டுக்கல்லுக்குக் கொண்டு வந்து இதற்கு தீர்வு காண வேண்டுமென புரட்சித் தலைவர் அவர்களை நான் மன்றாடி கெஞ்சி கேட்டுக்கொள்கிறேன்.





பேரறிஞர் அண்ணாவின் பெயரால் திண்டுக்கல்லை தலைநகராகக் கொண்ட அண்ணா மாவட்டம் அறிவித்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆரம்பித்த திராவிட முன்னேற்றக் கழகம் தடம்மாறி செல்லும்போது உண்மையான மக்களுக்கு நன்மை செய்யும் அண்ணாவின் கழகம் புரட்சித் தலைவர் பக்கம் தான் உள்ளது என நம் அ.இ.அ.தி.மு. கழகத்திற்கு வித்திட்ட இடம் திண்டுக்கல், அதனால்தான் புரட்சித் தலைவர் அவர்கள் இதனை அண்ணா மாவட்டமாக அறிவித்தார். இதனை பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் காஞ்சிபுரத்தை தலைநகராக கொண்டு அண்ணா மாவட்டம் என அறிவித்து குழந்தைகள் பொம்மை சல்யாணம் நடத்துவது போல் சில வேலைகளைச் செய்தார்கள். திண்டுக்கல் மக்கள், புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைத்தான் செய்வார்; செய்வதைத் தான் சொல்லுவார் என்கிற நம்பிக்கையுடனே புரட்சித் தலைவரவர்களின் சொல்லுக்கு மதிப்பளித்து, அந்த அளவிற்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 32,766 அதிக வாக்குகளைக் கொடுத்து இன்றைக்கு வெற்றிபெறச் செய்திருக்கிறார்கள். ஆகவே, தன்னிகரில்லாத் தலைவன் அதனைச் செயல்படுத்துகின்ற வகையிலே இந்தக் கூட்டத் தொடரிலேயே இந்த மகிழ்ச்சியான அண்ணா மாவட்டச் செய்தியைத் தருவார் என நம்புகிறேன்.

(நண்பகல் 12-00)

கொசுப் பிரச்னை சொல்ல முடியாத அளவிற்குத் திண்டுக்கல்லிலே பெருகிவிட்டது, அதனைத் தீர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பாதாளச் சாக்கடைத் திட்டமானது வளர்ந்து வருகின்ற திண்டுக்கல் மாநகரத்திற்கு ஒரு தேவையான திட்டம். அதற்குரிய ஏற்ற வழிவகை செய்ய வேண்டுமென்று விரும்புகின்றேன்.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1985 மார்ச் 14

தேனியில் அமைந்ததைப்போல கூட்டுறவு மில்லையும், பெரிய தொழிற்சாலை என்று சொல்லக்கூடிய அளவிற்குத் திண்டுக்கல் மாநகரத்திலே புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

திண்டுக்கல் தொகுதியிலே சிறுமலையைச் சுற்றுலா மையமாக்க வேண்டுமென்றும், திண்டுக்கல் மாநகரத்தில் விளையாட்டு மைதானம்—ஸ்டேடியம் அமைக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மழையின்றி வறண்டு போய்விட்ட திண்டுக்கல்லை வறட்சிப் பகுதியாக நீங்கள் அறிவிக்க வேண்டுமெனக் கூறிக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாது, கேரளத்தில் உள்ளதைப்போல வழக்கறிஞர் நலச் சட்டமும், அதைப்போல வழக்கறிஞர்களுடைய குமாஸ்தாக்கள் நலச் சட்டமும் அறிவிக்கப்பட வேண்டுமென்பதை நமது அரசுக்கு நான் அன்புக் கட்டளையாக வைக்க விரும்புகின்றேன்.

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை வழிமொழிந்து பேசுவதற்கு இந்த அளவிற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்த மன்றத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

* **திரு. வை. பாலச்சந்திரன்**: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அன்னை பராசக்தியின் அருளோடும், இந்து முன்னணி பேரியக்கத்தின் ஆதரவோடும் பத்மநாபசுவாமியின் பெயரால் அமைந்திருக்கின்ற பத்மநாபபுரம் தொகுதியிலிருந்து இந்தப் பேரவைக்கு வந்துள்ள நான் என்னுடைய தொகுதி மக்களுக்கும், எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த இந்துக்களின் கேடயமாக இருக்கும் இந்து முன்னணி பேரியக்கத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இமயம் முதல் குமரி வரை பரந்து விரிந்து கிடக்கின்ற இந்தப் பாரத கண்டத்தில் நாம் இன்றைக்குச் சுதந்திரமாக வாழ்கிறோம் என்று சொன்னால், சுதந்திரமாக நமக்கு நாமே சட்டங்களை இயற்றிக் கொண்டு, நமக்கு நாமே விதிமுறைகளை வகுத்துக் கொண்டு வாழ்கின்றோம் என்று சொன்னால், நமக்கு இந்தச்



1985 மார்ச் 14] [திரு. வை. பாலச்சந்திரன்]

சுதந்திரத்தை வாங்கித் தருவதற்காகப் போராடி, அதற்காக உயிர் நீத்த வாஞ்சி நாதன், பகத்சிங் போன்ற வீரத் தியாகிகளுக்கு என் அஞ்சலியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இராம காவியத்தைப் பார்க்கின்றபொழுது, அந்த இராம காவியத்தின் நாயகனாக வருகின்ற இராமன் சோதனை என்ற இரண்டு வில்களை இருமுறை தான் வளைத்தார் என்பதாக இராம காவியம் சொல்கிறது. ஆனால் இன்றைய தமிழகத்து அரசியலைப் பார்க்கின்றபொழுது, நம்முடைய இராமனாக இருந்து கொண்டிருப்பவர் காலனுடைய சோதனை என்ற வில்லை மூன்று முறை வளைத்து வென்றிருப்பதை நாம் பார்க்கிறோம். மூன்றாவது முறையாகக் காலனுடைய சோதனை என்ற வில்லை அவர் வளைத்தார் — வென்றார் என்று சொன்னால் அதற்குக் காரணம் தமிழகத்திலே இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஆலயங்களிலே நடைபெற்ற வழிபாடுகளும், தமிழகத்திலே வாழ்கின்ற தெய்வ நம்பிக்கையுடைய கோடிக்கணக்கான மக்கள் செலுத்திய பிரார்த்தனையும்தான் என்பதை நாம் அறிவோம். ஆகவே, இன்றைக்குத் தமிழக முதல்வரவர்களும், தமிழக அரசும், தமிழகத்திற்கு — தமிழகத்து மக்களுக்கு மிகவும் நன்றிக் கடன்பட்டிருப்பதை நாம் அறிகிறோம். அந்த நன்றிக் கடனை இந்த அரசாங்கம் மிகச் சீரிய முறையிலே செய்து முடிக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கின்ற காரணத்தால் அந்த நம்பிக்கையோடு மேதகு ஆளுநர் அவர்களின் உரையைப் பார்க்கின்றபொழுது இந்த அரசாங்கம் நன்றிக் கடனைத் தீர்ப்பதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதை நம்மாலே அறிய முடிகிறது.

வயிற்றை நிரப்புவதற்கான திட்டங்கள் இந்த உரையிலே அறிவிக்கப்பட்டிருந்தாலும் மனதை நிறைக்கின்ற திட்டங்கள் இதிலே இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகின்றேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாங்களெல்லாம் ஓரளவிற்கு வயிறு நிறைந்தவர்களாக இருந்துகொண்டிருந்தாலும், எங்களுடைய மனம் நிரம்பாத நிறைவாக ஒரு சூழ்நிலையிலே நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டம் இன்றைக்கு ஒரு தண்ணீர்த் தீவாக,

அங்கே வாழ்கின்ற மக்களெல்லாம் பல்வேறு சோதனைகளுக்கு ஆளாகி வடிக்கின்ற கண்ணீர் வடிகின்ற ஒரு மாவட்டமாக, அத்துடன் துப்பாக்கிச் சூட்டின் காரணமாகச் செந்நீரும் வடிகின்ற ஒரு மாவட்டமாக இருந்துகொண்டிருக்கிறது.

அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய மனம் ஏன் நிறைவாக இல்லையென்று சொன்னால், இரண்டாண்டுகளுக்கு முன்னால் அண்டைய மாநிலமாகிய கேரளத்து மண்ணிலேயிருந்து என்னுடைய சகோதரி ஒருத்தி, பதினெட்டே வயதானவள், இருமுடி கட்டைத் தலையிலே சுமந்துகொண்டு, 41 நாட்கள் விரதமிருந்து, "அம்மே சரணம்" என்று சொல்லி, மண்டைக்காட்டிற்கு வந்தாள் அன்னை பகவதியை, பத்ர காளியைத் தரிசனம் செய்வதற்காக. ஆனால் எந்த தேவியைத் தரிசனம் செய்யவேண்டும் என்று 41 நாட்கள் விரதம் இருந்து என்னுடைய சகோதரி இருமுடிக்கட்டைத் தலையிலே சுமந்து கொண்டு வந்தாளோ அந்தத் தேவியின் ஆலயத்தின் அருகில் என்னுடைய சகோதரியின் ஆடைகளை எல்லாம் பறித்துவிட்டு நிர்வாணமாக்கி விரட்டினார்கள் என்று சொன்னால் 'அம்மையே சரணம், அம்மையே சரணம்' என்று வந்தவள் 'அம்மையே அபயம்' என்று எழுப்பிய கூக்குரல் இன்றைக்கும் என்னுடைய மாவட்டத்தில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது. அவள் வடித்த கண்ணீர், இன்றைக்கும் மண்டைக்காடு கடற்கரையிலே காயாது இருந்து கொண்டிருக்கின்றது. அதன் தொடர்பாக என்னுடைய மாவட்டத்திலே ஏற்பட்டிருந்த பதட்டநிலை என்று சொல்லப்படுகின்ற ஒரு கலவரத்தின் காரணமாக 11 பேர்களைக் கடலிலே தூக்கிப்போட்டுக் கொன்றார்கள் என்று சொன்னால் அந்தப் பதினொரு பேர்களுடைய மனைவிமார்கள், பிள்ளைகள், உறவினர்கள் வடிக்கின்ற கண்ணீர் இன்னும் என்னுடைய மாவட்டத்திலே வடிந்துகொண்டிருக்கின்றது.

இரண்டாவது இந்து எழுச்சி மாநாட்டினைத் தடை செய்த போது காவிக்கொடி ஏந்தி ஊர்வலம் வருவது என்னுடைய பிறப்புரிமை என்று சொல்லி தடையை மீறி காவிக் கொடியைத் தூக்கி வந்தேமாதரம் என்று சொல்லி வந்த என்னுடைய அருமைச் சகோதரர் குமார் சுட்டுக்கொல்லப்பட்டபோது அவர் குண்டடிபட்டு கோட்டாறு வீதியில் விழுந்தபோது அவருடைய உடலிலே இருந்து வடிந்த இரத்தம் இன்றைக்கும் காயாது



இருந்துகொண்டிருக்கின்றது. 136 ஆலயங்களை உடைத்தார்கள். ஒருவருடைய கண்ணைக் கெடுத்தார்கள். காவியைக் கட்டிக் கொண்டு இந்த மண்ணுக்கு சாந்தம் தேவை என்று சொல்லி சாந்தத்தை அங்கே போதித்துக்கொண்டிருக்கிற எங்களுடைய வணக்கத்துக்குரிய அடிகளார் மதுரானந்த மகராஜ் அவர்களைக் கைது செய்தார்கள். அவர்களைச் சிறையிலே வைத்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் காரணமாக என்னுடைய மாவட்டத்திலே, பெரும்பான்மைச் சமுதாயத்தைக் கொண்ட பெரும்பான்மை மதம் என்று சொல்கின்ற இந்து மதத்தைச் சேர்ந்த நாங்கள் என்ன நிலையில் இருக்கிறோம் தெரியுமா? சிங்கத்தைச் சுண்டெலி விரட்டுகின்றது என்ற நிலைக்கு ஆளாகி இருக்கிறோம்.

ஆனாலும் நாங்கள் அங்கே அமைதியாக இருக்கிறோம் என்று சொன்னால், அங்கே ஒரு அமைதி நிலவுகிறது என்று சொன்னால் எங்களுடைய மாவட்டம் அமைதிப் பூங்காவாக மாறவேண்டும் என்ற ஆசை எங்களுக்கு இருக்கின்றது என்று சொன்னால் அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்கின்ற சூழ்நிலை இருக்கின்றதா என்றால் இல்லை.

10 ஆம் தேதி மண்டைக்காடு கடற்கரையில் தேவியின் நிலைமை எப்படி இருக்கிறது என்று சொல்கிறேன். ஆலயத்தில் மீண்டும் திருவிழா நடைபெறுகிறபோது நிலைமை எப்படி இருக்கிறது என்று சொல்கிறேன். எட்டயபுரத்திலே நின்று கொண்டு தன்னுடைய நீண்ட கையை நீட்டி இமயமலையைத் தொட்டுப்பார்த்தான் பாரதி. அந்த இமயமலையிலிருந்து புறப்பட்டு வடபுலத்தில் தவழ்கின்ற கங்கை என்ற அந்தக் குழந்தையை எட்டையாபுரத்திலே நின்று கையை நீட்டி பாரதி தொட்டுப்பார்த்தார். அப்படி அவரால் தொட்டுப் பார்க்க முடிந்தது என்றால் அவர், இந்த நாட்டை தன்னுடைய நாடாக மதித்தவர். அவர் தேசியவாதி என்ற காரணத்தால் அவருக்கு அது முடிந்தது. ஆனால் மண்டைக்காடு தேவியின் ஆலயத்தின் அருகிலே நின்றுகொண்டு வீதியிலிருந்து 300 அடி தூரத்திலே இருக்கின்ற கடலைத் தொட்டுப் பார்ப்பதற்கான உரிமை எங்களுக்கு இல்லை என்று சொன்னால் இந்த நாட்டிலே, 80 சதவீதம் இந்துக்கள் வாழ்கின்ற நாட்டிலே இந்துக்களுக்கு இப்படி ஒரு

நிலை இருக்கின்றது என்பதை நாட்டு மக்கள் உணரவேண்டும் என்பதற்காகத்தான் நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

10 ஆம் தேதி இந்துக்கள் எல்லாம் அங்கே கடல்குளித்து—மதச்சடங்கு முடிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட ஒரு சூழ்நிலை. எங்களுடைய மாவட்டத்திலே வந்ததற்குப் பிறகு அதைத் சென்று பார்க்க வேண்டும் என்று ஓடோடிச் சென்ற நான் காலிலே தாக்கப்பட்டு அங்கே கூடியிருந்த இந்து சமுதாயத்தாலே பாதுகாக்கப்பட்டு, உயிர் பிழைத்து இன்றைக்கு உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறபோது ஒரு காலைச் சரியாக ஊன்ற முடியாத நிலையில் நின்றுகொண்டிருக்கிறேன் என்று சொன்னால் இந்து சமுதாயத்தை நீங்கள் சரியாகப் பாதுகாக்காமல் போனதால் இந்துச் சமுதாயமும் இரண்டு கால்களால் நிற்க முடியாமல் ஒரு காலை ஊன்றிக்கொண்டு ஒரு காலிலே நிற்கவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும். சிங்கத்தை எலி விரட்டுகின்ற சூழ்நிலையை மாற்றி சிங்கத்தை நீங்கள் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே படிக்கின்ற குழந்தைகளுக்கு 8 வது வகுப்பு வரை இலவசமாக பாடப்புத்தகம் வழங்கப்படும் என்பதாகச் சொன்னார்கள். ஆனால் எங்களுடைய மாவட்டத்தில் உண்மை என்ன என்று சொன்னால் அரசாங்கம் நடத்துகின்ற ஒரு பள்ளியின் பெயர் என்ன என்று சொன்னால் அரசு முஸ்லீம் துவக்கப் பள்ளிக்கூடம். அதை எங்களுடைய மாவட்டத்திலே உள்ள சிலபேர் அவர்களுடைய பெயரையும், பிரிவையும் சொல்வதற்கு நான் விரும்பவில்லை "முஸ்லீம் அரசு' பள்ளிக்கூடம் என்று அழைப்பதும் உண்டு. ஆனால் அந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்கின்ற பள்ளிக்கட்டிடங்கள் எல்லாம் இடிந்து போய் அங்கே இருக்கின்ற குழந்தைகள் எந்த நேரத்திலும் ஆபத்தைச் சந்திக்கக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே அந்தப் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கெல்லாம் பாதுகாப்பு தரக்கூடிய அளவுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளிக் கட்டிடங்களை எல்லாம் உடனடியாகப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "அங்கு" பள்ளிக் கூடங்களிலே மதத்தின் பெயரால் எங்கள் இந்து குழந்தைகள் [illegible]க்கப்படுகிறார்கள்; புறக்கணிக்கப்படுகிறார்கள். எங்கள்





(பிற்பகல் 12-10)

மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரியின் மூலமாக பள்ளிக்கூடங் களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் சுற்றறிக்கை ஒன்றினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு நான் வாசிப்பதற்கு விரும்புகிறேன்.

"Government of Tamil Nadu, Department of Employment and Training. District Employment Office, Nagercoil, Dated 23rd January 1985. Ref. No. A1/24490/84. Sub :—Employment Exchange—Registration of names of minority students—Regarding.

The District Employment Officer, Nagercoil, will be visiting St. Mary's Higher Secondary School, Colachel, on 14th February 1985 at 10 a.m. for registering minority students, I request you kindly to instruct the minority students studying in your institution to report to the above School on 14th February 1985 at 10-00 a.m. for registration. Kindly note the following for your guidance. (1) Minority students alone be sent for registration. Kindly note that only willing minority students be instructed to report on the date and time at the place mentioned above. Minority students mean, students belonging to a religion other than Hinduism. I request you kindly to instruct your students to avail this opportunity".

பள்ளிக்கூடத்திலே படிக்கிற எங்களுடைய குழந்தைகளுடைய பெயர்களும், வேலை வாய்ப்பு அதிகாரியாலே பதிவு செய்யப்படும் என்று சொன்னால் அவருடைய கை ஒன்றும் வலித்து விடாது. 80 சதவிகிதம் இந்துக்கள் வாழ்கிற இந்த நாட்டை இந்துஸ்தான் என்று அறிவிக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்ற சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் இன்றைக்கு எங்களுடைய சமுதாயம் புறக்கணிக்கப்படுவதுதான். ஆகவே, இந்த சமுதாயம் புறக்கணிக்கப்படுகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டாமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை வறுமையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் இருக்கிற காரணத்தால் மாம்புழுத்துறை திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும் மென்ற வேண்டுகோளை வைப்பதற்கு ஆசைப்படுகிறேன். எங்கே சென்றாலும் சாலை இல்லை என்ற சூழ்நிலையும், எங்கே சென்றாலும் குடிநீர் இல்லையென்ற சூழ்நிலையும், எங்கே சென்றாலும் மின்வசதி மருத்துவ வசதி இல்லையென்று

சூழ்நிலையும் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஒரே ஒரு அரசாங்க மருத்துவமனையான பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில் குடிநீர் கிடையாது. அங்கே மின்விளக்கு எரிவது கிடையாது. தமிழ்நாட்டிலேயே மின்சார வசதி இல்லாத ஒரே ஒரு மருத்துவமனை, என்னுடைய தொகுதியிலே இருக்கிற மருத்துவ மனையாகத்தான் இருக்க முடியும். ஆகவே, அக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரே ஒரு வேண்டுகோளை அரசாங்கத்தின் முன்னாலே வைக்க விரும்புகிறேன். 1981-82-ஆம் ஆண்டு கலவர சூழ்நிலையின்போது எங்களுடைய அடிகளார் மதுரானந்த மகராஜ் அவர்கள் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திலே வைக்கப்பட்டு, சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்படுகிற வழியில் அவர் மீது போடப்பட்ட வழக்கு பொய் வழக்கு என்று மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளரால் கண்டு பிடிக்கப்பட்டு அந்த எப்.ஐ.ஆர். ரெஃபர் செய்யப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆகவே, பொய்யான வழக்கு பதிவு செய்த அந்தக் காவல் துறை அதிகாரி மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இனிமேல் இந்து சமுதாயத்திற்கு இப்படிப்பட்ட சூழ்நிலை வராது என்று அரசாங்கம் உத்தரவாதம் வழங்க வேண்டும். மண்டைக்காடு சம்பவம் மீண்டும் வராது என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் தர வேண்டும். இந்துப்பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு அவமதிக்கப்பட்ட நிலை மீண்டும் வராது என்ற உத்தரவாதத்தினை அரசாங்கம் தர வேண்டும். பெண்மானம் பாதுகாக்கப்படும் என்ற உத்திரவாதத்தை தர வேண்டும். பெண் மானம் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தை தரவேண்டும். பொய் வழக்குகளுக்கு ஆளாகி குற்றவாளிகள் அல்ல என்று விடுதலை பெற்றிருக்கிற இந்துச் சகோதரர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று சொல்லி, இந்து சமுதாயம், என்ற சிங்கத்தை எலி விரட்டும் சூழ்நிலையை மாற்றுவதற்கு எல்லா முயற்சிகளும் செய்யவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

**திரு. சா. ஞானசுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் [illegible] ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற வேளையில் [illegible] சட்டமன்றத்தினுடைய உறுப்பினராக அமரப்பெறும்





பொறுப்புக்குச் சொந்தக்காரராக இருக்கிற, கர்த்தாவாக இருக்கின்ற, பொன்மனச் செம்மல், தமிழகத்தினுடைய தளநாயகன் புரட்சித் தலைவருக்கு என்னுடைய நன்றியை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கடுத்தாற்போல் இந்தச் சட்டமன்றத்தின் உறுப்பினராக ஆகின்ற பெரும் பொறுப்புக்குச் சொந்தக்காரர்களாகிய நான் சார்ந்திருக்கின்ற மன்னார்குடி தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்கள் என்கிற வகையில் என்னை இந்தச் சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிற வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் இந்தப் பேரவை மூலம் முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரை விவாதத்தில் இங்கே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உரையை ஆதரித்தும் எதிர் அணியிலே இருக்கிறவர்கள் அதற்கு மாற்றுக் கருத்துக்களையும் கூறி வந்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையிலும் ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தினுடைய திட்டங்களை, நல்லபல காரியங்களை, ஆண்டுக்காண்டு செய்கின்ற வற்றை எடுத்துச் சொல்கிற அறிக்கை என்று நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அறிக்கையின்மீது பேசும் போது, ஆளுகிற கட்சி செய்வது தவறு என்றும் அதை சுட்டிக்காட்டுகிற உரிமையும் எதிர்க்கட்சிகளுக்கு உண்டு என்பதையும் எங்களாலே மறுக்க முடியாது. அதே நேரத்தில் நாங்கள், ஆளுகிற வரிசையில் இருக்கிற உறுப்பினர்கள், இந்த அரசும் அதனுடைய தலைவராக இருக்கிற புரட்சித் தலைவரும் கொண்டு வந்திருக்கிற நல்ல திட்டங்களை இங்கே வைக்காமல் இருக்க முடியாது. அந்த வகையிலேதான் இந்தச் சட்டமன்றத்தில் இன்றைக்குப் பெரும்பான்மையாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்று சொன்னால் அதற்கான காரணங்களை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உங்கள் பக்கத்திலே இருக்கிற கூட்டணி கட்சிகள், வளர்பிறை போல் இருந்தவர்கள் எல்லாம் இன்று தேய்பிறையாகக் காட்சி அளிக்கிறார்கள் என்ற நிலையை எண்ணிப் பார்க்கிற நேரத்தில், நான் மெத்த வருத்தப்படுகிறேன். காரணம் உங்களுடைய தவறான கொள்கைகள், உங்களுடைய தவறான பேச்சுக்கள், உங்களுடைய தவறான வழிமுறைகள் இவற்றால் இந்தத் தேர்தலிலே நீங்கள் தோல்வியைத் தழுவி இருக்கிறீர்கள். அதனால் நான் நீங்கள் மிகக்குறைவான எண்ணிக்கையில் சட்டசபைக்கு

வந்திருக்கிறீர்கள். ஆனால் நாங்கள் இருந்த எண்ணிக்கையை விட அதிகமான எண்ணிக்கையைப் பெற்றிருக்கிறோம், என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் மன்னார்குடியிலிருந்து வந்திருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் மன்னார்குடியை தமிழகத்தின் மாஸ்கோ என்று சொல்வார்கள். பொதுவுடைமை கருத்துக்களுக்கு, புரட்சிக் கருத்துக்களுக்கு புகழ்பெற்ற அந்த மண்ணிலிருந்து வந்திருக்கிற நான், கீழ்த்தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற நான், சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவுடைமைக் கருத்துக்களை எல்லாம் புரட்சித்தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால், அந்த அடிப்படையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிற காரணத்தால், அவர்கள் செய்கிற காரியங்களை எல்லாம் தாய் உள்ளத்தோடு செய்கிற காரணத்தால்தான் இன்றைக்கு அந்தப் புரட்சிக் கருத்துக்களுக்குச் சொந்தக்காரர்கள் அங்கே வீழ்ச்சிபெற்று, மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, இரட்டை இலை சின்னத்தை வெற்றி பெற செய்திருக்கிறார்கள்.

காரணம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால்தான் அங்கே வாழ்கிற விவசாயத் தொழிலாளர்கள் பல நன்மைகள் பெற்றிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே இருந்த அரசாங்கம் அங்கே விவசாயத் தொழிலாளர்கள் போராட்டத்தை நடத்தியபோது, மன்னார்குடியில் வண்டிப் போராட்டத்தை நடத்தியபோது தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, வண்டிகளை எல்லாம் தாக்கி சேதப்படுத்தினார்கள். அது போன்ற நிகழ்ச்சிகள் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே கிடையாது. போராட்டம் இல்லாமல் உங்களுடைய கோரிக்கை இல்லாமல், கொடிபிடிக்காமல் எங்களுடைய புரட்சித் தலைவர் ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்காக முன் வந்து, விவசாயத் தொழிலாளர்கள் பிரச்னையில், "நான் இருக்கிறேன் உங்களை காபந்து செய்கிறேன்" என்று அவர்களுடைய கூலியை அதிகமாக உயர்த்தித் தந்து அவர்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கிற ஆதிதிராவிட மக்கள் அவர்கள் வாழ்க்கையில் வளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் இதை யாரும் மறுக்க முடியாது. வளர்ந்து வரும் நாடுகளில் இந்திய நாடு சிறப்பாக வளர்ந்து வருகிறது. அந்த வகையில்



பார்க்கும்போது மற்ற எல்லா மாநிலங்களையும் விட தமிழ்நாட்டிலே தான் இன்றைக்கு ஆதிதிராவிட மக்கள் அதிக வசதிகளைப் பெற்று வாழ்க்கையில் வளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் தான் அந்த ஆதிதிராவிட மக்கள் குடும்பத்தில் யாராவது ஒருவர் இறந்துவிட்டால் உடனடியாக ஈமச்சடங்குகளைச் செய்வதற்காக ரூ. 50 அளிக்க உத்தரவிட்டார்கள். அதற்கு முன்னால் அந்த ஏழைமக்கள் உடனடியான செலவுகளை செய்வதற்காக வீட்டுச் சாமான்களையும், நகைகளையும் அடகு வைத்து பணம் பெற்று அச் சடங்குகளை நடத்தவேண்டியிருந்தது. அந்த நிலை இப்போது மாறி இருக்கிறது.

ஆதி திராவிட மக்கள், விவசாய கூலிகள், விவசாயத் தொழிலாளர்கள் முதலியோர் பயனடையும் வகையில் காப்புறுதித் திட்டத்தைக் கொண்டு வந்து அவர்களுக்கு அளிக்கப்படும் 5,000 ரூபாயை 10,000 ரூபாயாக இன்றைக்கு உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அந்த விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகளுக்கெல்லாம் வாழ்க்கைக்கு உத்தரவாதத்தைத் தந்து ஈட்டுறுதித் திட்டத்தையும், காப்புறுதித் திட்டத்தையும் இந்த அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் அந்தத் திட்டங்களை நான் பாராட்டுவதற்கு கடமைப் பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் ஆதி திராவிட தாய்மார்கள், பச்சிளங்குழந்தைகள் ஒருவேளை உணவு உண்பதற்குக் கூட வழியில்லாமல், வயல்வெளிகளுக்குச் சென்று வேலை முடிந்த பின்னால் மாலையில் உணவுப்பொருட்களை வாங்கி சாப்பிட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் அந்தத் தொழிலாளர்களை மனதிலே வைத்து, அவர்களை காப்பாற்ற வேண்டுமென்ற முறையில், அந்தக் குழந்தைகள் வளர வேண்டுமென்ற எண்ணத்திலே தான், 'நான் இருக்கிறேன், ஒருவேளை உணவைத் தருகிறேன்' என்று முதலமைச்சர், குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை இங்கே தந்திருக்கிறார்கள். அப்படி தந்திருக்கிற காரணத்தினால் தான், புரட்சித் தலைவர் அவர்களை இன்று மக்கள் ஆட்சியில் அமரச் செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு வேலை நிறுத்தங்களே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக

கிராமப்புறங்களுக்கு சாலை வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். மின்சார வசதியைத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். இங்கே இருப்பவர்கள் கேலி பேசலாம், வெளியே எப்படி வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் ஏழை, எளிய மக்கள் தங்கள் குடிசைகளில் மின்சார வசதியைப் பெற்றிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் தான் 'நான் இருக்கிறேன்' என்று சொல்லி அவர்களுக்கு 10 ரூபாய் கட்டினால் போதும் என்ற நிலையில் இலவசமாக மின்சாரத்தைத் தருகிற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் வறட்சி வந்த காலத்தில் கீழத்தஞ்சை மாவட்டத்தில் நிலவள வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலமாக 5,000 குழாய்க் கிணறுகளை அமைத்து மக்களை வாழ வைத்திருக்கிற எங்கள் இதய தெய்வத்தை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிற வகையில் கோட்ட கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 6,000 ரூபாய் தருகிற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலே 1,500 ரூபாய் மானியத்தைத் தந்து, அந்த மானியத்தைத் தருகிறவேளையில் 20 ஆண்டுகளில் கட்ட வேண்டுமென்று சொல்லி, கட்டுவதற்கு வட்டி ஏதுவும் இல்லை என்ற முறையில் சட்டத்தைப் போட்டு ஆதி திராவிட மக்களை வாழ வைத்துக் கொண்டிருப்பவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான்.

(பிற்பகல் 12.20)

இன்றைக்கு கிராம உத்தியோகஸ்தர்கள், நிர்வாக அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னால் இருந்த மணியக்காரர், கணக்குப்பிள்ளை எல்லாம் வீட்டுக்கு அனுப்பப்பட்ட நேரத்தில்—ஆதி திராவிடர் நலத்தைப் பற்றிப் பேசுகின்ற நண்பர்களைக் கேட்கிறேன்—தமிழ் நாட்டில் எத்தனை பேர் [illegible] ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் இருந்தார்கள்? புரட்சித் தலைவர் அவர்கள் வந்த பிறகு எத்தனை பேர் வந்திருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். கிராம நிர்வாக [illegible] அதிகாரியாக [illegible] நியமிக்கிற





வேளையில் ஆதி திராவிட மக்களையும் நியமிக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு என்பதைச் சரியாக பூர்த்தி செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள்; அதனால் 2000-க்கு மேற்பட்டவர்கள் இன்றைக்கு தமிழ் நாட்டில் கிராம நல அதிகாரிகளாகப் பணியாற்றுகிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது மட்டுமல்ல. இலவச சீருடை திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த இலவச சீருடைத் திட்டத்தை நீங்கள் பாராட்டாமல், அதைப் போற்றாமல், அதைப் புகழாமல் இகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். சீருடை என்பது சாதாரண திட்டமா? ஏழை எளிய மக்களுக்கு ஒரு மாற்று உடை கூட இல்லாதவர்களுக்கு இந்த சீருடைத் திட்டம் வருகிறது என்றால் அதை நீங்கள் வரவேற்க வேண்டாமா?

நான் படிக்கிற காலத்தில் ஒரு சில பள்ளிகளில், உயர்ந்த பள்ளிகளில், கான்வென்டுகளில்தான் சீருடைத் திட்டம் இருக்கும்; மாணவர்கள் சீருடை அணிந்து செல்வார்கள். இன்றைக்கு சென்னை மாநகரில் சில பள்ளிகளில் சீருடை அணிகிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் கிராமப்புறங்களில் வசிக்கிற ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அந்த வசதி இல்லை. தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள்—இவர்களெல்லாம் சீருடை அணிகிறார்கள் என்றால் அது உங்களுக்கு சாதாரணமாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் அது ஒரு மாபெரும் திட்டம் என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அவையிலே பல்வேறு திட்டங்களை நம்முடைய [illegible] தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒன்று கூட்டுறவுச் சட்டம் பற்றியது. இங்கே கூட்டுறவு நிறுவனங்களுக்கு தேர்தலை

[திரு. சா. ஞானசுந்தரம்] [1985 மார்ச் 14

நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். தேர்தல் நடத்துவதை வரவேற்கின்ற அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தலை நடத்துவதற்கு முன்னால் கூட்டுறவு கடன் பெற்றிருக்கிற சிறு விவசாயிகளுக்கு வட்டியையும் அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ததோடு நீண்ட கால கடன் பெற்றவர்களுக்கு சில சலுகைகளையும் அளித்திருக்கிறார்கள்.

இந்த கூட்டுறவு அமைப்புகள் சரியாக, செம்மையாக இயங்க வேண்டுமென்றால், இந்தத் துறையிலே இந்தியாவிலேயே சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிற தமிழ்நாடு கறுப்புப் பட்டியலில் இடம் பெறாமல் இருக்க வேண்டுமென்றால் என்னுடைய வேண்டுகோளாக நான் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். தஞ்சை மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருப்பதை இங்கே தெரிவிக்கிறேன். அவர்கள் பெற்றிருக்கிற விவசாயக் கடன் இருக்கிறதே, அதற்கு வட்டியும் அபராத வட்டியும் அந்த அசலைவிட பல மடங்கு உயர்ந்திருக்கிறது. அந்த வட்டியையும் அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன். புயல், வெள்ளத்தால் அவர்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் கூட்டுறவு இயக்கம் வளராமல், வளர முடியாமல் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு தகுந்த பரிகாரமாக வட்டியையும் அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

அடுத்து என்னுடைய மன்னார்குடி தொகுதி பற்றிய சில விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். மன்னார்குடியில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த வேண்டும். அங்கே செம்பறையில் ஒரு பாலம் கட்ட வேண்டும். தாமரையாற்றில் ஒரு பாலம் கட்ட வேண்டும். வடபாதிமங்கலத்திற்கு அருகில் வடவேற்குடியில் ஒரு பாலம் கட்ட வேண்டும். கும்முட்டி திடல் சாலையை விரிவுபடுத்தி, அதை பொதுப்பணித் துறையிலிருந்து நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்ற வேண்டும். களப்பால் என்ற கிராமத்தில் இப்போது பல்வேறு ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த பகுதியில் எண்ணெய் வயல் இருப்பது கண்டுபிடிக்கப்



[திரு. சா. ஞானசுந்தரம்]

பட்டிருக்கிறது. அங்கே கிடைக்கிற எண்ணெய் மிக உயர்ந்த ரகமாக இருக்கிறது என்று ஆய்வில் தெரிவித்திருக்கிறார்கள். அது ஆகாய விமானத்திற்குப் பயன்படுத்தக்கூடிய பெட்ரோலாக, உயர்ந்த ரகமாக இருப்பதால் தமிழக அரசின் சார்பில் அந்த திட்டத்தை விரைவாக நிறைவேற்ற மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு வாக்களித்து இந்த மாமன்றத்தில் உறுப்பினராக்கி, இங்கே நான் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த கும்பகோணம் வாக்காளர் பெருமக்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில் அது ஒரு சடங்காகத் தான் இருக்கிறதே தவிர, தமிழக மக்களுடைய ஆசைகளை அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக இல்லை, அப்படிப்பட்ட கொள்கை விளக்கமாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

24 நீண்ட பக்கங்களைக் கொண்ட இந்த ஆளுநர் உரையில் காவிரி நீர் பங்கீடு பற்றி ஒரு வார்த்தைகூட இல்லை. நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணி என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் வர்ணிக்கப்பட்ட அந்த தஞ்சை மாவட்டம் இன்றைக்கு சகாரா பாலைவனமாக மாறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பயங்கரமான நிலைமையைக் கருதி தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் அகதிகளாக மற்ற மாவட்டங்களுக்கு, மற்ற மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதைக் குறித்து இந்த கவர்னர் உரையில் ஒரு வார்த்தை கூட குறிப்பிடாமல் இருப்பது, வருந்தத்தக்கது. தமிழக அரசு எதிர்காலத்திலே தஞ்சை மாவட்டத்தை காப்பாற்ற என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? கர்நாடக மாநிலத்திலிருந்து காவிரி நீரை பங்கிட்டுப் பெற என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைப்பற்றி குறிப்பிடாதது மிகவும் வேதனையான விஷயமாகும்.

[திரு. கி. கிருஷ்ணமூர்த்தி] [1985 மார்ச் 14

மேலும் தஞ்சை மாவட்டத்தைக் காப்பாற்றி, தமிழகத்தின் நெற்களஞ்சியமாக இருக்கிற தஞ்சைக்கு மட்டுமின்றி, தமிழகத்திலே நெல் வளம் கொழிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மத்திய அரசு மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மிக அதிகமாக கவனம் செலுத்தும், 'என்விரான்மென்ட் பொலுசன் கன்ட்ரோல்' என்பது பற்றி கவர்னர் உரையிலே எந்தவிதமான குறிப்பும் இல்லை. இப்போது தமிழகத்தில் புதிய தொழில்கள், பெரிய தொழில்கள் புதிதாக தொடங்காவிட்டாலும், ஏற்கனவே உள்ள தொழில்கள் வழங்கும் விஷப் புகைக்கு எந்த விதத்திலும் குறைவில்லை. இதுகுறித்து தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பது பற்றியும் இந்த கவர்னர் உரையிலே எந்தவிதமான குறிப்பும் இல்லை.

சென்ற மாதத்தில் எண்ணூரில் விஷக் காற்று சுவாசித்து பலர் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டனர். சென்ற வாரத்திலே மேட்டூரிலே பலர் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டனர். இவைகள் எல்லாம் செய்தித் தாள்களிலே தொடர்ந்து வந்து கொண்டிருந்தாலும், இந்த நச்சுப்புகையிலே இருந்து தமிழக மக்களை காப்பாற்ற எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்ததாக இந்த கவர்னர் உரையிலே இல்லை.

மேலும் 13—3—1985 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையைப் பார்த்தால், 'ஹாரி மில்லர்' என்பவர் புகைப்படத்துடன் இந்த 'என்விரான்மென்ட் அன்ட் பொலுசன் கண்ட்ரோல்' பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அதைப் படித்தால் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. எண்ணூரில் உள்ள அனல் மின் நிலையம் விஷப் புகையைக் கக்கி, கிருமிகளை வெளியேற்றி மக்களுக்கு பல்வேறு பெரிய நோய்களைப் பரப்புகிறது என்று அந்தச் செய்தியிலே சொல்லியிருக்கிறார்கள். இதைப் பொறுத்து தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேஷசாயி பேப்பர் மில்ஸ், சக்தி சுகர்ஸ், இன்னும் நம் நாட்டில் இருக்கின்ற டிஸ்டிலரி யூனிட்டுகள் போன்றவைகள் எல்லாம் மக்களுக்கு விஷக் காற்றைத்தான் சப்ளை செய்கிறதே தவிர, மக்களுக்குச் சிறந்த தொண்டாற்றுவதாகத் தெரியவில்லை.



1985 மார்ச் 14] [திரு. கி. கிருஷ்ணமூர்த்தி]

எனவே மக்கள் சுகாதாரத்தோடும், நல்ல ஆரோக்கியத்தோடும் வாழ தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று தெரியவில்லை.

அடுத்து 1985 ஆம் ஆண்டை சர்வதேச இளைஞர் ஆண்டாக அறிவித்திருக்கிறார்கள். இப்போது ஏற்பட்ட ஆட்சி பற்றி மிக மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிற மேதகு ஆளுநர் அவர்கள், இந்த ஆண்டிலே தமிழக அரசு இளைஞர்களுக்கு என்ன திட்டம் வைத்திருக்கிறது என்பது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. மேலும் மத்திய அரசு தீட்டிய சுயவேலைவாய்ப்பு போன்ற திட்டங்கள் எதுவும் தமிழக அரசிடம் இருப்பதாகவோ, அதற்காக தமிழக அரசு முயற்சி செய்ததாகவோ, ஆளுநர் உரையிலே இல்லாதது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். இது குறித்து தமிழக இளைஞர்களுக்கு பொருளாதார ரீதியிலே, பின்தங்கிய இளைஞர்களுக்கு உதவி, அவர்கள் வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு, தமிழகத்தை வளமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். "எங்களுக்கு உண்ணுவதற்கு மீன் கொடுப்பது வேண்டாம், மீன் பிடிப்பது எப்படி என்று கற்றுக் கொடு, அது எங்கள் வாழ்க்கைக்குப் பயன்படும்" என்று சீனத்துப் பொன் மொழியை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எங்களுக்கு நீங்கள் படிக்க சத்துணவு அளிக்கிறீர்கள், உடுக்க உடை அளிக்கிறீர்கள், மேலும் படிக்க புஸ்தகங்கள் அளிக்கிறீர்கள். அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. வரவேற்கிறோம். ஆனால் படித்து வந்தபிறகு நாங்கள் என்ன தொழில் செய்வது? என்ன காரியம் செய்வது? எப்படி வாழ்வது? என்று சொல்கிற படித்த இளைஞர்களுக்கு, புதிய தொழில்கள் துவங்குவதற்கு ஆதரவு காட்டுங்கள், வழி காட்டுங்கள், உதவி செய்யுங்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் ஒரு நாளைக்கு ஒரு தொழிற்சாலை என்று அறிவித்த அரசு 1967-லே மாற்றப்பட்டது. அதற்குப் பிறகு தமிழகத்திலே எந்தவித பெரிய தொழிற்சாலையும் திறக்கப்படவில்லை. அப்படி புதிய தொழில்களைத் தொடங்கினால், படித்த இளைஞர்கள், பொருளாதார ரீதியிலே பின்தங்கிய இளைஞர்கள்,

முன்னுக்கு வருவதற்கு நல்ல ஒரு சந்தர்ப்பமாக இருக்கும். அதற்கு தமிழக அரசு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை அது 2 முதலமைச்சர்களை தமிழகத்திற்குத் தந்திருக்கிறது. முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களையும், தற்போதைய முதல்வர் அவர்களையும் தஞ்சை மாவட்டம் தந்துள்ளது. ஆனால் தஞ்சை மாவட்டம் பொருளாதார ரீதியிலே, தொழில் துறையிலே மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருந்து வருகிறது. அந்த மாவட்டத்தை, இன்டஸ்ட்ரியலி பேக்வார்ட் ஏரியா, என்று மத்திய அரசால் அறிவிக்கச் செய்து, அந்த மாவட்டத்திலே தொழில்கள் துவங்குவதற்கு மத்திய அரசும் மாநில அரசும் எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

மேலும் தஞ்சை மாவட்டத்திலே 1967 ஆம் ஆண்டிற்குப் பிறகு எந்த ஒரு தொழில்பேட்டையும் உருவாக்கவில்லை. அந்த தொழிற்பேட்டைகளை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நவீன விஞ்ஞான உலகத்திலே மிகவும் பாப்புலராக உள்ள எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் போன்ற துறையிலே தமிழக அரசு கவனம் செலுத்தாதது வருத்தத்திற்குரியது. உத்திர பிரதேஷ், பீகார், குஜராத், மஹாராஷ்டிரம் போன்ற மாநிலங்கள் எலக்ட்ரானிக் துறையிலே மிகவும் முன்னேறி சர்வதேச அரங்கிலே தங்களுடைய பொருட்களை விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு வளர்ந்துள்ள நிலையில், தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அதில் எந்த ஒரு தொழிலிலேயும் ஈடுபடாமல் அந்தத் துறைகளை புறக்கணிப்பது வருந்தத்தக்க ஒரு செய்தியாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அந்தத் துறைகளிலே நாம் நுழைந்தால் உலக அரங்கில் நம் மாநிலம் சிறந்த நாடாக விளங்கும். மிக அதிகமான அளவில் எலக்ட்ராணிக் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அந்நியச் செலாவணியை பெருமளவில் சம்பாதிக்க வாய்ப்பு ஏற்படும். படித்த பல இளைஞர்களுக்கு அது நல்ல வாய்ப்பாகவும் அமையும்.





இன்று தமிழகத்தின் சாலைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறினார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க் கட்சி உறுப்பினர்களும் தமிழகத்தின் சாலைகள் மிகவும் மோசமாக உள்ளன என்று சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே 1967-க்குப் பிறகு புது சாலைகள் போடப்பட்டதாகவே ஞாபகத்தில் இல்லை. அந்த அளவிற்கு சாலைகளின் நிலை மிகவும் மோசமாக கேவலமாக இருக்கின்றன.

தஞ்சையில் நாங்கள் வெற்றி பெற்ற தொகுதியின் வாக்காளப் பெருமக்களை சந்திக்கவே அஞ்ச வேண்டிய நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு நாளும் தண்ணீர் பிரச்னை, சாலை பிரச்னை, சாக்கடைப் பிரச்னை என்று பல பிரச்னைகளைத் தீர்க்க வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், பி.டி.ஓ., டி.டி.ஓ, நகரசபைக் கமிஷனர் என்று இவர்களை அன்றாடம் சந்தித்து மக்களுடைய பிரச்சனைகளைப் பற்றி பேசுவதற்குத் தான் நேரம் இருக்கிறது. இதே நிலை நீடித்தால், இந்த அவைக்கு வருவதற்குக் கூட நேரம் இருக்காது என்று நினைக்கிறேன். அந்த அளவிற்கு ஊரிலே பல பிரச்னைகள் இருப்பதற்குக் காரணம், நகரசபைத் தேர்தல்களும், பஞ்சாயத்து யூனியன்களின் தேர்தல்களும் நடத்தாததுதான். உண்மையில் நாங்கள் என்ன பணி செய்கிறோம் என்றால், நகரசபை, கவுன்சிலராகவும், பஞ்சாயத்து யூனியன் தலைவராகவும்தான் பணி செய்து வருகிறோமே தவிர, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பணிபுரிய நேரம் இல்லை.

பொது மக்களை சந்தித்து பிரச்சனைகளைப் பற்றி பேசினால், அவர்களுடைய பேசிக் (basic) பிரச்னைகள் தண்ணீர் இல்லை, ரோடு இல்லை, லைட் இல்லை என்பதுதான். இவைகளுக்குத்தான் எங்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. ஆகவே, தமிழக அரசு உடனடியாக உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கு தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பி.டி.ஓ. டி.டி.ஓ. போன்றவர்களைச் சந்தித்து இந்தப் பிரச்னைகளைப் பற்றிக் கேட்டால், நிதி இல்லை, வசதி இல்லை, பணம் இல்லை என்கிறார்கள். [illegible] காரணம் கேட்டால் [illegible] [illegible] ஆனால் அதே நேரத்தில் [illegible] இல்லை. மிகவும் [illegible]

கெடுபிடியாக, விவசாயிகளை துன்புறுத்தி வசூல் செய்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் கேட்டால் எங்களிடம் நிதி இல்லை மேட்சிங் கிராண்டிற்காக வசூல் செய்ய உத்தரவு வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதன் விளைவாக 8 வருஷங்களாக கேட்கப்படாமல் இருந்த கிஸ்தியை ஒரே நேரத்தில் கட்டுவது என்றால் விவசாயிகள் மிகவும் துன்பப் படுகிறார்கள். விவசாயிகளை துன்புறுத்தி கிஸ்தி வசூல் செய்வது மிக அதிகமாக இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும், விவசாயிகளைத் துன்புறுத்தக் கூடாது. கிஸ்தி வசூல் செய்வதை நிறுத்தி வைக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கும்பகோணம் நகரம் நமது இன்றைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்குச் சொந்த ஊர். ஆனால் யாருக்கும் கும்பகோணம் என்று சொன்னால், தமிழக முதல்வரின் பெயர் ஞாபகத்திற்கு வராது. கொசுவின் ஞாபகம் தான் வரும். அந்த அளவிற்கு கொசுவின் தொல்லை அங்கே அதிகமாக இருக்கிறது. அதற்காக கும்பகோண நகரத்திற்கு பாதாள சாக்கடை கட்டும் திட்டம் ஒன்றைத் தீட்டி, அரசின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த திட்டத்தை யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன், யூனிசெப்பின் மானியத்துடன் நிறைவேற்றித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கும்பகோணம் நகரம் வடநாட்டு கும்பமேளாவைப் போன்று, மகாமகத் திருவிழாவை தன்னகத்தே கொண்டுள்ள மிகச் சிறப்பான நகரமாகும். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதற்கென தென்னிந்திய மக்களும், வட இந்திய மக்களும் யாத்ரீகர்களாக, பக்தர்களாக வருகின்றனர். அப்படி அந்த நகரத்திற்கு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் யாத்ரீகர்களுக்கு, எந்த ஒரு ஏற்பாடும் சிறப்பாக இல்லை. ஆகையினால், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், அந்த மகாமகத் திருவிழாவை நேஷனல் ஃபெஸ்டிவல் என்று அறிவித்திட்டால், அதற்கு மத்திய அரசின் நிதி உதவியும் ஏராளமாகக் கிடைக்கும். அப்படி மத்திய அரசு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை, நிதி உதவியை கும்பகோணத்திற்கு கொடுத்தால், கும்பகோணத்தையும், அதைச் சுற்றியுள்ள பகுதியையும்



சீர்திருத்தி தமிழக அரசின் செலவில்லாமல், மைய அரசின் செலவிலேயே அந்தப் பகுதியை முன்னேற்றம் அடையச் செய்ய வாய்ப்பாக அமையும் என்று கூறிக் கொள்கிறேன்.

குடந்தை அரசினர் மருத்துவ மனை சுமார் 3 லட்சம் மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டியிருக்கிறது. அப்படி மிகப் பெரிய அளவில் மக்களுக்கு தொண்டு செய்யும் அந்த மருத்துவ மனையிலே, இரண்டே இரண்டு லேபர் வார்டுகளுக்கான படுக்கை களும், 6 குழந்தைகளுக்கான படுக்கைகளும் தான் இருக்கின்றன, என்பது மிகவும் வேதனைக்குரிய செய்தியாகும். ஆகவே, இந்த குடந்தை நகர அரசு மருத்துவ மனையை விரிவு படுத்தி, குடந் தையில் உள்ள அனைத்து மக்களுக்கும், நல்ல சுகாதார ரீதியான மருத்துவ உதவிகள் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடந்தை யிலே ஒரு பொறியியற் கல்லூரியையும் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிய தொழில்களை குடந்தையில் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடந்தை வழக்கறிஞர் சங்கத்திற்கு கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்று உயர்நீதி மன்றத்தால் பரிந்துரை செய்யப்பட்ட பேப்பர் இன்னும் அரசிடம் தான் இருக் கிறது. உடனடியாக அதற்கு அனுமதி வழங்கி குடந்தை வழக்கறிஞர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாச்சியார் கோவில் நகரத்திலே பெண்கள் உயர்நிலைப்பள்ளிக் கூடம் ஏற்படுத்தவேண்டுமென்று ரூ. 25,000 செலுத்தி 4, 5 மாதங்கள் ஆகியும் எந்தவித அறிவிப்பும், உத்திரவும் வரவில்லை. ஆனால் நாச்சியார் கோவிலைச் சார்ந்துள்ள மற்ற பகுதிகளுக்கு உத்திரவு வந்துவிட்டது என்பது வேதனைக்கு உரிய விஷயம்.

பழைய நாட்களில், ஊர்ப்பகுதிகளில், மக்கள் வாய்க்கால்களில் மராமத்து வேலையை செய்வார்கள். தற்போது அரசு அதனை செய்து வருகிறது. பி.டபிள்யூ.டி., ஏ.பி. சேனலையும், பஞ்சாயத்து யூனியன் சி.டி. சேனலையும் செய்து வருகிறது. இதனால் ஏற்படும் பல்விதமான குழப்பங்களால் மராமத்து சரிவர செய்ய முடியவில்லை. அனைத்தையும், ஏதாவது ஒரு குழுவோ, அல்லது பஞ்சாயத்து யூனியன் மட்டுமோ, அல்லது பி.டபிள்யூ.டி. மட்டுமோ செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கி. கிருஷ்ணமூர்த்தி] [1985 மார்ச் 14

மேலும் தஞ்சை மாவட்டத்திலே போலீசார் செய்து வரும் கொடுமைகள் மிகவும் அதிகம். திருத்துறைப்பூண்டியிலே, காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவரை, காவல் துறைக்கு வேண்டியவர்களின் பொய் புகாரின் பேரில் ஸ்டேஷனுக்கு கொண்டு சென்று நிர்வாணமாக அடித்து, உதைத்து, லாங் செயினை போட்டு ரோடிலே அழைத்து வந்து அவமானப் படுத்தினார்கள். இதுகுறித்து மேல் அதிகாரிகளுக்கு தெரிவித்தும், டி.ஐ.ஜி.-யை நேரில் சந்தித்து விளக்கம் கூறியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது வருத்தத்தை அளிக்கிறது.

அடுத்து வழக்கறிஞர்களை கண்ட இடங்களில் போலீசார் தாக்குகின்ற நிலைமை இருக்கின்றது. நடந்த குற்றங்களுக்கு குற்றவாளிகளை விட்டுவிட்டு, வழக்கறிஞர்களையும், காங்கிரஸ் கட்சியினரையும் தாக்குவது தற்போது போலீசாருக்கு ஒரு பொழுதுபோக்காக உள்ளது. இந்த நிலையை மாற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவாரூரில் நகர காங்கிரஸ் துணைத் தலைவர் அவர்களுக்கு சொந்தமான லாட்ஜும், சினிமா கொட்டகையும் அழித்த நிலைக் கும், லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்திய நிலைக்கும் மாற்றுக் கட்சி தோழர் ஒருவர் காரணம் என்று போலீசில் சொல்லியும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், ஊரில் சிவில் கேஸ்களில் தலையிட்டு அவர்களை ஸ்டேஷ னில் அழைத்து வைத்து சமாதானமாக குரங்கு மத்தியஸ்தம் செய்கிறார்கள். குரங்கு மத்தியஸ்தனத்தால் யார் பலன் அடை வார்கள் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இத்தகைய சூழ் நிலை தான் தஞ்சை மாவட்டத்திலே நிலவி வருகிறது. இந்த நிலையை மாற்ற அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு முக்கியமான காரணம், போலீஸ் அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் ஒரே இடத்தில் பலகாலமாக இருந்து வருவது தான். கீழ் தஞ்சை மாவட்டத்திலே மாவட்ட போலீஸ் கண் காணிப்பாளர் சுமார் 4½ ஆண்டுகளாக அந்த ஊரில் இருந்து வரு கிறார். திருத்துறைப்பூண்டி டி.எஸ்.பி. அதே ஊரில் 5 ஆண்டுகள் தொடர்ந்து இருந்து வருகிறார். அதே இடத்தில் இருந்து



1985 மார்ச் 14] [திரு. கி. கிருஷ்ணமூர்த்தி]

வருவதால், வெஸ்டட் இன்ட்டரஸ்ட் ஏற்பட்டு, அந்த ஊரிலேயே சொத்துக்கள் வாங்கி, சுகத்தை தேடி, ஊழல் புரிய ஆரம்பித்து விடுகிறார்கள். (மணியடிக்கப் பெற்றது). அவர்களை தமிழக அரசு ரெகுலராக, குறிப்பிட்ட காலத்தில் மாற்றல் செய்தால், அரசு அதிகாரிகள், ஒழுங்காக தங்கள் கடமைகளை ஆற்றுவார்களே தவிர, அவர்களுக்கு வெஸ்ட்டட் இன்ட்டரஸ்ட் ஏற்படுவதற்கோ, ஊழல் புரிவதற்கோ சந்தர்ப்பம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்திலே மின்சார நிலைமைகள் மிகவும் மோச மாக இருக்கின்றன. மின்சாரம் மனிதனுக்கு இன்றியமையாத தாக ஆகிவிட்டது. அந்த மின்சாரத்தை பொருத்தவரை எந்த ஒரு திட்டமும் கவர்னர் உரையிலே அறிவிக்கப்படாதது மிகவும் வருந்தத்தக்க விஷயம் ஆகும். மனிதனுக்கு அடிப்படைத் தேவையான மின்சாரம் போன்ற அடிப்படை பிரச்னைகளில் இந்த தமிழக அரசு கவனம் செலுத்தவில்லை.

தலைவர்கள், உங்களுக்கும், எங்களுக்கும் வாக்களித்த பொது மக்களுடைய ஆசைகளையும், அபிலாஷைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டு விடைபெறு கிறேன்.

(பிற்பகல் 12-40)

1. அறிவிப்புகள்:

(ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவு களுக்கிணங்கப் பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

15—3—1935 (வெள்ளிக்கிழமை) ... ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி ஆளுநர் உரைக்கு நன்றி தெரி விக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்.

16—3—1955 (சனிக்கிழமை)

17—3—1985 (ஞாயிற்றுக்கிழமை)

விடுமுறை.

18—3—1985 (திங்கட்கிழமை)
19—3—1985 (செவ்வாய்க்கிழமை)

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி அரசினர் சட்ட முன்வடிவுகள் — ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.

20—3—1985 (புதன்கிழமை)

1. 1984-85 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி நிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல்.

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் — ஆய்வு செய்தலும், நிறை வேற்றலும்.

21—3—1985 (வியாழக்கிழமை)

அரசினர் சட்டமுன்வடிவுகள் — ஆய்வு செய்தலும், நிறை, வேற்றலும்.

மற்ற அரசினர் அலுவல்கள்.

22—3—1985 (வெள்ளிக்கிழமை)

தெலுங்கு ஆண்டுப்பிறப்பு — விடுமுறை.

23—3—1985 (சனிக்கிழமை)

பேரவைக் கூட்டம் இல்லை.

24—3—1985 (ஞாயிற்றுக்கிழமை)

விடுமுறை.

25—3—1985 (திங்கட்கிழமை)

1. 1984-85-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

2. 1934-85-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு — அறிமுகம் செய்தல்.





26—3—1985 (செவ்வாய்க்கிழமை)

1. 1985-86-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் பேரவைக்கு அளித்தல்.

2. 1985-86-ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் — பேரவைக்கு அளித்தல்.

27—3—1985 (புதன்கிழமை)

1. 1984-85-ஆம் ஆண்டிற்கான இறுதித் (துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.

2. 1985-86-ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி வாக்கெடுப்பு.

3. 1985-86-ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல்.

4. இதர அரச அலுவல்கள்.

28—3—1985 (வியாழக்கிழமை)

1. 1985-86-ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு — ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

2. 1985-86-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்.

29—3—1985 (வெள்ளிக்கிழமை)

1985-86-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்.

30—3—1985 (சனிக்கிழமை)

| | |
|---|---|
| 31—3—1985 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 1—4—1985 (திங்கட்கிழமை) | |
| 2—4—1985 (செவ்வாய்க்கிழமை) | 1985-86-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். |
| 3—4—1985 (புதன்கிழமை) | மகாவீர் பிறந்த தினம் — விடுமுறை. |
| 4—4—1985 (வியாழக்கிழமை) | 1985-86-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் — பதிலுரை. |
| | மற்ற நாட்களுக்கான பேரவை நிகழ்ச்சிகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். |

## 4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

**திரு. வே. கு. சின்னசாமி:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநருடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை மாண்புமிகு செம்மலை அவர்கள் முன்மொழிந்து, இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிந்து, என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

முதற்கண் நான் இரண்டாவது முறையாக சட்ட மன்றத்திலே வருவதற்கு எனக்கு வாய்ப்பைத் தந்த தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கிட்டத்தட்ட 17,000 வாக்குகள் வித்தியாசத்தில் புவானிசாகர் தொகுதியில் வெற்றி பெறச் செய்த வாக்காளர் பெருங்குடி மக்களுக்கும், குறிப்பாக தாய்மார்களுக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இங்கே எதிர்க் கட்சியைச் சார்ந்த நண்பர்கள், குறிப்பாக எப்போதும், அவருக்கே உரிய பாணியிலே பேசுகின்ற ரகுமான்கான் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கொள்கை இல்லை, கோட்பாடு இல்லை, அனுதாபத்திலே வந்த அலைகள் என்றெல்லாம் இங்கே அவருக்கே உரிய பாணியிலே எடுத்துரைத்தார்கள்.

அந்த 14 கட்சிகளைச் சார்ந்த கூட்டணியுடன் போட்டியிட்ட ரகுமான்கான் அவர்களுக்கு நான் பணிவோடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்வது, நாங்களும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சித் துணையோடு தான் தமிழகத்திலே போட்டியிட்டோம். தேர்தல் நேரத்திலே நாங்கள் பொதுமக்கள் மத்தியிலே அறிவித்தது, இந்தக் கூட்டணி வெற்றி பெற்றால், மீண்டும் தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் தான் என்பதை ஆணித்தரமாக மக்களிடத்திலே கூறினோம். ஆனால் 14 கட்சிக் கூட்டணியோடு வெற்றி பெற்றால், தமிழகத்தின் முதல்வராக யார் வருவோம் என்று சொல்லுகின்ற சக்தியைக் கூட நீங்கள் இழந்திருந்தீர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

காரணம், ஏற்கனவே டாக்டர் கலைஞர் கருணாநிதி தான் முதலமைச்சராக வருவார்கள் என்று சொன்னதால் இந்த நாட்டு மக்கள் அவர்களை விட்டுவிட்டார்கள் என்ற அச்சத்தால் தான். நீங்கள் வெற்றி பெற்றால், யார் முதலமைச்சராக வருவார்கள் என்று சொல்லுகின்ற சக்தியைக் கூட இழந்து, அச்சத்தோடு தேர்தல் களத்திலே சந்தித்தீர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள். புரட்சித் தலைவர் அவர்களோடு படத்தோடு திரு. கருணாநிதி அவர்களுடைய படத்தை இணைத்து வைத்து தமிழகம் முழுவதும் ஒட்டினார்கள். தமிழக முதல்வர் அவர்களுடைய படத்தை கருணாநிதி படத்தோடு இணைத்துப் போடுகிற முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் யார் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்தாக வேண்டும். நாடு முழுவதும் தேர்தல் நேரத்திலே அப்படி ஒட்டப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. இந்த இரண்டு கட்சிகளையும் அமெரிக்காவில் இருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் இணைத்துவிட்டார்கள் என்று மக்களிடம் சொல்லி

வாக்கு கேட்டார்கள். பொது மக்கள் அதை ஏற்றுக் கொண்டார்களா? புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்— சொல்வதற்குக் கூட வாய் கூசுகிறது. உடலில் இருந்து உயிர் பிரிந்து விட்டது. ஐஸ் கட்டியிலே வைத்து இருக்கிறார்கள். தேர்தல் முடிந்ததற்குப் பின்னாலே அதை அறிவிப்பார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். ஆகவே, தமிழக மக்களை ஏமாற்றி தான் வாக்குகளைப் பெற வேண்டும் என்று எண்ணினார்களே தவிர, கொள்கைகளைச் சொல்லி அவர்கள் வோட்டு கேட்கவில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அவர்கள் பொதுக் கூட்டங்களிலே அப்படிப் பேசிய நேரத்திலே பொது மக்கள் சொன்னார்கள், பாரத பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் கொடும்பாவிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நேரத்திலே பத்திரிகையிலே படங்களைப் போட்டுக் காட்டினார்கள். வீடியோக்களிலே அதைக் காட்டினார்கள். டி.வி. மூலமாகக் காட்டினார்கள். ஆகவே, கிராம மக்கள் கேட்டார்கள். புரட்சித் தலைவருக்கு அப்படிப்பட்ட ஒரு ஆபத்து வந்திருக்குமேயானால் ஏன் பத்திரிகையில் வரவில்லை என்று கேட்டார்கள். புரட்சித் தலைவர் அவர்களுக்கு அப்படிப்பட்ட ஆபத்து வந்திருக்குமானால் தமிழ் நாட்டிலே தேர்தல் நடைபெற்றிருக்குமா? மக்களிடம் நாங்கள் வோட்டு கேட்போமா? சட்ட மன்ற உறுப்பினராக பாராளுமன்ற உப்பினராக நாங்கள் வர நினைப்போமா என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது நீங்கள் என்று சொன்னால் அது இந்த 'சேரைத்' தான் குறிக்கும். ஆகவே, அப்படிச் சொல்லாமல் கட்சியின் பெயரை வேண்டுமானால் குறிப்பிடலாம்.

திரு. வே. கு. சின்னசாமி: மாற்றுக் கட்சி உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கும் அவர்களுடைய கூட்டணியைச் சேர்ந்த திரு. சுப்பராயன் அவர்களுக்கும் தெரிவிக்க [illegible] [illegible] ஆசைப்படுகிறேன். [illegible] சரியாக இருக்குமானால் [illegible] நேரத்திலே [illegible] மாண்புமிகு உறுப்பினர் [illegible] அவர்கள் அழகாகச் சொன்னார்கள்.





புரட்சித் தலைவர் அவர்கள் படத்தைப் போட்டதனால் ஏமாந்தவர்கள் ஏதாவது ஒரு எண்ணத்திலே வாக்கு போட்டு இருப்பார்கள். அதன் காரணமாக 4,000, 5,000 வாக்குகள் உங்களுக்கு வந்து இருக்கும் என்று சொன்னார்கள். அவர் பேசியபோது எதிர்க் கட்சியினர் ஆத்திரப்பட்டார்கள், ஏன்? அப்போதே தெரிகிறது அந்த வாக்குகளும் உங்களுக்கு விழுந்து இருக்கிறது என்று எண்ணுகிறீர்கள். திரு. ரகுமான்கான் சொல்லுவது எப்படி இருக்கிறது, என்றால், மறுதேர்தலை சந்திக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? புரட்சித் தலைவர் அவர்கள் படத்தோடு கருணாநிதி படத்தை இணைத்துத் தமிழ் கம் முழுவதும் ஒட்டியிருக்கிறீர்கள். அப்படி செய்யும்படி யார் சொன்னது, உங்களுடைய தலைவர்கள் சொன்னார்களா? அல்லது உங்கள் கூட்டணி கட்சிகள் சேர்ந்து முடிவு எடுத்தீர்களா? நீங்கள் அடுத்து பேசுகின்ற நேரத்திலே இதை இந்த மன்றத்திலே விளக்கியாக வேண்டும். தமிழக மக்கள் ஆவலோடு இதை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இங்கே கால சக்கரங்கள் சுழன்றுக் கொண்டு இருக்கின்ற காரணத்தால் அ.இ.அ.தி.மு. கழக அரசை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை 3-வது முறையாக ஆட்சிக் கட்டிலிலே மக்கள் அமர்த்தியிருக்கிறார்கள். திரு. சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது அனுதாப அலையால் வெற்றிப் பெற்றீர்கள் என்று சொன்னார்கள். 1977, 1978, 1979-ல் இந்த மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் புரட்சித் தலைவர் அவர்களை, ஏசியவர்களை, திட்டியவர்களை நாம் பார்த்தோம். இந்த அரசு மக்களுக்கு என்ன செய்தது என்று கேவலமாக பேசியவர்களை எல்லாம் நாம் பார்த்தோம். இன்றைக்கு அவர்களுடைய முகத்தை இந்த மன்றத்திலே பார்க்க முடியவில்லை. ஆகவே புரட்சித் தலைவர் அவர்களை யார் ஏசினாலும் அவர்களை மக்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் 10 பேர்களாக மூன்று வந்தீர்கள். இப்போது நீங்கள் எப்படி வெற்றிப் பெற்றீர்கள் என்பது உங்களுக்கே நன்கு தெரியும். இரண்டு பேர்கள் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வந்து இருக்கிறீர்கள். ஆகவே நீங்களும் புரட்சித் தலைவர் அவர்களை ஏசாமல், பேசாமல் இருந்து உங்களுடைய தொகுதிப் பணிகளை செய்வதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவர்

[திரு. வே. கு. சின்னசாமி] [1985 மார்ச் 14

(பிற்பகல் 12-50)

அவர்கள், எடுக்கின்ற திட்டங்கள், அவர்கள் வகுக்கின்ற திட்டங்கள் அத்தனையும், ஏழை, எளிய மக்களுக்கு, உழைப்பவர்களுக்கு, சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்காக இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் புரட்சித் தலைவர் அவர்கள், அந்தத் திட்டத்தை நீங்கள் கேவலமாகப் பேசினீர்கள். எவ்வளவோ கேவலமாக பத்திரிகையில் எழுதினீர்கள். ஆனால் தேர்தல் காலத்தில் போஸ்டர்கள் அடித்து ஒட்டினீர்கள். உங்கள் கொள்கைகளில் ஒன்றாக மக்களிடம் பரப்பினீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முழுமையான சத்துணவுத் திட்டம் கொண்டு வருவோம் என்று சொன்னீர்கள். அது என்ன திட்டம், அப்படிப்பட்ட ஒரு சத்துணவுத் திட்டம் எங்கே இருக்கிறது என்று மக்களுக்குத் தெரியவில்லை. ஆகவே புரட்சித் தலைவர் அவர்கள் தந்த சத்துணவுத் திட்டத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்பதைத் தவிர வேறில்லை.

ஏழை எளிய குழந்தைகளுக்கு 1 முதல் 8—ஆம் வகுப்பு வரை சீருடை வழங்கும் திட்டத்தை ஆளுநர் உரையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அது யாருக்கு, ஏழை எளிய மக்களின் குழந்தைகளுக்கு, கூலி வேலை செய்கின்ற சாதாரண மக்களுக்கு. கூலி வேலை செய்கின்ற ஆண்களும், பெண்களும் காலையில் புறப்பட்டு 10, 15 மைல் தூரம் வேலைக்குச் சென்று அவர்கள் மாலையில் தான் வீட்டுக்கு வருவார்கள். அவர்கள் வீட்டு குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதால் அவர்கள் உடை பெறுகின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர், அதற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்தித் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்...

குறிப்பாக நெசவாளர்கள் அதிகமாக இருப்பது என்னுடைய தொகுதி. கைத்தறி வளர்ச்சிக்காக இன்றையதினம் தொழிற் சாலையை இரண்டாக பிரித்து கைத்தறிக்கு என்று ஒரு துறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதோடு மட்டும் அல்லாமல் கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதி என்ற பொறுப்பை



1985 மார்ச் 14] [திரு. வே. கு. சின்னசாமி]

3 ஆண்டு கால அளவில் முடித்துவிட வேண்டும் என்ற உறுதிமொழியையும் தந்து இருக்கிறார்கள். இது உழைத்து வாழ்கின்ற அந்த நெசவாளர் குடும்பங்களை காப்பாற்றுகின்ற பொறுப்பாக அமையும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விவசாய பெருங்குடி மக்கள் நிறைந்த தமிழ்நாட்டில் குறிப்பாக நானும் விவசாய குடும்பத்தில் பிறந்தவன். இலவச மின்சார திட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் கலைஞர் காலத்தில் என்ன செய்தார்கள்? அவர் ஆட்சியில் ஒரு பைசா குறைக்க வேண்டும் என்று விவசாயிகள் போராட்டம் நடத்தியபோது அவர்களை சுட்டுத் தள்ளிய காலம் உண்டு. பெருமாநல்லூரில் விவசாயிகளுக்கு சிலை வைத்து இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து கலைஞர் அவர்கள் கேட்டார்கள் விவசாயி படத்தில் நடித்த எம்.ஜி.ஆர். விவசாயிகளுக்கு என்ன செய்தார் என்று ஒரு மேடையில் கேட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் சிறிய விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை தந்து இருக்கிறார்கள். பெரிய விவசாயிகளுக்கு ஒரு எச்.பி. மோட்டார் ஓடினால் ரூ 75 ஒரு வருடத்திற்கு கட்டினால் போதும். வருடம் முழுவதும் ஓட்டிக்கொள்ளலாம். இது போன்று விவசாயிகளுக்கு நன்பயனாக இருந்து நல்ல திட்டங்களை புரட்சித் தலைவர் அவர்கள் செய்திருக்கிறார்கள். மேலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சிறு விவசாயிகள், கூறு விவசாயிகள், விவசாயி தொழிலாளர்கள், கூலி தொழிலாளர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கு காப்பு நிதி 5,000-லிருந்து 10 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள். இதை எல்லாம் உணர்ந்து கிராமப்புறம் நகரப்புறமாக மாற வேண்டும், கிராமத்தில் இருப்பவர்கள் சலுகைகள் பெற வேண்டும் என்ற அடிப்படையில் இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இன்றையதினம் அறிவித்து இருக்கிறார்கள்.

பவானி சாகர் தொகுதியைப் பொறுத்தவரையில் நான் சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். பெரியார் மாவட்டத்திற்கு அருகை தந்த நேரத்தில் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெரியார் மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டமாக

அறிவிக்கப்படும் என்ற உத்திரவாதத்தை அங்கே ஒருமுறை சொல்லியிருக்கிறார்கள். அதிலும் முதல் முறையாக ஒரு தாலுக்காவை அறிவிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே பெரியார் மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் தாலுக்காவை பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

கீழ்பவானி அணையின் தண்ணீரின் அளவு குறைந்து கொண்டே இருக்கிறது. அந்தத் தண்ணீரைக் கொண்டு பயிர்களைப் பாதுகாப்பதா அல்லது அங்கேயுள்ள மீன்களைப் பாதுகாப்பதா என்ற பிரச்னை வந்திருக்கின்றது. ஆகவே, மீன் வளத் துறையின் மூலம் அதிகமான ஆட்களை வைத்து, இருக்கின்ற மீன்களைக் குறுகிய காலத்தில் பிடிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், தண்ணீரின் அளவு குறைந்து கொண்டிருக்கிறது.

கீழ்பவானி வாய்க்காலிலே, வாய்க்காலை வெட்டுகின்ற நேரத்தில் பாலங்கள் கட்டப்பட்டன. ஆனால் இன்றைக்கு கிராமங்கள் வளர்ச்சியடைந்து இருப்பதால் பொது மக்களின் தேவை அதிகரித்திருக்கின்றது. எனவே, இடையிடையே பாலங்களைக் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை பொது மக்களிடத்தில் இருந்து அரசுக்கு வந்திருக்கின்றது. ஆகவே, அதை ஆராய்ந்து பார்த்து, தேவையான இடங்களில், போக்குவரத்து அதிகமாக உள்ள இடங்களில் மக்கள் போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற இடங்களில் பாலங்களை எல்.பி. வாய்க்காலின் குறுக்கே கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பவானிசாகரிலே பொதுப்பணித் துறையைச் சார்ந்த வீடுகள் குறைவாக இருக்கின்றன. அங்கே இப்பொழுது அத்தனையோ தொழில்கள் பெருகி, நிறைய அரசாங்க அதிகாரிகள் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். [illegible] பள்ளி இருக்கிறது. டிரெயினிங் சென்டர் இருக்கிறது, அவற்றில் இன்னும் விவசாயத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் அங்கே





இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்குவதற்கேற்ற வகையில் வீட்டு வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, வீட்டு வசதித் துறையின் மூலம் பவானிசாகர் நகரத்தில் வீடுகளைக் கட்டி, அங்கேயுள்ள அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் தர வேண்டுமென்பதை பணிவன்போடு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே ஒரு புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் அந்தக் கல்வித் திட்டத்தைப் பாராட்டுகின்ற அளவில் அந்தத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு இன்றைக்கு அதிகமாக நிதி ஒதுக்கம் செய்து, பள்ளிக் கட்டடங்களுக்கான வசதிகளைப் பெருக்குவது, கல்வி பயிலும் மாணவர்களுக்கான கருவிகளை வாங்குவது போன்றவைகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குகின்ற முறையில் கொஞ்சம் மாற்றம் செய்ய வேண்டுமென்றும் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன். காரணம், இன்றைக்கு இரவிலும், பகலிலும் என்று மாற்றி மாற்றி மின்சாரத்தை விநியோகம் செய்கிறார்கள். ஆனால் இரவு நேரங்களில் விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சுவதில் எவ்வளவு சிக்கல்கள் உள்ளன என்பதை நாங்களெல்லாம் நேரடியாகக் கண்டவர்கள். ஆகவே, பகல் நேரத்தில் விவசாயிகளின் பாசனத்திற்கு மின்சாரம் தருகின்ற முறையை அமல் நடத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மின்சாரம் வழங்குவதில் சீனியாரிட்டி இல்லாமல் நேர் கனெக்ஷன் கொடுக்கிறார்கள். இன்னும் விண்ணப்பங்கள் நிறைய குவிந்த வண்ணம் இருக்கின்றன. எனவே, விவசாயிகள் தாங்களாகவே முன்வந்து, மின்சார சப்ளைக்கு ஆகும் செலவுகள் அத்தனையையும் அவர்களே ஏற்றுக்கொள்கிறோம் என்று அறிவித்தால் அவர்களைப் பொறுத்தவரையில் சீனியாரிட்டியைப் பார்க்காமல் மின்சார சப்ளை வழங்குவதற்கு அரசாங்கம் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்பதைத் தெரிவிக்க கடமைப்

பட்டிருக்கின்றேன். காரணம் நிறைய விண்ணப்பங்கள் குவிந்திருக்கின்றன. ஆகவே, விவசாயிகளாகவே முன்வந்து, மின்னிணைப்பு கிடைப்பதற்கு, ஐந்து கம்பங்கள் அல்ல, பத்து கம்பங்கள் அல்ல, ஐயாயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய் ஆகின்றது என்றால் அந்தச் செலவுகள் அனைத்தையும் விவசாயிகளே ஏற்றுக்கொள்கிறோம் என்று முன்வந்தால், அவர்களுக்கு மின் சப்ளையை சீனியாரிட்டி பார்க்காமல் கொடுக்க வேண்டுமென்று கேட்டால் அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புஞ்சைப்புளியம்பட்டி நகருக்கு பவானிசாகரிலிருந்து கொண்டு வரும் குடிநீரைப் புஞ்சைப்புளியம்பட்டி நகருக்கும் விநியோகிக்கின்ற முறையில் அந்தத் திட்டம் நடந்து வருகிறது. இது முதலிலே ஆரம்பிக்கப்பட்ட திட்டம். ஆனால் இப்பொழுது அந்தப் பகுதியிலே வழியிலே உள்ள கிராமங்களிலேயும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு மிகவும் அதிகமாக இருப்பதால், அடுத்து ஒரு பைப் லயனை அமைத்து, அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கும் குடிதண்ணீர் தரும் வாய்ப்பைத் தெரிவித்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. கு. சுப்பராயன்:** ஒரு கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சபைக்குத் தவறான தகவலைத் தருவதால் அதுபற்றி விளக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. தேர்தல் நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் படத்தைப் போட்டு வெற்றி பெற்றவர்களின் பட்டியலிலே என்னையும் சேர்த்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1.00)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது தங்களுடைய பெயரைக் குறிப்பிட்டுப் பேசவில்லை. எனவே, தங்களைச் சொன்னதாக கற்பனை செய்துகொண்டு பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.





**திரு. ஆர். கோவிந்தசாமி:** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், நாங்கள் தேர்தலிலே வெற்றிபெற ஒத்துழைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும், காங்கிரஸ் தோழர்களுக்கும் மற்றும் எங்களுடைய முற்போக்குக் கூட்டணியிலிருந்த நண்பர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைக் கூறிக்கொண்டு, இங்கே நம்மை எல்லாம் இந்த மாண்புமிகு பேரவையிலே உட்கார வைத்த தியாகச் செம்மல்களுக்கெல்லாம் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்த நாட்டிற்கு விடுதலை பெற்றுக்கொடுத்த காந்தியார் அவர்களை நினைவுகூர்ந்து குண்டூசி கூட செய்ய முடியாத இந்தியத் திருநாட்டை, உண்ண உணவு இல்லாமல் அன்னிய நாட்டை எதிர்பார்த்திருந்த இந்தியத் திருநாட்டை பல திட்டங்களைத் தீட்டி பிற நாடுகளுக்கெல்லாம் உணவை நாம் அனுப்பக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொன்னால், அந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறோம் என்று சொன்னால் அதற்காக நேரு அவர்கள் அயராது பாடுபட்டதன் காரணத்தால்தான்.

அதுமட்டுமல்ல. இந்த இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற்று 38 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. இந்த 38 ஆண்டுகளிலே 36 ஆண்டுகள் காங்கிரஸ் கட்சி இங்கே ஆட்சிபுரிந்திருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. முதலிலே மதிப்பிற்குரிய நேரு அவர்களும், அதற்கடுத்தபடியாக அன்னை இந்திரா காந்தியும், அதையடுத்து தற்போது திரு. ராஜீவ் காந்தி அவர்களும் ஆட்சி புரிந்து வருகிறார்கள். இடையிலே இரண்டாண்டுகள் மட்டும் ஜனதா கட்சியின் ஆட்சி மத்தியிலே நடைபெற்றது. அந்தக் காலத்திலே அன்னை இந்திரா அவர்கள் சிக்மகளூர் தொகுதியில் ஜெயித்து வந்தபோது என்னென்ன தொல்லைகள் அவர்களுக்குக் கொடுத்தார்கள், சிறையிலே அடைத்தார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரியும். அந்த ஆட்சி இரண்டாண்டுகள்தான் நடைபெற்றது.

இங்கே அவைத்தலைவர் [illegible] அன்னை இந்திரா அனுதாப [illegible] தலைவர் அவர்களுடைய [illegible] மதிப்பிற்குரிய [illegible] சொல்கிறார்கள். ஆனால் [illegible] அலை [illegible] அலை [illegible] கன்னியாகுமரியிலே [illegible]

இருந்து காஷ்மீர் வரையில் மக்கள் எப்படி வாக்களித்தார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்குத்தான் அலை வீசிவிட்டதா? அன்றைக்கு எந்த அலை வீசியது? அப்போது வேறு யாருமே எந்த அரசையும் அமைக்கவில்லையா? ஆகவே எந்த அலையும் புதிதாக வீசவில்லை: ஏற்கெனவே வீசிய அலைதான் இன்றைக்கும் வீசுகின்றது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய இந்த நாட்டிலே இராமபிரான் பிறந்தார்கள் கடவுள் அவதாரம் என்று சொன்னார்கள். ஆனால் நாம் இங்கே இப்போது இராமச்சந்திரபிரானைக் காண்கிறோம். இப்போது தமிழகத்திலே ராமச்சந்திரன் என்ற கலியுகக் கடவுளை உருவாக்கி இங்கே மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய கடவுள் அவதாரத்தில் அனுப்பி வைத்திருக்கக்கூடிய ராமச்சந்திரனைக் காண்கிறோம். அவர்கள் ஒருமுறை படப்பிடிப்பிலே கலந்து கொண்டிருந்தபோது காலிலே அடிபட்டு கஷ்டப்பட்டார்கள். அதன் பிறகு ஒருவரால் சுடப்பட்டு பாதிக்கப்பட்டார்கள். அடுத்து ஒரு கொடுமையான காலன் வந்து அவர்களைக் கூப்பிடுகின்ற நேரத்தில் அன்னை இந்திரா அவர்கள் ஓடோடி வந்தார்கள். இந்த இந்தியத் திருநாட்டிலே தன் மகன் இறந்து கிடக்கின்ற நேரத்திலே காட்டிய வேகத்தை விட அதி வேகமாக ஓடோடி வந்து பார்த்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பார்க்க டெல்லியிலே இருந்து ஓடோடி வந்தார்கள். அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவருக்கு என்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்யச் சொல்லி, அதற்கு ஆணை பிறப்பித்து, முதல்வர் பொன்மனச் செம்மல் அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டுமென்றால் தனி விமானத்தில் அனுப்புங்கள் என்று உத்தரவு போட்டார்கள். அப்படிப்பட்ட அன்னையார் அவர்கள் பாவிகளால் சுடப்பட்டார். மதிப்பிற்குரிய பொன்மனச் செம்மலுக்குப் பதிலாகத் தன் உயிரைவும் கொடுத்து விட்டார் இந்த நாட்டிலே. அப்படிப்பட்டவர்களை இந்த நேரத்திலே நாம் நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நேரு அவர்கள் அழகாகச் சொன்னார்கள். நேரு அவர்கள் சென்னை கடற்கரையிலே பேசும்போது ஒரு சிட்டைக் கொடுக்கிறார்கள். அது என்ன என்றால், இந்த நாட்டிலே கடவுளைப் பற்றி உங்கள் கருத்து





என்ன என்பது? அப்பொழுது நேரு அவர்கள் சொல்கிறார்கள், இந்த நாட்டிலே எனக்கு இருக்கும் எண்ணம், இந்த நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்கு ஒருவேளை சாப்பாடுகூட இல்லாமல் இருக்கிற, அவர்களைப் பற்றித்தான் நான் எண்ணிக் கொண்டிருக்கிறேனே தவிர, கடவுளைப் பற்றி சிந்திப்பதற்கு எனக்கு நேரம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வழி வந்தவர்கள்தான் இங்கே நாங்கள் அமர்ந்திருக்கிறோம் என்று உங்கள் முன்னாலே கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அன்னை இந்திரா காந்தி அவர்கள் ஒவ்வொரு நிமிஷமும் மாண்புமிகு பொன்மனச் செம்மல் எப்படி இருக்கிறார்கள் என்று தொலைபேசியிலே தெரிந்து கொண்டும் கேட்டுக் கொண்டே யிருந்தார்கள். அப்படிப்பட்ட நல்லவரை, இராமச்சந்திரபிரானை, இந்தத் தமிழக மக்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்பதிலே எந்தவித ஐயப்பாடும இல்லை. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், பொன்மனச் செம்மல் அவர்கள் எளிமையிலே பிறந்து, வறுமையிலே வாடி, படிப்படியாக அவருடைய பாதையிலே நின்று உயர்வு பெற்று, மக்களுடைய குறைகளை நன்கு அறிந்தவர் ஆனார் என்பதை இந்த நேரத்திலே ஞாபகப்படுத்துவதற்காகத் தான் சொல்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பல காரியங்களைச் செய்ய வேண்டு மென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள், 1954-லே என்னுடைய குடியாத்தம் தொகுதியில் நின்று வெற்றி பெற்றுத்தான் இங்கே முதலமைச் சராக அமர்ந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தக் காலத்திலே ஆரம்பிக்கப் பட்ட மோர்தனா நீர்த்தேக்கத் திட்டம் சிறிய திட்டமாக இருந்ததனால் பெரிய, பெரிய அணைகளை, நீர்த் தேக்கங்களைக் கட்ட வேண்டும், பிறகு சிறியவற்றை எடுத்துக் கொள்ளலாம் என்று நிறுத்தப்பட்டு, இன்றைய வரையிலும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஆனால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், 4 தொகுதிகளுக்குச் சாதகமாக அது அமையும். ஒன்று, பேரணாம்பட்டு, இரண்டு, அணைக்கட்டு, மூன்று, காட்பாடி, நான்கு, குடியாத்தம், ஆகிய இந்த நான்கு

தொகுதிகளுக்கும் அதனால் சாதகம் கிடைக்கும். அடியிலே ஊற்றெடுத்து, பாசன வசதி பெருகி, பல்லாயிரக்கணக்கான நிலங்கள் பயன்படக்கூடிய வாய்ப்பிருக்கும். அந்த அணையை கட்ட ரூ. 3 கோடி என்று பேட்டியிலே போட்டார்கள். அதன் தற்போதைய நிலை என்ன என்பது புரியவில்லை. தயவுசெய்து இந்தப் பேரவை இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று பாலாற்றுப் பாலம் பேரணாம்பட்டியிலிருந்து 3, 4 தொகுதிகள் வழியே செல்கிறது. பாலாற்றிலே தண்ணீர் வரும்போது பஸ்கள் போகமுடியவில்லை, மக்கள் நடமாடுவதற்குத் தொல்லையாக இருக்கிறது. ஆகவே, மேம்பாலம் ஒன்று கட்டித் தரவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள நகரத்திலே 40, 50 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சின்ன பஸ் ஸ்டாண்ட் இருந்தது. அதை விரிவுபடுத்துவதற்காக ரூ. 50 இலட்சம் பணம் ஒதுக்கினார்கள். அங்கே ஒரு இடத் தகராறு காரணமாக, எந்த இடத்தில் வைப்பது என்ற இடத் தகராறு காரணமாக, அத்திட்டம் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே வருகிறது. அதையும் நிறைவேற்றித் தர வேண்டும். அங்கே நகரசபையை சேர்ந்த 6 ஏக்கர் குளக்கரை இருக்கிறது. அந்தக் குளக்கரையிலே அந்த பஸ் ஸ்டான்டை நிறுவலாம். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, என்னுடைய நகரத்திலே தனியாருடைய பள்ளி ஒன்று திருவள்ளுவர் பெயராலே இருக்கிறது. அங்கே பிளஸ் டு இருக்கிறது. அங்கே 5-வது படித்து விட்டு 6-வது வகுப்புக்குச் செல்லும்போது கம்பல்சரியாக ரூ. 200 கொடுத்தால் தான் சேர்ப்பேன் என்று அந்தத் தனியார் பள்ளி நிர்வாகத்தினர் கட்டாயப்படுத்தி வாங்குகிறார்கள். நாங்கள் முன்பே இந்தப்

(பிற்பகல் 1.10).

பள்ளிக்கு பிளஸ் 2 கொடுக்கக் கூடாது, அரசாங்கப் பள்ளிக்கு தான் கொடுக்க வேண்டுமென்று சர்வகட்சியினரும் கூட்டாக வந்த பொன்மனச் செம்மல் அவர்களிடத்திலும், கல்வியமைச்சர்





அவர்களிடத்திலும் சொன்னோம். ஆனால் என்ன காரணத்தினாலோ அவர்களுக்கு கொடுத்து விட்டார்கள். திருவள்ளுவர் கல்வி நிறுவனம் கல்வி அதிகாரிகளை சரிக்கட்டி தவறான பாதையிலே போகிறார்கள். அவர்கள் மீது தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது). தலைவர் அவர்கள் இன்னும் சிறிது நேரம் அனுமதிக்க வேண்டும். எங்களுடைய பகுதியிலே சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. பஞ்சாயத்து தேர்தல்கள், நகர சபை தேர்தல்களை உடனடியாக நடத்தாவிட்டால் மக்களுக்கு பதில் சொல்லவே முடியாத சூழ்நிலை இருக்கிறது. எங்களுடைய பகுதியில் தண்ணீர் நிறைய இருக்கிறது. ஆனால் அந்தத் தண்ணீரை எடுப்பதற்கு வேண்டிய மின்சாரம் இல்லை. வாரத்தில் இரண்டு நாட்களுக்குக் கூட அங்கே இருக்கிற மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே ஜெனரேட்டர் ஒன்றை வாங்குவதற்கு தயவுசெய்து அலாட்மெண்ட் வழங்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கிற இரு சாராருக்கு அதாவது ஒன்றிலிருந்து ஐந்து வரையில் இருக்கிற வகுப்புகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும், இயணைப்புத் [illegible] துறையில் இருக்கிற கீழ்மட்ட சிப்பந்திகளுக்கும் காவல் துறையினருக்கும் வழங்கப்படுவதைப் போல குறைந்த விலையில் [illegible] உணவுப் பண்டங்களை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய நகரத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பலமுறை நாங்கள் தீர்மானங்களைப் போட்டு அனுப்பினோம். பலமுறை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொன்னோம். [illegible] எடுத்துக் கொள்ளவில்லை. [illegible] எடுத்துக்கொள்கிற [illegible] அவர்களும் [illegible] ஆபீசர் அவர்களும் தெரிவித்தார்கள். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் எங்களுடைய நகரசபை [illegible] இரண்டு மாதங்கள் ஒரு முறையாவது [illegible] சம்பளம் கொடுக்கவில்லையென்றால் [illegible] அந்த ஆசிரியர்கள் எப்படி பணியாற்றுவார்கள் என்பதை

எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே அந்த உயர்நிலைப் பள்ளியை அரசாங்கம் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மரியாதைக்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, கொஞ்சு தமிழ் பேசி வங்கக் கடலோரம் மீளாத் துயிலில் ஆழ்ந்திருக்கிற எனது அண்ணனுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து, இந்த மாமன்றத்திலே நான் பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்து, நல்லாசியையும் வழங்கி என்னை அறிமுகப்படுத்திய என்னுடைய தங்கத் தலைவன், தானைத்தலைவன் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் பாதம்தொட்டு வணங்கி, நான் சட்டமன்ற உறுப்பினராக எனக்கு வாக்களித்த என்னுடைய தண்டாரம்பட்டு தொகுதி வாக்காள பெருமக்களுக்கும், எனக்காக உழைத்த கழக மன்ற மறவர்களுக்கும், குறிப்பாக ஆதி திராவிட இன மக்களுக்கும், தாய்மார்களுக்கும் என் அன்பார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய செம்மலை அவர்கள் முன்மொழிந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகிற வாய்ப்பினை நல்கிய தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்து என் உரையினைத் துவக்குகிறேன்.

முதல்நாள் உரையில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த நண்பர் இந்த ஆட்சி அனுதாப அலையினால் வந்தது என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். அனுதாபத்தைச் சொல்லி அலைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வாக்குகளை சேகரிக்கவில்லை. புரட்சித் தலைவர் அவர்கள் 12 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிறார், அவர் நடக்கிறார், உணவு உண்கிறார், மீண்டும் தமிழகத்திற்கு வரவிருக்கிறார், சற்று ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார், மீண்டும் இங்கே வருவார், முதல்வர் ஆவார் என்றுதான் சொல்லி ஓட்டுக்களை கேட்டோமே தவிர, அவர் ஊன் பெட்டியிலே இருக்கிறார், மீண்டும் தமிழகத்திற்கு வரவே மாட்டார் என்று நாங்கள்





சொல்லவில்லை. ஆனால் நீங்கள் தமிழகத்து மக்கள் மத்தியில் அனுதாபத்தைப் பெறுவதற்காக நாங்கள் செருப்பாக இருப்போம் என்று சொன்னீர்கள். நாங்கள் நாயாக இருப்போம் என்று சொன்னீர்கள். நீங்கள் வழிநடைப் பாதையில் சந்தித்ததை எல்லாம் சொன்னீர்கள். அப்படிச் சொல்லி மக்களுடைய அனுதாபத்தைத் திரட்டுவதற்கு முயற்சி செய்தீர்களே ஒழிய நாங்கள் அனுதாபத்தைப் பெற முயற்சி செய்யவில்லை. ஆனால், எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. வெங்காயம் தின்றவன் பக்கத்திலே போய் நின்றால் அவனுக்கு வெங்காய வாசனை வரும். பெருங்காயம் தின்றவன் பக்கத்திலே போய் நின்றால் பெருங்காய வாசனை வரும். சரக்கு போட்டிருக்கிறவர் பக்கத்திலே நின்றால் சரக்கு வாசனைதான் வரும். அதைப்போல உங்களுக்கு இருந்த அனுதாப எண்ணத்தை மனதிலே வைத்துக் கொண்டு, இங்கே அனுதாபத்திலே வந்தீர்கள். அனுதாபத்திலே வந்தீர்கள் என்று உங்கள் உள்ளத்திலே இருப்பதை வெளியிலே சொல்கிறீர்களே தவிர எங்களுக்கு அனுதாயம் இல்லை. நாங்கள் மக்கள் மத்தியிலே எங்களுடைய கொள்கையைச் சொல்லித்தான் வந்தோம்.

இன்னும் ஒன்றை இங்கே சொன்னார்கள்; மாற்றுக் கட்சித் தோழர்கள். இந்த ஆட்சி சினிமாவிலே இடைவேளை தோன்றுவதைப் போல இருக்கிறது என்று சொன்னார்கள். சினிமா என்பது ஏதோ புதிதாக இருப்பதைப்போல இட்டுக்கட்டிச் சொல்கிறவர்களைக் கேட்கிறேன். ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த திராவிட இனம், இந்த திராவிட இன ஆட்சி வருவதற்கு முழுமுதல் காரணமாக இருந்து உதவியது இந்த சினிமா உலகம் தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளை, அவர்களுடைய கருத்துக்களை சினிமாத் துறை மூலமாகத் தான் சொன்னார்கள். ஏன்? திராவிட இனம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் திராவிட இனத் தலைவர் பேரறிஞர் அண்ணா தந்த கொடி, புரட்சித் தலைவர் அவர்களால் தொடங்கப்பட்ட எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் மூலம், இந்த சினிமாத் துறை மூலம் காட்டப்பட்டு, தமிழகத்தில் இருக்கிற நாலைக்

கோடி மக்கள் மத்தியிலே அறிமுகப்படுத்தப்பட்டு, அப்படித்தான் இந்த இயக்கம் உருவாக சினிமாத் துறை காரணமாக இருந்தது என்பதை அந்தத் தோழர்கள் மறந்துவிடக்கூடாது.

அது மட்டுமல்ல. எந்த சினிமா உலகத்தை நீங்கள் இட்டுக் கட்டிக் காட்டினீர்களோ, அந்த சினிமா உலகத்தை நம்பித்தான் நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற தலைவர் ஒரு காலத்தில் வயிற்றுப் பிழைப்பை நடத்திக் கொண்டிருந்தார் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். சினிமா உலகம் என்பது திராவிட இன உணர்வுகளுக்கு, திராவிட இன வரலாற்றுக்கு ஒரு கருவியாக இருந்தது என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர்களுக்கு இதெல்லாம் தெரியாது. ஏனென்றால் அவர்கள் பெரியாரின் சுட்டு விரலைப் பிடித்துக் கொண்டு நடந்தேன் என்று சொல்வார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தந்தை பெரியார் வழியிலேதான் இந்த ஆட்சி வந்தது. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையைச் சொல்லித்தான் ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் எங்களுக்கு கொள்கை இல்லை என்று நீங்கள் சாதாரணமாகச் சொல்லிவிட்டீர்கள்.

தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையைச் சொல்வதற்காக தமிழகத்திலே அண்ணன் ஆர்.எம்.வி. அவர்கள் மூலமாக மாவட்டந்தோறும் பெரியார் விழா எடுத்தோம். பல கட்சித் தலைவர்களை அழைத்து, புலவர்களை அழைத்து, கீழ் மட்டத்தில் இருக்கிற மக்கள் எல்லாம் புரிந்துகொள்கிற அளவுக்கு ஆங்காங்கே விழா எடுத்தோம். தந்தை பெரியார் அவர்களுடைய சீர்திருத்தக் கொள்கைகளை சட்டமாக ஆக்கியவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள். தந்தை பெரியாருடைய புகழ் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக பெரியார் மாவட்டத்தை உருவாக்கியவர் புரட்சித் தலைவர் அவர்கள். இப்படி தந்தை பெரியாருடைய கொள்கைக்குச் சொந்தக்காரர் தான் நம்முடைய புரட்சித் தலைவர் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்த வகையிலே [illegible] இந்த [illegible] செய்யவேண்டிய



நல்லபல காரியங்களைச் செய்துகொண்டிருப்பவர்தான் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள்.

இன்றைக்கு திராவிட இனம் ஆட்சிக்கு வந்திருக்கிறது என்றால் அதற்கு முழுமுதற்காரணமாக இருந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான். அண்ணா அவர்கள் 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன்' என்று சொன்னார்கள். அவர்கள் இந்தத் தத்துவத்தை நாட்டு மக்களுக்காகச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகளை கொள்கையாக ஏற்றுக்கொண்டிருப்பவர் இங்கே ஆட்சியில் இருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள். பேரறிஞர் அண்ணாவின் கொள்கையின் அடிப்படையிலேதான், ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன் என்ற தத்துவத்தின் அடிப்படையிலேதான் இலவச மின்சாரத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

25 ரூபாய் கட்டினால்தான் சாதாரண ஏழையின் இல்லத்தில் மின்சாரம் எரியும். ஆனால் அந்த 25 ரூபாய் அல்ல, 250 ரூபாய் அல்ல, 150 ரூபாய் அல்ல, 10 ரூபாய் கூட அல்ல, இலவசமாக மின்சாரம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள். இது அண்ணாவின் கொள்கை இல்லையா?

அதோடு விட்டுவிடவில்லை. ஏழைகளுக்காக, ஏழை கைத்தறி நெசவாளர்களுக்காக கடைசி வரையில் வாதாடியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த கைத்தறி தொழிலாளர்கள் வாழ்க்கை மலர வேண்டும் என்பதற்காக இந்த ஆளுநர் உரையிலே இலவச வீடு கட்டித் தருகிற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கொள்கையே இல்லை என்று சொல்லிய மாண்புமிகு உறுப்பினர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் ஆட்சி புரிந்த காலத்திலே மக்களைப் பற்றி புரியாமல் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் என்ன செய்தீர்கள்? இப்போது ஏழை விவசாயிகளுக்காக கண்ணீர் வடிக்கிறீர்கள். உங்கள் காலத்தில்

(கூடலூர் திரு. இ. வி. வேலு) [1985 மார்ச் 14

செய்ததை எண்ணிப்பாருங்கள். மின்சாரக் கட்டணம் 14 பைசாவாக இருந்ததை 16 பைசாவாக உயர்த்தியதற்காக கோவை மாவட்டத்திலே ஏழை விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்பதற்காக அங்கே 16 விவசாயிகளுடைய நெஞ்சிலே துப்பாக்கி முனையை வைத்து அவர்களுடைய இரத்தத்தை சுவைத்துப் பார்க்கவில்லையா? அந்த இரத்தத்தைச் சுவைத்தீர்கள்; விவசாயிகளுடைய இரத்தத்தைக் குடித்தீர்கள். இப்போது அவர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கிறீர்கள். இப்படிப்பட்ட நீங்கள் ஏதோ எதிர்க்கட்சி என்பதற்காக எதை எடுத்தாலும் எதிர்க்க வேண்டும் என்பதற்காக இப்படிச் சொல்கிறீர்களே தவிர இருக்கின்ற நிலைமையை எடுத்துச்சொல்ல நீங்கள் தயாராக இல்லை. ஆனால் புரட்சித் தலைவர் அப்படிப்பட்டவரா? முதலமைச்சர் ஆவதற்கு முன்னாலே பேரறிஞர் அண்ணா அவர்கள் மீது வைத்திருந்த பண்பின் காரணமாக, பற்றின் காரணமாக தான் கண்ட இயக்கத்திற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்தார்கள். தான் ஏற்படுத்திய பத்திரிகைக்கு 'அண்ணா' என்று பெயர் வைத்தார்கள். நிறுத்திவிட்டாரா? பின்னாலே இருக்கிற

(பிற்பகல் 1.20)

சமுதாயம் நம்முடைய இளைய சமுதாயம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக பல்கலைக் கழகத்திலே அண்ணா ஆய்வு என்ற ஒன்றைத் துவக்கி, அண்ணா தி.மு.க.வின் மூலமாக 25 லட்சம் ரூபாய் பணத்தை ஒதுக்கியவர் புரட்சித் தலைவர் அல்லவா? எனவே அண்ணாவின் வழி நின்று, அண்ணாவின் கொள்கையை வைத்துத் தான் இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார்களே தவிர, கொள்கையற்ற அரசு, இந்த ஆட்சியை நடத்தவில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே ஏழை எளியவர்களைப் பற்றிப் பேசுவதற்கு, மாற்றுக் கட்சித் தோழர்களுக்கு தகுதியில்லை என்பது தான் என்னுடைய அழுத்தமான வேண்டுகோள். ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் எல்லாம் விவசாயிகளுக்கு அப்படிச் [illegible] ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் என்ன [illegible] தெரியுமா? [illegible] தேசிய காங்கிரஸ், இந்திய [illegible] நாராயணசாமி நாயுடு ஆகிய நாட்டு



1985 மார்ச் 14] (கூடலூர் திரு. இ. வி. வேலு)

மொத்தமான விவசாயச் சங்கங்கள் எல்லாம் எடுத்துக் கொள்ளாத முயற்சியை—அந்த விவசாய உயர்மட்டக் குழுவிலே என்ன சொன்னார்கள், 14 பைசா பெரிய விவசாயிகளுக்கும், 12 பைசா சிறிய விவசாயிகளுக்கும் போட வேண்டும் என்று சொன்னார்கள்- புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்தார்கள். இதுகூட கூடாது என்று சொல்லி, புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் ஏழை விவசாயிகளுக்கு இலவச மின் திட்டம், நடுத்தர விவசாயிகளுக்கு ஒரு குதிரைத் திறன் மின் ஓட்டத்திற்கு 75 ரூபாய் என்கிற திட்டத்தை, இந்தத் தங்கத் தலைவன் கொண்டு வரவில்லையா? இது உங்களுக்கு கொள்கையாக புரியவில்லையா? ஏன், ஏழை எளியவர்கள், பிற்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதற்காக அவர்கள் பஞ்ச நிவாரணம் பெறுகின்ற நேரத்திலே, பால்வளத் துறையை முடுக்கிவிட்டு, மிக வேக வேகமாக முடுக்கிவிட்டு, சப்சிடி கொடுக்கப்பட்டு, கிராமங்கள் தோறும் ஏழை எளியவர்கள் வயிற்றிலே பாலை வார்க்க வேண்டும் என்ற உணர்வோடுதான் புரட்சித் தலைவர் ஆட்சியிலே அன்றைக்கு கறவை மாடு வாங்கிக் கொடுத்தார்கள்.

ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில், இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதியார் கற்பனையாகத்தான் பாடினார். ஆனால் எங்கள் தலைவன், இன்றைய பாரதி, புரட்சித் தலைவர் பாரதி, தனி மனிதன் இல்லை, ஒரு குழந்தை கூட வயிறார சாப்பிட வேண்டும். அது பசியாக இருக்கக் கூடாது என்ற உணர்வோடு, அந்தத் தங்கத் தலைவன் இன்றைக்கு 80 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு தந்திருக்கிறார்கள் என்று சொன்னால்; அது உங்களுக்குக் கொள்கையாகத் தெரியவில்லையா? இந்த கவர்னர் உரையிலே, மகாகவி பாரதி பாடியதைத் தாண்டி, ஒரு படி மேலே போய், ஒன்றாவது வகுப்பிலிருந்து 8-வது வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு சீருடை கொடுக்கிறோம் என்று சொல்லி, அந்தத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்த இருக்கிறோம் என்று சொன்னது உங்களுக்கு கொள்கையாகத் தெரியவில்லையா? இவைகள் எல்லாம் உங்களுக்குக் கொள்கைகளாகத் தெரியாது.

ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நேற்றையதினம் நம்முடைய மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ இலங்கைப் பிரச்சனைக்கு எங்களுடைய கலைஞர் அவர்கள் தான் பதவியைத் தியாகம் செய்தார்கள், நீங்கள் எல்லாம் பாராட்டக் கூடாதா? என்றெல்லாம் இங்கே கூக்குரலிட்டார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். இலங்கைப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் முதலில் துரோகம் செய்தவர்கள் நீங்கள்தான். அப்போது நீங்கள்தான் ஆட்சியிலே இருந்தீர்கள்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடக்கிறது. அந்த நேரத்திலே என்ன நடந்தது? அங்கு 13 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அந்த 13 தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்குப் பின்பு (குறுக்கீடு) இலங்கையிலேயிருந்து அன்றைய பிரதமர் அவர்கள் புறப்பட்டு டெல்லிக்கு வருகிறார்கள். அந்த நேரத்திலே நம்முடைய மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு மாலையை எடுத்துக் கொண்டு போகிறார்கள். அன்றைக்கு அமைச்சராக இருந்த நம்முடைய நாவலர் அவர்கள், அன்றைக்கு அமைச்சராக இருந்த எங்களுடைய கழகத்தின் இன்றைய பொதுச் செயலாளர் ப.உ.ச. அவர்கள், அப்போது சட்ட அமைச்சராக இருந்த மாதவன் அவர்கள் போக வேண்டாம் என்று சொல்கிறார்கள். போடியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஒரு ஒழுங்குப் பிரச்சனையைக் கொண்டு வந்தார்கள். அவைகளை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, என்ன தமிழன், சுண்டைக்காய் தமிழன், அவன் என்ன எனக்கு, உலகத் தமிழ் மாநாட்டுக்கு எனக்கு அழைப்பு அனுப்பவில்லை, நான் போவேன் என்று ஆளுநர் மாலையை எடுத்துக் கொண்டு மீனம்பாக்கம் ஏரோட்ரோமிற்குச் சென்று பண்டார நாயகாவிற்கு போட்டு, அழகு . . . . . . (மணியடிக்கப் பெற்றது).

* திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே என்னுடைய கன்னிப் பேச்சை தொடங்குவதற்கு முன்னதாக, சட்டமன்ற உறுப்பினர் என்ற தகுதியை எனக்கு அளித்த சத்தியமங்கலம் தொகுதி மக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு நான்

வேட்பாளராக நின்ற இயக்கத்தின் தலைவி அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும், இளைஞர்களின் விடிவிளக்காகத் திகழும், இளைய தலைமுறையின் இளைய தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பிரச்சாரக் குழு தலைவரான ஆருயிர் அண்ணன் சிவாஜி அவர்களுக்கும், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பேரவையிலே கடந்த 3 நாட்களாக பேசிய மாற்றுக் கட்சி நண்பர்களெல்லாம், காங்கிரஸ் இயக்கமும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் பெற்ற இந்த மாபெரும் வெற்றியை குறித்து மிகக் கொச்சையாக, அனுதாப அலைதான் காரணம் என்று கூறினார்கள். எத்தனையோ தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன. ஒவ்வொரு தேர்தலும் நடைபெறுவதற்கு முன்பாக எத்தனையோ அரசியல் தலைவர்கள் இறந்திருக்கிறார்கள். எத்தனையோ தலைவர்கள் நோய்வாய்ப் பட்டிருக்கிறார்கள். இருந்தாலும் கூட இந்த முறை எங்கள் இயக்கத்தினுடைய தலைவி அன்னை இந்திரா காந்தி அவர்கள், பிரிவினைவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையிலே படுக்கையிலே இருந்ததற்கும் மட்டும் மக்களிடையே இவ்வளவு பெரிய பதைபதைப்பு எதற்காக? இவ்வளவு பெரிய சோகம் எதற்காக என்பதை மாற்றுக் கட்சி நண்பர்கள், மன்னிக்கவும்—மாண்புமிகு மாற்றுக் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அருமை அன்னை இந்திரா காந்தி அவர்கள் லால்பகதூர் சாஸ்திரி மறைவுக்கு பின்பாக, இந்த நாட்டினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்ற பிறகு, இந்த நாட்டிலே இருக்கிற முதியோர்கள், அனுபவம் வாய்ந்த தலைவர் எல்லாம், யார் இந்தப் பெண். இந்த நோஞ்சான் பெண்ணுக்கு என்ன தகுதி இருக்கிறது, நேருவின் மகள் என்ற ஒரே தகுதியை தவிர என்று எள்ளி நகையாடினார்கள். எள்ளி நகையாடிய அந்தத் தலைவர்கள் எல்லாம் வியக்கிற வகையில் அருமை தலைவி இந்திரா காந்தி அவர்கள் தன்னுடைய இறுதி நாள் வரை இந்திய திருநாட்டின் மதிப்பைக் காத்து, எந்த அன்னிய

நாடும் இந்த நாட்டை அருப்பாக எண்ணிவிட முடியாது என்று நிரூபித்து, எந்த பெரிய வல்லரசுகளும் எங்களை கொத்தடிமையாக்கிவிட முடியாது என்று உணர்த்திய பெருமை அன்னை இந்திரா காந்தி அம்மையாருக்கே உரியது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்லாமல் உலக நாடுகளின் மத்தியிலே இந்தியாவின் புகழை உச்சிக்கே கொண்டு சென்று காட்டிய பெருமையும் அன்னை இந்திரா காந்திக்கே உரியது என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தன்னுடைய விவேகத்தாலும், வீரத்தாலும், நிர்வாகத் திறமையாலும் இவைகளை நிரூபித்துக் காட்டி, இந்த 75 கோடி மக்களுக்கும் காவல் நாயகியாக நின்றதை இந்த நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை என்பதற்கு அடையாளம் தான் இந்த மாபெரும் வெற்றி என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அருமை தலைவிக்கு காட்டிய மரியாதையாக மட்டுமல்லாமல் அவர்கள் கொண்டிருந்த கொள்கைகளும் அவர்கள் செயல்படுத்திய திட்டங்களும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றுதான் அவருடைய புதல்வன் ராஜீவ் காந்திக்கு அவர்கள் வாக்களித்தார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நடிகன் நாடாள்வதா, அரிதாரம் பூசியவன் அரியணை ஏறுவதா என்றெல்லாம் கேலி பேசியவர்களுக்கு, அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போலவும், துடித்த உதடுகளுக்கு வாய்ப் பூட்டு போடுவது போலவும் வாக்களித்திருக்கிறார்கள். ஏழை எளியவர்களின் அடிப்படைத் தேவையானது உணவு என்பதை அறிந்து 'கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது' என்ற தமிழ் மூதாட்டியின் வாசகத்தை உணர்ந்து, 'இந்தத் தலைமுறை குழந்தைகள் பட்டினி என்றால் என்ன என்பதை அறியாமல் இருந்துவிட வேண்டும்' என்ற நல்ல எண்ணத்தோடு சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்த எம்.ஜி.ஆர். அவர்களின் சாதனைகளின் தொகுப்புக்குத் தான் இந்த மாபெரும் வெற்றி என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மற்றொன்றை நான் இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சார்ந்த அருமை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 1971 ஆம் ஆண்டு நடந்து முடிந்த 5-வது பொதுத் தேர்தலில் காங்கிரஸ் பேரியக்கமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கூட்டணி





அமைத்து போட்டியிட்டது. அந்த தேர்தலிலே தி.மு.க. ஏறத்தாழ 183 இடங்களை பெற்று, இந்த அவையிலே இதுவரையில் யாரும் பெறாத ஒரு பெரும்பான்மையை கொண்ட வெற்றியைப் பெற்றது.

(பிற்பகல் 1.30)

அந்த 1971-ல் கிடைத்த மாபெரும் வெற்றிக்கு காரணம் என்ன என்பதை ஆராயும்போது அது அனுதாபத்தினாலா என்றால், கண்டிப்பாக இல்லை. ஏனென்றால் அப்போது யாரும் குண்டுகளால் மடியவில்லை, எந்த தலைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவும் இல்லை. அந்த தேர்தல் வெற்றிக்கு காரணம் என்ன என்பதை அந்த கழகத்தின் தலைவர் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப் பெறுகிறது.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** மரியாதைக்குரிய மேலவை உறுப்பினர் கருணாநிதி அவர்கள் அந்த வெற்றிக்கு காரணமாக கூறியது என்னவென்றால், அருமைத் தலைவி இந்திரா காந்தி அம்மையாரின் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட திட்டமும், மன்னர் மானிய ஒழிப்பு திட்டமும் மற்றும் பிற முனைப்பான திட்டங்களும், அதனுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நான்காண்டு கால சாதனைகளும் தான் என்றார். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுடன் சேர்ந்து அவர்களை நீங்கள் பெற்ற வெற்றி சாதனையால் பெற்ற வெற்றி, ஆனால் நாங்களும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து பெற்ற வெற்றி அனுதாப அலை என்று சொல்வது எப்படி பொருத்தமாகும் என்பதை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அருமைத் தலைவி இந்திரா காந்தி அவர்களுடைய பெயரை சொல்லும்போதே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை சொல்லும்போதே இவ்வளவு பெரிய வெற்றி என்றால், அன்னை இந்திரா காந்தி அவர்கள் உயிரோடு இருந்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலத்தோடு இருந்து இருவரும் ஒன்று சேர்ந்து, தமிழக

(திரு. சு. வே. இ. ச. இளங்கோவன்) 1985 மார்ச் 14

மக்களை நேரடியாக சந்தித்து இந்த தேர்தலிலே வாக்குகளை கேட்டிருப்பார்களேயானால் கண்டிப்பாக அவர்களுக்கு இங்கே 22 இடங்களும் கிடைத்திருக்காது. இரண்டு இருக்காது, கடைசி யிலே ஒன்றும் கிடைத்திருக்காது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். (கரவொலி)

இங்கே ஜனதா கட்சியினைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது இந்த வெற்றிக்கு சினிமாவும், விடியோவும் காரணம் என்பது போல் பேசினார். நான் அவருக்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். சினிமாவும், விடியோவும் காட்ட வேண்டாம் என்று உங்களை யாரும் தடுக்கவில்லை. ஆனால் சினிமாவிலோ, விடியோவிலோ யார் முகத்தை காட்டப் போகிறீர்கள் என்பது தான் கேள்வி. மக்களுடைய தாயகியாக விற்று இருந்த அருமைத் தலைவி இந்திரா காந்தி அவர்களின் முகத்தையும், புரட்சித் தலைவர் அவர்களின் முகத்தையும் காட்டியதால் தான் மக்கள் ஓட்டளித்தார்கள் என்பதை உணர்ந்து, உங்களது தலைவர்களின் முகங்களை காட்ட முடியாததால் அந்த விடியோவும் வேண்டாம், சினிமாவும் வேண்டாம் என்று பேசாமல் இருந்துவிட்டார்கள் என்ற உண்மை எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

ஆளுநர் உரையில் இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி குறிப்பிட்டு இருப்பதை இங்கே பேசிய மாற்றுக் கட்சி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் வேண்டுகோளாக ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இலங்கையிலே தமிழர்கள் படுகின்ற அவதிகள் என்பது ஒட்டுமொத்தமாக இந்திய நாட்டிலே இருக்கின்ற அனைவருக்கும் ஒரு வருத்தத்தைக் கொடுக்கின்ற மிகப் பெரிய துக்ககரமான நிகழ்ச்சி என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இந்த இலங்கைவாழ் தமிழர்களுடைய துயரங்களை நீக்கவும், அவர்களுடைய வாழ்வு நல்வாழ்வுக்காக அமைவதற்கும், மத்திய அரசும், மாநில அரசும் நல்ல பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றன. அந்த நடவடிக்கைகள் விறுவிறுப்பாக நடைபெறுகின்ற நேரத்தில் அதிக நேரம் இல்லை என்பதை கூறிக்கொள்கிறேன். இலங்கைப் பிரச்சனையை நாம் சுமுகமாகவும், அந்த மக்கள் எந்த விதத்திலும் துன்பப்படாமலும் தீர்க்க வேண்டும் என்ற



1985 மார்ச் 14] (திரு. சு. வே. இ. ச. இளங்கோவன்)

பொறுப்புணர்ச்சியோடு பேச வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். அதை விட்டுவிட்டு தங்களுக்கு பேசுவதற்கு கொள்கைகள் எதுவும் இல்லை, முழுக்க முழுக்க மக்களால் நிராகரிக்கப்பட்ட நமக்கு, மக்களை நம் பால் இழுப்பதற்கும் மக்களை திசை திருப்புவதற்கும் இலங்கை தமிழர் பிரச்சனையைத் தவிர வேறு வழியில்லை என்று பொறுப்புணர்ச்சி இல்லாமல் தயவு செய்து பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் தேர்தல் காலத்திலே கூட இந்தப் பிரச்சனையை மக்கள் முன்பு மாற்றுக் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் வைத்தார்கள். அந்த நோக்கிலே பொது மக்கள் இந்த இலங்கை பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஆற்றலும், பேரறிவும் பெற்ற ராஜீவ் காந்தியும், புரட்சித் தலைவரும் இருக்கிறார்கள் என்ற முடிவிற்கு வந்து அவர்கள் ஆண்மையும், தங்களுடைய பேராதரவை எங்களுக்குத் தந்திருக்கிறார்கள் என்பதை தயவு செய்து மறந்துவிடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும், மாநகராட்சி, நகராட்சி தேர்தல்கள் நடத்த வேண்டியதன் அவசியத்தை மிகவும் தெளிவாக எடுத்து கூறியிருக்கிறார்கள். என்னைப் பொருத்தவரையில் தேர்தலிலே வெற்றி பெற்ற பிறகு தொகுதி மக்களையெல்லாம் சந்தித்து அவர்களுக்கு நன்றி கூறுகின்ற வேளையிலே, பெரும்பான்மையான மக்கள் பெரும் குறைகளாக கூறியதெல்லாம் குடிநீர் பிரச்சனையைத் தான். குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்கு ஏற்கனவே அறுபட்டுமல்ல. ஆரசால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களிலே உள்ள குறைகளினால் எப்படி அந்த மக்களுக்கு குடிநீர் சரிவர வினியோகம் செய்யப்படவில்லை என்றும், தெரு விளக்குகள் இல்லாத இருள் சூழ்ந்த நிலையைப் பற்றியும், சாலைகள் சரியாக செம்மையாக இல்லாததன் நிலை பற்றியும் எடுத்து கூறினார்கள். இந்தப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு என்று அல்ல. இந்தப் பிரச்சனைகளை மக்களிடமிருந்து கேட்பதற்கே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த ஐந்தாண்டு காலம் போதாது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மற்றொன்று — இந்தப் பேரவையின் மூலமாக தமிழக அரசை [illegible] பணிவோடு [illegible] கேட்டுக்கொள்வதெல்லாம்,

(திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்) [1985 மார்ச் 14

தயவு செய்து நகராட்சி, பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்திட வேண்டுகிறேன். அப்போதுதான் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள், எங்களுடைய தொகுதியிலே, 'கன்ஸ்ட்ரக்டிவ் ஸ்கீம்ஸ்'-ல் நிலையான, உருப்படியான, நல்ல பல காரியங்களைச் செய்வதற்கு, எங்களுக்கு, காலமும், நேரமும் இருக்குமென்று கூறிக்கொண்டு, உடனடியாக அதை நடத்திட வேண்டுமென்று, என் சார்பாகவும், நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, எனது தொகுதியிலே நல்ல பல திட்டங்களை அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் குறிப்பாக, பெரும்பள்ளம் திட்டம், வரட்டுப்பள்ளம் திட்டம், புளியங்கொட்டைத் திட்டம், கோம்பு பள்ளம் திட்டம், புதுப்பீர்கடவு திட்டம், பலஹல்லாத் திட்டம், தொட்டஉல்லாத் திட்டம், மெட்டல்வாடி திட்டம், கணக்கம்பாளையம் திட்டம் என்ற இந்த 9 திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் எதற்காகப் பரிசீலனையில் இருக்கிறது என்றால், எனது தொகுதி வடக்கு பகுதிகள் மேற்கு மலைத் தொடர்ச்சியால் சூழப்பட்ட தொகுதி. அந்த மலைப் பகுதியில் பெய்கின்ற மழையின் தண்ணீர் வீணாக பவானி ஆற்றில் சென்று கலந்து பயனில்லாத நிலையில் இருக்கிறது. அந்த நிலையைமாற்றி, குறிப்பிட்ட அந்தத் திட்டங்கள் நிறைவேறினால், எப்படி தஞ்சை மாவட்டம் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக இருக்கிறதோ, அதுபோல பெரியார் மாவட்டம் ஒரு நெற்களஞ்சியமாக அமைகின்ற வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்

பெரிய தொழிற்சாலை இல்லாத எங்களுடைய தொகுதியில், பண்ணாரியம்மன் சுகர்ஸ் என்ற ஆலையின் உற்பத்திக்கும் மேம்பாட்டிற்கும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் வந்து போகின்றன. அங்குள்ள சாலைகள் செப்பனிடப்பட வேண்டும். குறிப்பாக சத்தியமங்கலத்திலிருந்து கொடிவேரி வரை, அந்த 2 கிலோமீட்டர் வரை உள்ள நெடுஞ்சாலையை நல்ல முறையிலே செம்மையாக அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, காலம் முடிந்து விட்டதால், இன்னும் பல சொல்ல வேண்டுமென்றாலும், அவற்றைப் பற்றி பிறகு அரசிடம் சொல்லிக் கொள்கிறேன் என்று கூறி, நன்றிகூறி, விடை பெறுகிறேன்.



1985 மார்ச் 14] (திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (15—3—1985) காலை 9.30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.37 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

85. இருளர் பாம்பு பிடிப்போர்கள் தொழிற் கூட்டுறவு சங்கத்தினால் விற்கப்படும் பாம்பு நஞ்சிற்கு விதிக்கப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 25—9—1984-ஆம் நாளிட்ட 1070 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

86. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 22—9—1984 ஆம் நாளிட்ட 2168 ஆம் எண் அரசாணையில் வெளியிட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

87. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களை தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் நிதி அலுவலராக நியமிப்பது குறித்து கல்வித்துறையின் 1—5—1984 ஆம் நாளிட்ட 224 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

88. டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியன், அவர்களை தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக மறு நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 22—9—1984 ஆம் நாளிட்ட 1257 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை

[1985 மார்ச் 14

[தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 19 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

89. பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமிப்பது குறித்து கல்வி, அறிவியல்–தொழில் நுட்பவியல் துறையின் 9—2—1984 ஆம் நாளிட்ட எண். 6021/ N.V. 2/84-2 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

90. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

## (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

136366
D
V211,31 N85
N85.2.2